التاميلية

# இதுதான் தவ்ஹீத்


அரபு மூலம் :

கலாநிதி ஸாலிஹ் பின் பவ்ஸான் அல் பவ்ஸான்

தமிழ் வடிவம்
எம். எல் முபாரக் ஸலபி


# كتاب التوحيد


تأليف : فضيلة الشيخ / صالح بن فوزان الفوزان

ترجمه
الشيخ / مبارك بن مسعود لبي (السلفي)




طبع على نفقة فاعل خير
غفر الله له ولوالديه ولذريته


مكتب الدعوة بالروضة

المكتب التعاوني للدعوة بالروضة

هاتف : ٢٤٩٢٧٢٧ فاكس : ٢٤٠١١٧٥

# இதுதான் தவ்ஹீத்

அரபு மூலம் :

கலாநிதி ஸாலிஹ் பின் பவ்ஸான் அல் பவ்ஸான்

தமிழ் வடிவம்
எம். எல் முபாரக் ஸலபி


மேலதிக விபரங்களுக்கு
0532185927
தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்
மாலை 5 : 00 மணி முதல் 8 : 00 வரை

لمزيد من المعلومات
اتصل على الجوال : ٠٥٣٢١٨٥٩٢٧
من الساعة الخامسة مساء إلى الساعة الثامنة مساء

ⓗ المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالروضة ، ١٤٣١هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

الفوزان ، صالح بن فوزان

كتاب التوحيد - تاميلي / صالح بن فوزان الفوزان ؛ محمد مطيع الإسلام - الرياض: ١٤٣١ هـ

٢١٢ ص ؛ ١٢ × ١٧ سم

ردمك : ٩-٧-٩٠٠٢٠-٦٠٣-٩٧٨

١- التوحيد　　أ- الإسلام ، محمد مطيع (مترجم)

ب-العنوان

ديوي ٢٤٠　　١٤٣١/٢١١٧

رقم الايـداع: ١٤٣١/٢١١٧

ردمك: ٩-٧-٩٠٠٢٠-٦٠٣-٩٧٨

بسم الله الرحمن الرحيم

# மூல நூலாசிரியரின் முன்னுரை

எல்லாப் புகழும் வல்லோன் அல்லாஹ்வுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் உண்மை நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

இது தவ்ஹீத் கோட்பாடு பற்றி பேசும் ஒரு நூலாகும். இதிலே நான் சுருக்கமாகவும், எளிய நடையிலும் விபரங்களைத் தந்துள்ளேன். இந்நூலை ஆக்க கண்ணிய த்திற்குரிய இமாம்களது நூற்கள் துணை நின்றன. குறிப்பாக, ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா, அல்லாமா இப்னுல் கைய்யிம், ஷெய்குல் இஸ்லாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் போன்றோரது நூற்களைக் குறிப்பிடலாம்,

நமது அமல்கள் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் இஸ்லாமிய அகீதாவைக் கற்று பிறருக்கும் அதனைக் கற்பித்து அதன்படி அமல் செய்வது அவசியமாகின்றது.

நாஸ்தீகம், சூபித்துவம், துறவறம், கப்ரு வணக்கம், பித்அத் மோகம் போன்ற வழிகெட்ட சித்தாந்தங்களும், கொள்கைகளும் மேலோங்கி இருக்கும் இக்காலத்தில்

இஸ்லாமிய அகீதாவைக் கசடறக் கற்பது இன்றியமையாதது. ஏனெனில், ஒரு முஸ்லிம் அல்குர்ஆன், அஸ்சுன்னா அடிப்படையில் ஸலபுஸ் ஸாலிஹீன்கள் காட்டித் தந்த அகீதாவை தனது ஆயுதமாகக் கொள்ளாதவரை வழிகேட்டில் இருந்து தப்புவது சாத்தியமற்றது. இதுவே, இஸ்லாமிய அகீதாவை முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களிலிருந்து போதிக்கத் தூண்டிய காரணியாகும்.

*ஆசிரியர்*

# மொழிபெயர்த்தோனுரை

எல்லாப்புகழும் வல்லோன் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக!

அத்திவாரமின்றி கட்டிடம் எழாது; ஆணிவேரின்றி மரம் நில்லாது; அகீதா எனும் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடின்றி இஸ்லாம் இல்லை. இருந்தும், முஸ்லிம்கள் பலர் அகீதா பற்றிய அடிப்படையான அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறிவிட்டனர். இதனால் தமிழுலகிற்கு அகீதா பற்றிய தெளிவை வழங்குவது தவிர்க்க முடியாத, தவிர்க்கக் கூடாத முக்கிய கடமையாகவே மாறிவிட்டது எனலாம்.

இவ்வகையில் அறபுலகறிந்த மார்க்க அறிஞர் ஸாலிஹ் பின் பவ்ஸான் அல்பவ்ஸான் அவர்களின் "கிதாபுத் தவ்ஹீத்" எனும் நூலை தமிழுலகிற்கு வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

அகீதாவைப் பல்வேறு கோணங்களில் அணுகி, ஆராய்ந்து தெளிவுபடுத்திய மூல நூலசிரியர் கலாநிதி ஸாலிஹ் பின் பவ்ஸான் அல்பவ்ஸான் அவர்களுக்கு அல்லாஹ் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலை வெளியிடும் ஜம்இய்யாவிற்கும், அதன் பொதுத்தலைவர் அஷ்ஷெய்க் என். பீ. முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி அவர்களுக்கும், ஆலோசனைகள் பல வழங்கி ஒத்துழைப்பு நல்கிய ஜம்இய்யாவின் கௌரவ செயலாளர் ஏ. எல். கலீலுர்ரஹ்மான் M.A. அவர்களுக்கும், நண்பர்களான அஷ்ஷெய்க் எஸ். எச். எம். இஸ்மாயீல் ஸலபி, எஸ். எஸ். ரமழான் ஸலபி, என் அன்புத் துணைவி அனைவருக்கும் இவ்விடத்தில் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலாக்கப்பணியில் இது எனது கன்னி முயற்சியாகும். முடிந்தவரை தமிழுலகிற்கு ஏற்ற விதத்தில், அறபு மூலத்திற்கு முரண்படாதவகையில் நூலைத் தமிழாக்கம் செய்ய முயற்சித்துள்ளேன். குறைகள் சுட்டிக்காட்டப் பட்டால் திருப்தியுடன் ஏற்றுக்கொள்வேன்.

எனது இந்த முயற்சியை அல்லாஹுத்தஆலா அங்கீகரித்து இந்நூல் மூலம் நல்ல பயனை நல்கவேண்டும் எனப்பிரார்த்திக்கிறேன்.

*இவன்*

**எம். எல். முபாரக்**

118, எஸ். எம். வீதி,
மருதமுனை.
01-05-2000.

இயல்

I

# மனித வாழ்வில் நெறி பிறழ்வும் குப்ர், ஷிர்க், நிபாக் பற்றிய குறிப்புக்களும்

***இப்பகுதி உள்ளடக்கும் விடயங்கள்:***

1. மனித வாழ்வில் நெறி பிறழ்வு
2. ஷிர்க்கும் அதன் வகைகளும்
3. குப்ரும் அதன் வகைகளும்
4. நிபாக்கும் அதன் வகைகளும்
5. ஜாஹிலிய்யத் (அறியாமை), பிஸ்க் (பாவம்), ழலால் (வழிகேடு), ரித்தத் (மதமாற்றம்) பற்றிய விளக்கக் குறிப்புக்கள்

# மனித வாழ்வில் நெறிபிறழ்வு

அல்லாஹு"தஆலா மனிதனை தன்னை வணங்கு வதற்காகப் படைத்து அதற்குரிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தான்.

“இன்னும் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்க வில்லை. அவர்களிடத்தில் (என் படைப்புகளுக்கா) யாதொரு உணவையும் நான் நாடவில்லை. அன்றியும் அவர்கள் உணவளிக்க வேண்டுமென்றும் நான் விரும் பவில்லை.” (51:56,57)

ஆன்மாக்கள் இயல்பிலே இறைவனை ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகவும் அவனுக்கு எதையும் இணைவைக்காத னவாகவுமே படைக்கப்பட்டுள்ளன. எனினும் மனித, ஜின், ஷைத்தான்கள் அவற்றை வழிகெடுப்பதன் விளைவாகவே ஷிர்க் ஏற்படுகின்றது.

“ஆகவே நீர் உமது முகத்தைத் தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதனைப் படைத்தானோ அத்தகைய இயற்கை மார்க்க(மாகிய இஸ்லா)த்தை (பற்றிப்பிடித்து நிலைத்திருப்பீராக!)

அல்லாஹ்வின் படைத்தலில் எவ்வித மாற்றமும் இல்லை."
(30:30)

"எல்லாக் குழந்தைகளும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் (பித்ரா) இயல்புடனே பிறக்கின்றன. அதன் பெற்றோர்களே அவர்களை யூதர்களாகவோ, கிரிஸ்த்தவர்களாகவோ அல்லது அக்கினி ஆராதனைக் காரர்களாகவோ மாற்றுகின்றனர்" என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரழி)
ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

எனவே மனித இனத்தின் அடிப்படை தவ்ஹீத் ஆகும். 'தீன்' என்ற பதம் ஆதம் (அலை) காலம் தொட்டு அவர்களது பரம்பரையினர் பின்பற்றி வருகின்ற இஸ்லாமிய மார்க்கத்தையே குறிக்கின்றது.

"(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாரார்யம் கூறுவோராகவும், (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பிவைத்தான்."
(2:213)

முதன் முதலில் இணைவைத்தலும், அகீதாவில் பிறழ்வும் ஏற்பட்டது நபி நூஹ் (அலை) அவர்களது சமூகத்தி லேயாகும். எனவேதான், நபி நூஹ் (அலை) அவர்கள்

முதலாவது தூதராக (ரசூலாக) அனுப்பப்பட்டார்கள்.

"நபியே! நூஹுக்கும், அவருக்குப் பின் வந்த (இதர) நபிமார்களுக்கும் நாம் வஹி அறிவித்ததுபோலவே உமக்கும் நிச்சயமாக வஹி அறிவித்தோம்" (4:163)

"ஆதம் (அலை) அவர்களுக்கும் நூஹ் (அலை) அவர்களுக்கும் இடைப்பட்ட காலம் 10 நூற்றாண்டுகளாகும். அக்கால இடைவெளியில் வாழ்ந்த எல்லோரும் இஸ்லாத்திலேயே இருந்தனர்" என இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள். இக்கூற்று மிகச் சரியானது என்று இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (இகாததுல் லஹ்பான் 2/102)

இதற்கு ஆதாரமாக உபையிப்னு க.்.ப்(ரழி) அவர்கள் (2:213) வசனங்களை ஓதிக்காட்டிய முறையைக் குறிப்பிடுகிறார்கள்.

அவர்கள்: "(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர்" என்பதைத் தொடர்ந்து "அவர்கள் கருத்து வேறுபாடுபட்டார்கள்" என்பதைச் சேர்த்து ஓதிக் காட்டினார்கள்.

இந்தக் கிராஅத்திற்கு பின்வரும் வசனம் ஆதாரமாக இருக்கின்றது "மனிதர்கள் யாவரும் (ஆதியிலே) ஒரே இனத்தவராகவேயன்றி வேறில்லை." (10:19)

இதன் மூலம் இமாம் அவர்கள் நாடுவது என்னவெனில், நபிமார்கள் வருகைக்குக் காரணம் சத்திய மார்க்கத்தில் மக்கள் கருத்துவேறுபாடு கொண்டதுதான். இது எதைப் போன்றதெனில் அரபிகள் இப்றாஹீம் (அலை) அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்திலே நிலைத்திருக்கையில் அம்ரு பின் லுஹை என்பவன் அரபிகளிடத்தில் சிலை வணக்கத்தை அறிமுகப்படுத்தி அவர்களை வழி கெடுத்தான். எனவே, அம்மக்கள் அல்லாஹ் அல்லாத வற்றை வணங்கத் தலைப்பட்டனர். அவ்வேளை முஹம்மத் (ஸல்) அவர்களை இறுதித் தூதராக அனுப்பி அம்மக்களைத் தவ்ஹீதின்பால் அழைப்புவிடுக்கும்படி பணித்தான். அவர்கள் தம் பணியைச் செவ்வேனே செய்து முடித்தார்கள். அத்துடன் இப்றாஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றுமாறும் பணித்தார்கள். சிலைகளை உடைத்தெறிந்தார்கள். அவர்களைக் கொண்டு அல்லாஹ் மார்க்கத்தை சம்பூரணப்படுத்தினான். அவ்வழியிலே சிறப்புக்குரிய மூன்று நூற்றாண்டில் வாழ்ந்த மக்களும் சென்றனர். பின்னால் வந்த நூற்றாண்டுகளில் அறியாமை உருவாகத் தொடங்கியது. மாற்றுமத சித்தாந்தங்கள் ஊடுருவியது. இதன் விளைவாக ஷிர்க் மீண்டும் இந்த உம்மத்தில் தலைதூக்க ஆரம்பித்தது. வழிகேட்டின் அழைப்பாளர்கள் "அவ்லியாக்களைக் கண்ணியப்படுத்தல்" என்ற பெயரில் கப்ருகளைக் கட்டத் துவங்கினார்கள். அவைகள் வணங்கப்பட்டன. அவர்களுக்காக நேர்ச்சை செய்தல், அறுத்துப்பலியிடல் என்பன இடம் பெற்றன.

இணைவைத்தலுக்கு "நல்லடியார்களைக் கொண்டு வஸீலாத் தேடுதல்" என்று பெயரிட்டதோடு நாம் அவர்களைக் கொண்டு அல்லாஹ்விடம் நெருங்குகிறோம் என்று கூறினர். ஏனோ இவர்கள் இதுதான் ஆரம்ப காலத்து இணைவைப்பாளர்கள் எடுத்து வைத்த வாதம் என்பதை உணரத் தவறிவிட்டார்கள்.

"அவர்கள் எங்களை அல்லாஹ்வின் அருகே சமீபமாகக் கொண்டு செல்வார்கள் என்பதற்காகவேயன்றி நாங்கள் அவர்களை வணங்கவில்லை (என்கின்றனர்)." (39:3)

மானிட சமூகத்தில் பெரும்பாலானோர் இப்படி ஷிர்க் செய்தாலும் படைத்து உணவளித்து நிர்வகிப்பவன் அல்லாஹ் மாத்திரம்தான் (தவ்ஹீதுர் ருபூபிய்யா) என்பதை ஏற்றிருந்தனர். அவர்கள் இணைவைத்ததெல்லாம் வணக்கவழிபாடுகளிலேதான். இதனையே அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான். "மேலும் அவர்கள் இணைவைப்பவர்களாக இருக்கின்ற நிலையிலில்லாமல் அவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதில்லை." (12:106)

இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை பிர்அவ்ன், நாஸ்திகர்கள், கம்யூனிஸவாதிகள் போன்ற ஒரு சிலரே மறுக்கின்றனர். அவர்களும்கூட வேண்டுமென்று பெருமைக்காகவே மறுக்கின்றனரேயல்லாமல் இயல்பிலே அவர்களும் கூட இறைவன் ஒருவன் இருக்கின்றான்

என்பதை ஏற்றே இருக்கின்றனர்.

"அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மை யென) உறுதி கொண்ட போதிலும் அநியாயமாகவும் பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள்." (27:14)

சிருஷ்டிகளைப்படைத்த சிருஷ்டிகர்த்தா ஒருவன் இருக்க வேண்டுமென்பதையும் இந்தப் பிரபஞ்சத்தின் திட்டமிட்ட அமைப்பு அதனை ஒழுங்குபடுத்த ஒரு சக்தி இருக்கவேண்டுமென்பதையும் அவர்களுடைய அறிவு ஏற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. இந்த அப்பட்டமான உண்மையை மறுக்கின்றவன் ஒன்றில் புத்திசுவாதீன மற்றவனாக இருக்கவேண்டும் அல்லது தற்பெருமை கொண்டு தன்னையே மறந்த ஒரு அநியாயக்காரனாக த்தான் இருக்கவேண்டும். இவர்களது கூற்றுக்களுக்கு எந்த மதிப்பும் அளிக்க வேண்டியதில்லை.

# ஷிர்க்கும் அதன் வகைகளும்

## 1. *ஷிர்க் என்றால் என்ன?*

ருபூபிய்யத்திலும், வணக்க வழிபாடுகளிலும் அல்லாஹ் விற்கு நிகராக ஒன்றை ஆக்குவதே இணைவைத்தல் ஆகும். பெரும்பாலும் ஷிர்க் அல்லாஹ் அல்லாத வர்களிடம் பிரார்த்தித்தல், அல்லாஹ் அல்லாதவர் களுக்காக அறுத்துப்பலியிடல், நேர்ச்சை செய்தல், அவனல்லாதவர்களிடம் ஆதரவு வைத்தல் போன்ற வணக்க வழிபாடுகளிலேதான் ஏற்படுகின்றது. ஷிர்க் மிகப் பெரிய பாவமாகும். அதனை பின்வரும் விடயங்க ளிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

1. ஷிர்க் என்பது சிருஷ்டிகளை தெய்வீகத்தன்மைகளில் சிருஷ்டி கர்த்தாவுக்கு ஒப்பாக்குவதாகும். எனவே யார் இணைவைக்கிறாரோ அவர் ஒரு படுபாதகச் செயலைச் செய்கிறார்.

   "நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரிய அநியாயமாகும்". (31:13)

   அநியாயம் என்றால் ஒரு பொருளை அல்லது விடயத்தை அதற்கு உரிய இடத்தில் வைக்காமல் வேறு இடங்களில் வைப்பதாகும். அதன்படி அல்லாஹ் அல்லாதோரை வணங்கக்கூடியவன் வணக்கத்தை அதற்குரிய இடத்தில் வைக்காமல் வேறு இடத்தில்

வைக்கிறான். இது மிகப் பெரிய அநியாயமாகும்.

2. ஷிர்க் செய்வோர் "தவ்பா" செய்கின்றவரை அவர்களை மன்னிப்பதில்லையென்று அல்லாஹ் அறிவித்துள்ளான். "நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப் படுவதை மன்னிக்க(வே) மாட்டான். இதனைத் தவிர, (மற்ற) எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான்." (4:48)

3. இணைவைக்கக் கூடியவனுக்கு சுவனத்தை ஹறாமாக்கி இருப்பதாகவும் அவன் நரகில் நிரந்தரமாகத் தங்குவான் என்றும் அல்லாஹ் கூறுகிறான்.
"நிச்சயமாக எவர் அல்லாஹ்விற்கு இணைவைக்கி ன்றாரோ அவர் மீது திட்டமாக அல்லாஹ் சுவனபதியை தடுத்துவிடுகிறான். அவர் தங்குமிடம் நரகம்தான். இன்னும் (இத்தகைய) அநியாயக்காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்வோர் இல்லை." (5:72)

4. ஷிர்க் நல்லறங்களையும் பாழ்படுத்திவிடும் :
"இன்னும் அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணைவைத் திருந்தால் அவர்கள் செய்து கொண்டிருந்த (நன்மை யான)வைகள் (யாவும்) அவர்களைவிட்டு அழிந்துவிடும்." (7:88)
"(நபியே!) "நீர் இணைவைத்தால் நிச்சயமாக உம்முடைய செயல்(கள் யாவும்) அழிந்துவிடும். நிச்சயமாக நீர் நஷ்டமடைபவர்களிலும் ஆகிவிடுவீர்" என உமக்கும் உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் (வஹி) அறிவிக்கப்பட்டது. (39:65)

5. இணைவைப்பவனின் இரத்தத்தை ஓட்டுவதும்

அவனுடைய சொத்துக்களை அபகரிப்பதும் ஆகுமானதாகும்.

"முஷ்ரிக்குகளைக் கண்ட இடங்களில் வெட்டுங்கள். அவர்களைப் பிடியுங்கள். அவர்களை முற்றுகை யிடுங்கள். ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களை குறிவைத்து உட்கார்ந்திருங்கள்." (9:5)

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:- "மனிதர்கள் "லா இலாஹ இல்லல்லாஹ்" என்று சொல்லும் வரை அவர்களோடு போராடுமாறு நான் ஏவப்பட்டுள்ளேன். அவர்கள் அக்கலிமாவை மொழிந்தார்களேயானால் தங்களது இரத்தங்களையும், சொத்துக்களையும் என்னிடமிருந்து பாதுகாத்துக் கொண்டனர்." (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

6. இணைவைப்பது மிகப் பெரும் பாவமாகும். "உங்களுக்கு மிகப் பெரும் பாவத்தை அறிவிக் கட்டுமா?" என நபி(ஸல்) அவர்கள் வினவ, ஸஹாபாக்கள் "ஆம் அல்லாஹ்வுடைய தூதரே" என்றனர். நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல், பெற்றோரை நோவினை செய்தல்" என்று குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

அல்லாமா இப்னுல் கைய்யிம்(ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். "அல்லாஹுத்தஆலா சிருஷ்டிகளைப் படைத்திருப்பதன் நோக்கம் அவை அவனது திருநாமங்களையும், பண்புகளையும் அறிந்து

அவனை மட்டுமே வணங்க வேண்டும்; அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது; மேலும் மனிதர்கள் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவேயாகும்.

"நிச்சயமாக நம் தூதர்களை தெளிவான அத்தாட்சி களுடன் அனுப்பினோம். மேலும் மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) தராசையும் இறக்கினோம்." (57:25)

மேற்படிவசனத்தில் அல்லாஹ் தூதர்களை அனுப் பியதும் வேதங்களை அருளியதும் மனிதர்கள் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத்தான் என்பதை அறிவிக்கிறான். நீதியில் உயர்ந்தது தவ்ஹீத் ஆகும். ஷிர்க் அநியாயமாகும்.

"நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும்." (31:13)

ஷிர்க் நீதிக்கு புறம்பானது என்பதனாலேயே அது மிகப்பெரிய பாவமாகக் கருதப்படுகின்றது. அதன் காரணமாகவே இணைவைப்போர் மீது சுவனம் ஹரா மாக்கப்பட்டுள்ளது. அவர்களது இரத்தமும் சொத்துக்களும் ஏகத்துவ வாதிகளுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது. மேலும் முஷ்ரிக்குகளின் எந்தவொரு அமலையோ, அவர்கள் விடயத்தில் செய்யப்படுகின்ற ஷபாஅத்தை (சிபாரிசை) யோ அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில்

முஷ்ரிக் என்பவன் அல்லாஹ்வைப்பற்றி மிகப் பெரிய அறிவிலியாக இருக்கிறான். அதனால்தான் அல்லாஹ்வுக்கு நிகராக அவனது படைப்புக்களை ஆக்கினான். யதார்த்தத்தில் இணைவைப்பவன் அல்லாஹ்வுக்கு அநியாயம் செய்வதில்லை மாறாக தனக்குத் தானே அநியாயம் இழைத்துக் கொள்கிறான்.

("அல்ஜவாபுல் காபி" பக்கம்: 109)

## ஷிர்க்கின் வகைகள்

*ஷிர்க் இரண்டு வகைப்படும்:-*

1. "ஷிர்க் அக்பர்" எனப்படும் பெரிய வகையைச் சார்ந்த இணைவைத்தல். இந்த வகையான இணைவைத்தலில் ஈடுபடக் கூடியவன் மார்க்கத்தை விட்டும் வெளியே போய் விடுகிறான். மேலும் மரணிப்பதற்கு முன் அதிலிருந்து தவ்பா செய்யவில்லையெனில் அவன் நரகில் நிரந்தரமாக நீடூழிகாலம் தங்கி விடுவான்.

வணக்கங்களில் எதையாவது ஒன்றை அல்லாஹ் அல்லாதவருக்குச் செய்வது பெரிய இணையாகும். அல்லாஹ் அல்லாதவர்களை அழைத்தல், அவர்களை நெருங்குவதற்காக அவர்களுக்கு அறுத்துப்பலியிடல், நேர்ச்சை செய்தல், மரணித்தோர் அல்லது ஷைத்தான் தனக்கு ஏதாவது நோய் நொடிகளை உண்டுபண்ணுவான் என்று அஞ்சுதல், அவ்லியாக்களின் கப்ருகளிலே மண்டி இட்டுக்கிடந்து அவர்களை அழைத்தல் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

"தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக்குகள்) வணங்குகிறார்கள். இன்னும் அவர்கள் "இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை" என்றும் கூறுகிறார்கள். (10:18)

2. "ஷிர்க் அஸ்கர்" எனப்படும் சிறிய வகையான இணைவைத்தல்:- இதனைச் செய்கின்ற ஒருவன் மார்க்கத்தை விட்டு வெளியே போகமாட்டான். எனினும், இது அவனுடைய அகீதாவில் களங்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் ஷிர்க் அக்பரிற்கும் இவனை இட்டுச் செல்ல வல்லது. இந்த ஷிர்க் அஸ்கர் இரண்டாகப் பிரிகின்றது.

அவை:

1) வெளிப்படையான ஷிர்க் (ஷிர்க் ளாஹிர்) இது சில சொற்களாலும், செயல்களாலும் இடம்பெறுகின்றது. சொற்களைப் பொறுத்தவரை அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்வதை குறிப்பிடலாம்.

"யார் அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்கிறாரோ அவர் குப்ரை செய்து விட்டார். அல்லது ஷிர்க் செய்து விட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

அதே போல், "அல்லாஹ்வும் நீங்களும் நாடியதால் இக்காரியம் நடந்தது" என்று கூறுவதும் இவ்வகையைச் சார்ந்த இணைவைத்தலே.

ஒரு முறை ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து "நீங்களும் அல்லாஹ்வும் நாடியதால் இக்கருமம் நடந்தது" என்று கூறினார். அதற்கு நபியவர்கள் "என்னை நீர் அல்லாஹ்வுக்கு நிகராகவா ஆக்குகிறீர்? அல்லாஹ் நாடியதால் நடந்தது என்று கூறு" எனக் கூறினார்கள்.

(ஆதாரம்: நஸாஈ)

அல்லாஹ்வையும் இன்னொருவரையும் சேர்த்துச் சொல்வதாக இருந்தால் "அல்லாஹ் நாடினான் பின்னர் நீங்கள் நாடினீர்கள்" என்று கூறி அல்லாஹ்வுடைய நாட்டத்தை தொடர்ந்தே அடியானின் நாட்டம் இடம்பெறும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இதனையே அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

"ஆயினும் அகிலங்களுக்கெல்லாம் இரட்சகனாகிய அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் நாடமாட்டீர்கள்" (82:29)

செயல்களுக்கு உதாரணமாக நோய் நொம் பலங்களைப் போக்க நூல் வளயங்களையும், கண்ணேறு போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப்பெற தாயத்து தட்டு அணிதல் போன்றவைகளையும் குறிப்பிடலாம். இவை நோயை நீக்கும் ஒரு காரணி என்று நம்பினால் அது ஷிர்க் அஸ்கர் (சிறிய வகையான இணைவைத்தல்) ஆகும். மாறாக இவையே நோயை நீக்குகின்றது என்று நம்பினால் அது ஷிர்க் அக்பர் (மார்க்கத்தை விட்டும் வெளியேற்றும் பெரிய வகையான ஷிர்க்காக) ஆகும்.

**மறைமுகமான ஷிர்க் (ஷிர்க் ஹபீ) :**

எண்ணம், எதிர்பார்ப்பு என்பவற்றில் இடம்பெறும். முகஸ்த்துதி, புகழ்ச்சியை விரும்புதல் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஒருவன் அழகாக நீட்டித்தொழுகிறான் அல்லது தர்மம் கொடுக்கிறான் அல்லது அழகாக ராகமிட்டு அல்குர்ஆனை ஓதுகிறான். இவற்றின் மூலம் பிறர் தன்னை மெச்ச வேண்டும், புகழ வேண்டும் எண்ணுவானாயின் அவன் மறைமுகமான ஷிர்க்கில் ஈடுபடுகின்றான் என்பது அர்த்தமாகும். ஒரு அமலோடு முகஸ்த்துதி கலந்து விடுமாயின் அந்த அமல் பாழாகிவிடும்.

"எவன் தன்னுடைய இரட்சகனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கிறானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து தன் ரப்பை வணங்குவதில் வேறொருவரையும் இணையாக்காதும் இருப்பானாக!"(18:110)

"நான் உங்கள் விடயத்தில் பெரிதும் பயப்படுவது ஷிர்க்குல் அஸ்கரையே" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு ஸஹாபாக்கள் "ஷிர்க்குல் அஸ்கர்" என்றால் என்ன? அல்லாஹ்வின் தூதரே! என்று வினவினர். "முகஸ்த்துதி" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (ஆதாரம்: அஹ்மத், தப்ரானீ, பகவியின் ஷரஹுஸ் ஸுன்னா)

உலக இலாபம் கருதி ஒரு அமலைச் செய்வதும் பணத்திற்காக மார்க்கக் கல்வியைக் கற்பதும், ஜிஹாத் செய்வதும் இதன்பாற்பட்டவையாகும்.

“தீனாருக்கு அடிமைப்ட'ட்டவன் அழிந்து போகட்டும், திர்ஹத்திற்கு அடிமைப்பட்டவனும் அழிந்து போகட்டும்.....” (ஆதாரம்: புகாரி) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) கூறுகிறார்கள்:- எண்ணம், நாட்டம் என்பவற்றில் ஏற்படுகின்ற ஷிர்க்கைப் பொறுத்தவரை அது கரையற்ற கடல் போன்றதாகும். அதிலிருந்து தப்புவோர் மிகச் சொற்பமானோரே. ஒருவன் தனது அமல் மூலம் அல்லாஹ் அல்லாதோரின் திருப்தியை எதிர்பார்ப்பவனாக இருந்தால் அல்லது அதன் மூலம் அல்லாஹ்விடம் நெருங்குவதை விட்டு வேறு எவரது பிரதிபலனையும் எதிர்பார்ப்பவனாக இருந்தால் அவன் தனது நிய்யத், நாட்டம் என்பவற்றில் ஷிர்க் செய்து விட்டான்.

இ∴லாஸ் என்பது தனது சொல், செயல், எண்ணம் அனைத்திலும் அல்லாஹ் ஒருவனுக்கே என்ற உளத்தூய்மையைப் பேணுவதாகும். இதுவே இப்றாஹீம் (அலை) அவர்கள் கொண்டு வந்த “ஹனீபிய்யா” என்ற மார்க்கமாகும். இது அல்லாத எதனையும் அல்லாஹ் யாரிடமிருந்தும் ஏற்றுக்கொள்ள மாட்டான். இஸ்லாத்தின் யதார்த்தமும் இதுவே.

“இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒரு போதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில்தான் இருப்பார்.” (3:85)

இதுவே இப்றாஹீம் (அலை) அவர்களின் மார்க்கமாகும். யார் அதனைப் புறக்கணித்து வாழ்கின்றானோ அவன் அறிவிலிகள் பட்டியலில் சேர்ந்து கொள்கிறான்.

(அல்ஜவாபுல் காபி பக்கம்: 115)

**ஷிர்க்குல் அக்பரிற்கும், ஷிர்க்குல் அஸ்கரிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்:**

இருவகையான ஷிர்க்குகளுக்குமிடையிலுள்ள வேறுபாடுகளைப் பின்வருமாறு சுருக்கமாக பிரித்து நோக்கலாம்.

1) ஷிர்க்குல் அக்பர் இதனைச் செய்யக் கூடியவனை மார்க்கத்தை விட்டும் வெளியேற்றும். ஷிர்க்குல் அஸ்கர் மார்க்கத்தை விட்டும் அதனைச் செய்யக்கூடியவனை வெளியேற்றாது.
2) ஷிர்க்குல் அக்பரை செய்யக்கூடியவன் நரகில் நிரந்தரமாக இருப்பான். ஷிர்க்குல் அஸ்கரைச் செய்தவன் நரகம் நுழைந்தால் அதில் நிரந்தரமாக இருக்கமாட்டான்.
3) ஷிர்க்குல் அக்பர் அனைத்து அமல்களையும் பாழ்படுத்திவிடும். ஷிர்க்குல் அஸ்கர் அப்படிப்பட்டதல்ல

மாறாக எந்த அமலோடு முகஸ்த்துதி, உலகலாபம் கலந்திருக்கிறதோ அந்த அமலை மட்டுமே வீணாக்கி விடும்.

4) ஷிர்க்குல் அக்பரைச் செய்கின்றவனின் இரத்தத்தை ஒட்டுவதும் அவனுடைய சொத்துக்களை அபகரிப்பதும் ஆகுமானது. ஷிர்க்குல் அஸ்கர் அவற்றை ஆகுமாக்காது.

# குப்ரும் அதன் வகைகளும்

*குப்ர் என்றால் என்ன?*

அரபுப் பாஷையிலே "குப்ர்" என்ற பதம் மூடுதல், மறைத்தல், என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய பரிபாஷையிலே "குப்ர்" என்பது ஈமானுக்கு எதிர்ப்பதமாகும். எனவே அல்லாஹ்வையும் ரஸூல் மார்களையும் ஈமான் கொள்ளாமல் இருப்பதே "குப்ர்" ஆகும்.

அல்லாஹ்வையும், ரஸூல்மார்களையும் பொய்ப்பித்த நிலையிலும் அல்லது பொய்ப்பிக்காத நிலையிலும் சரி ஈமான் கொள்ளாமல் இருப்பதே குப்ர். ஏன் சந்தேகம், பொறாமை, பெருமை அல்லது மமதை காரணமாக இஸ்லாத்திற்குக் கட்டுப்பட்டு ஈமான் கொள்ள மறுத்தாலும் அது குப்ரேயாகும். (மஜ்மூஉல் பதாவா, ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா 12/335)

**குப்ரின் வகைகள் :**

*குப்ர் இரண்டு வகைப்படும்:-*

1 ) குப்ர் அக்பர் (பெரிய குப்ர்)

இது மார்க்கத்தை விட்டு வெளியேற்றிவிடும். இது ஐந்து பிரிவுகளாகும்.

I. *பொய்ப்பித்து நிராகரிப்பது:*

“அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனை விட அல்லது தன்னிடம் சத்தியம் வந்த போது அதைப் பொய்ப்பித்தவனைவிட அநியாயம் செய்பவன் யார்? (இத்தகைய) காபிர்களுக்கு ஒதுங்குமிடம் நரகத்தில் அல்லவா இருக்கின்றது.” (29:68)

II. *கர்வம், ஆணவம் காரணமாக நிராகரிப்பது:*

“நாம் மலக்குகளை நோக்கி “ஆதமுக்கு பணி(ந்து ஸ"ஜ"து செய்)யுங்கள்.” என்று சொன்ன போது இப்லீசைத்தவிர மற்ற அனைவரும் சிரம் பணிந்தனர். அவன் (இப்லீஸ்) மறுத்தான்; ஆணவமும் கொண்டான்; இன்னும் அவன் காபிர்களைச் சார்ந்தவனாகி விட்டான்.” (2:34)

III. *சந்தேகத்தின் காரணமாக நிராகரிப்பது:*

“(பெருமையினால்) தன் ஆத்மாவுக்கு தீங்கிழைத் தவனாக தன் தோட்டத்திற்குள் நுழைந்தான் அவன் இந்த(த் தோட்டம்) எப்பொழுதாவது அழிந்துவிடும் என்று நான் எண்ணவில்லை! என்றும் கூறிக்கொண்டான். (நியாயத் தீர்ப்புக்குரிய) வேளை ஏற்படும் என்றும் நான் எண்ணவில்லை. (அப்படி ஏதும் நிகழ்ந்து) நான் என் இறைவனிடம் மீண்டும் கொண்டு செல்லப்படுவேனாயின் நிச்சயமாக இங்கிருப்பதைவிட மேலான இடத்தையே நான் காண்பேன்” என்றும் கூறினான். அவனுடைய தோழன் அவனுடன் (இது பற்றித்) தர்க்கித்தவனாக “உன்னை மண்ணிலிருந்தும் பின்பு ஒரு துளி இந்திரியத்திலிருந்தும்

படைத்து பின்பு உன்னைச் சரியான மனிதனாக ஆக்கினானே அவனை நீ நிராகரிக்கின்றாய்?" என்று அவனிடம் கேட்டான். ஆனால் (நான் உறுதி சொல்கிறேன்) அல்லாஹ் அவன்தான் என் இரட்சகனாவான்! என் இரட்சகனுக்கு நான் யாரையும் இணை வைக்கவும் மாட்டேன்." (18:35-38)

IV. *புறக்கணித்து நிராகரிப்பது:*

"நிராகரிப்பாளர்களோ, தங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்டதைப் புறக்கணிப்பவர்களாக இருக்கிறார்கள்." (46:3)

V. *நயவஞ்சகம் காரணமாக நிராகரிப்து:*

"இது நிச்சயமாக இவர்கள் ஈமான் கொண்டு பின் காபிர்களாகி விட்டதனாலேயாகும். ஆகவே இவர்களின் இதயங்கள் மீது முத்திரையிடப்பட்டுவிட்டது. எனவே அவர்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள்." (63:03)

2) ‘குப்ர் அஸ்கர் (சிறிய குப்ர்)

இது மார்க்கத்திலிருந்து வெளியாக்கிவிடுவதில்லை. இது அமல் சார்ந்த "குப்ர்" ஆகும். அதாவது அல்குர் ஆனிலும் சுன்னாவிலும் குப்ர் என்று குறிப்பிடப்பட்ட பாவங்களையே இது குறிக்கும். குப்ர் அக்பர் என்ற நிலைக்கு இது செல்லமாட்டாது.

இதற்கு உதாரணமாக அருட்கொடைகளை நிராகரிப்பதைக் குறிப்பிடலாம். அல்லாஹ் கூறுகிறான்.

"மேலும், அல்லாஹ் ஓர் ஊரை (அவர்களுக்கு) உதாரணம் கூறுகிறான்: அது அச்சமற்றதாக அமைதியானதாக இருந்தது. அதற்குரிய உணவு(ம் மற்றும் வாழ்க்கை)ப் பொருட்கள் யாவும் ஒவ்வோரிடத்திலிருந்தும் தாராளமாக வந்து கொண்டிருந்தன. ஆனால் (அவ்வூர்) அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தாமல் மாறு செய்தது." (16:112)

மேலும், "முஸ்லிமைத் திட்டுவது பாவமாகும். அவனோடு போர் செய்வது குப்ர் ஆகும்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

"உங்களில் ஒருவர் மற்றவரது கழுத்தை வெட்டுவது கொண்டு எனக்கு பின் காபிர்களாக மாறிவிடாதீர்கள்" (புகாரி, முஸ்லிம்) என்பன போன்ற ஹதீஸ்களில் குறிப்பிடப்படுகின்ற விடயமும் இந்த வகையைச் சேர்ந்ததே. அல்லாஹ் அல்லாதவர்களின் மீது சத்தியம் செய்வதும் இது போன்றதே.

"அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்யக்கூடியவர் "குப்ர்" ஐச் செய்து விட்டார். அல்லது "ஷிர்க்" செய்து விட்டார்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

அல்லாஹுதஆலா பெரும் பாவங்கள் செய்யக் கூடியவர்களை மு.்.மின்கள் என்றே கூறுகின்றான். "ஈமான்

கொண்டோரே! கொலைக்காக பழிதீர்ப்பது உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது." (2:178) இதனைத் தொடர்ந்து கூறுகின்ற போது கொலையாளியை முஸ்லிம்கள் வட்டத்திலிருந்து அகற்றிவிடாமல் அவனை கொலை செய்யப்பட்டவனின் பொறுப்பாளிக்கு சகோதரன் என்று வர்ணிக்கிறான். "இருப்பினும் (கொலை செய்த) அவனுக்கு அவனது சகோதரனா(கிய கொலையுண்டவனின் வாரிசுகளா)ல் ஏதும் மன்னிக்கப்படுமானால் வழக்கமான முறையைப்பின்பற்றி நஷ்ட ஈட்டைக் கொலை செய்தவன் பெருந்தன்மையுடனும், நன்றியறிதலுடனும் செலுத்திவிடல் வேண்டும்." (2:178)

மேலும் அல்லாஹுத்தஆலா கூறுகின்ற போது "மு.ஃ.மின்களில் இருசாரார் சண்டை செய்து கொண்டால், அவ்விரு சாராருக்குமிடையில் சமாதானம் உண்டாக்குங்கள்........ நிச்சயமாக மு.ஃ.மின்கள் (யாவரும்) சகோதரர்களே. ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானம் உண்டாக்குங்கள்." (49:9-10)

(பார்க்க: ஷரஹுத் தஹாவிய்யா, பக்கம்: 361)

**குப்ர் அக்பர், குப்ர் அஸ்கருக்கிடையிலுள்ள வித்தியாசங்கள்:**

இரண்டு வகையான குப்ர்களுக்கிடையிலுமுள்ள வேறுபாடுகளைச் சுருக்கமாக பின்வருமாறு பிரித்து நோக்கலாம்.

1) குப்ர் அக்பர்: இதனைச் செய்யக்கூடியவனை மார்க்கத்தை விட்டும் வெளியேற்றும் மேலும் அவனது அமல்கள் அனைத்தையும் வீணாக்கிவிடும். ஆனால் குப்ர் அஸ்கரைச் செய்யக்கூடியவன் எச்சரிக்கைக் குரியவனே தவிர, அது அவனை மார்க்கத்தை விட்டும் வெளியேற்றவோ அவனது ஏனைய அமல்களை வீணாக்கவோ மாட்டாது.

2) குப்ர் அக்பரைச் செய்யக்கூடியவன் நரகில் நிரந்தரமாக இருப்பான். குப்ர் அஸ்கரைச் செய்யக்கூடியவன் நரகில் நுழைந்தால் அதில் நிரந்தரமாகத் தங்க மாட்டான். சில வேளை அல்லாஹ் அவனை சுவனம் நுழையச் செய்வான்.

3) குப்ர் அக்பரைச் செய்யக் கூடியவனின் இரத்தமும், சொத்துக்களும் ஆகுமாக்கப்பட்டது. குப்ர் அஸ்கர் அப்படிப்பட்டதல்ல.

4) குப்ர் அக்பரைச் செய்யக் கூடியவனுக்கும் மு:்மின்களுக்குமிடையில் பரம விரோதமே காணப்படும். மு:்மின்கள் அவர்களை நேசிப்பதோ, அவர்களைப் பாதுகாவலர்களாக ஆக்கிக் கொள்வதோ கூடாது. அவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருப்பினும் சரியே! ஆனால் குப்ர் அஸ்கரைச் செய்பவனை ஒரேயடியாகப் பகைப்பதோ, ஒரேயடியாக நேசிப்பதோ கூடாது. மாறாக அவனிடமுள்ள ஈமானுக்கு ஏற்ப நேசிக்கப்படுவான், பாவத்திற்கேற்ப பகைக்கப் படுவான்.

(நிபாக்)

# நயவஞ்சகமும் அதன் வகைகளும்

1. *நயவஞ்சகம் (நிபாக்) என்றால் என்ன?*

அரபுப் பாஷையிலே "நிபாக்" என்ற பதம் நாபிகாஉ என்ற மூலச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். நாபிகாஉ என்பது Jerboa என்ற ஊர்வனவின் பொந்திலுள்ள ஓட்டைகளைக் குறிக்கும். ஓர் ஓட்டையால் அதனைப் பிடிக்கச் சென்றால் மறு ஓட்டையால் அது தப்பித்து விடும். மேலும் "நிபாக்" என்ற சொல் "நபக்" என்ற மூலச் சொல்லிலிருந்து பிறந்தது என்ற ஒரு கருத்தும் உண்டு. "நபக்" என்றால் பங்கர் என்று பொருள்படும்.

(பார்க்க: அந்நிஹாயா 5/ 98)

ஷரீஆவின் பார்வையில் "நிபாக்" என்ற பிரயோகம் உள்ளத்தில் குப்ரையும், தீமையையும், உதட்டில் இஸ்லாத்தையும் வைத்திருப்பதைக் குறிக்கும். இவ் விடயத்திற்கு நிபாக் என்று சொல்லக் காரணம் நிபாக்கையுடையவன் ஒரு வழியால் இஸ்லாத்தில் நுழைந்து வேறொரு வழியால் இஸ்லாத்தை விட்டு வெளியே போய்விடுகிறான். இதன் காரணமாகவே அல்லாஹ் அவர்களைப்பற்றி பின்வருமாறு கூறுகிறான். "நிச்சயமாக நயவஞ்சகர் (முனாபிக்கு)கள் பாவிகளே ஆவர்." (9:67)

மார்க்கத்தை விட்டும் வெளியேறியவர்கள் ஆவர் என்பது அதன் பொருளாகும். மேலும் முனாபிக்குகளான நயவஞ்சகர்கள் காபிர்களைவிடவும் படு மோசமானவர்கள் என்று அல்லாஹ் பின்வரும் வசனத்தில் கூறுகிறான்.

“நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகவும் கீழான அடித்தளத்தில்தான் இருப்பார்கள்.” (4:145)

மேலும் அல்லாஹ் கூறுவதைக் கவனியுங்கள்: “நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களை வஞ்சித்துவிடுவான்.” (4:142)

“அவர்கள் அல்லாஹ்வையும், ஈமான் கொண்டோரையும் ஏமாற்ற நினைக்கின்றார்கள். ஆனால், அவர்கள் (உண்மையில்) தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்களே தவிர வேறில்லை. எனினும் அவர்கள் (இதை) உணர்ந்து கொள்ளவில்லை. அவர்களுடைய இதயங்களில் ஒரு நோயுள்ளது. அல்லாஹ் (அந்த) நோயை அவர்களுக்கு இன்னும் அதிகமாக்கிவிட்டான். மேலும் அவர்கள் பொய் சொல்லும் காரணத்தினால் அவர்களுக்குத் துன்பந்தரும் வேதனையும் உண்டு.” (2:9-10)

**நிபாக்கின் வகைகள்:**

"நிபாக்" நயவஞ்சகம் இரு வகைப்படும்.

1. அகீதாவிலே ஏற்படக்கூடிய நிபாக்.

இதுவே உள்ரங்கமாக குப்ரையும், வெளியில் இஸ்லாத்தையும் ஆதரிக்கும் பெரிய நிபாக் ஆகும். இவ்வகை நிபாக்கில் ஈடுபடக்கூடியவன் மார்க்கத்தை விட்டு முற்று முழுதாக வெளியேறிவிடுகிறான். அவன் நரகில் அடித்தளத்தில் இருப்பான்.

அவர்கள் ஈமான் கொள்ளாமல் நிராகரிக்கின்றனர்.. தீனையும், தீன்தாரிகளையும் பரிகசிக்கின்றனர். இஸ்லாமிய விரோதச் சக்திகளோடு சேர்ந்து இஸ்லாத்திற்கு எதிராக கைகோர்த்துக் கொள்கின்றனர் என்பன போன்ற எல்லாக் கெட்ட பண்புகளைக் கொண்டும் அல்லாஹ் அவர்களை வர்ணிக்கிறான்.

இப்படிப்பட்டோர் எல்லாக் காலகட்டத்திலும் இருப்பர்.. குறிப்பாக இஸ்லாமிய சக்தி மேலோங்குகின்றபோது பகிரங்கமாக அதனை எதிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டால் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக குழிதோண்டு வதற்காகவும், தங்களையும் தங்கள் செல்வங்களையும் தற்காத்துக் கொள்வதற்காகவும் இஸ்லாத்தில் நுழைவது போன்று நடிப்பான். உண்மையில் அவன் பொய்யனே! இப்படியான முனாபிக்குகளின் சதிவலைகளில் மு.்.மின்கள் சிக்காமல் இருக்க அவர்களின் திரைகளை அல்லாஹ் கிழித்து அவர்களது ரகசியங்களை அம்பலத்துக்கு

கொண்டுவந்தான். சூரதுல் பகரா ஆரம்பப் பகுதியில் மூன்று வகையான மக்களைப்பற்றி அல்லாஹ் குறிப்பிடுகிறான். அவர்கள் மு.ஃமின்கள், காபிர்கள், முனாபிக்குகள் ஆகியோரே. மு.ஃமின்களைப்பற்றி நான்கு வசனங்களிலும், காபிர்களைப் பற்றி இரண்டு வசனங்களிலும் பேசுகின்ற அல்லாஹ் முனாபிக்குகள் பற்றி 13 வசனங்களில் பேசுகின்றான். அதற்குக் காரணம் அவர்கள் அதிகமாக இருப்பதும் நீக்கப்படவேண்டும். அவர்களினால் மு.ஃமீன்கள் அதிகம் சோதிக்கப்படுவது மேயாகும். உண்மையில் இவர்களால் இஸ்லாம் அதிகமதிகம் சோதனைக்குட்படுத்தப்படுகிறது. ஏனெனில், வெளிப்படையில் முஸ்லிம்கள் போலும், இஸ்லாத்திற்கு உதவி செய்வோர் போலும் இருந்துகொண்டு மறைமுகமாக அதற்கு எதிராக சதித்திட்டம் தீட்டி எல்லா விதத்திலும் தமது பகைமையை வெளிப்படுத்துகின்றனர். அவர்களது நடவடிக்கைகளைப் பார்க்கின்ற ஓர் அறிவிலி அவற்றை அறிவுபூர்வமானதாகவும் சீர்திருத்தப்பணியாகவுமே காண்கின்றான். இதுவே மடமையினதும் சீர்கேட்டினதும் உச்சகட்டமாகும்.

(இமாம் இப்னுல் கைய்யிம் அவர்களது முனாபிக்கு களின் பண்புகள் என்ற நூலிலிருந்து)

இந்த நிபாக் ஆறு வகைப்படும். அவை:-

1. ரஸூல் (ஸல்) அவர்களைப் பொய்ப்பித்தல்
2. ரஸூல் (ஸல்) அவர்கள் கொண்டுவந்ததில் சிலதைப் பொய்ப்பித்தல்.

3. ரஸூல் (ஸல்) அவர்களைப் பகைத்தல்.
4. ரஸூல் (ஸல்) அவர்கள் கொண்டுவந்த சிலதை எதிர்த்தல்.
5. ரஸூல் (ஸல்) அவர்களின் தீன் வீழ்ச்சியடைவது கண்டு மகிழ்ச்சியடைதல்.
6. ரஸூல் (ஸல்) அவர்களின் "தீன்" வெற்றியடைவதை வெறுத்தல்.

(மஜ்மூஅதுத் தவ்ஹீத் அந்நஜ்திய்யா பக்-9)

**2.** அமலிலே ஏற்படக்கூடிய நிபாக்:-

இது உள்ளத்தில் ஈமான் இருக்கக்கூடிய நிலையில் முனாபிக்குகளின் செயற்பாடுகளில் எதையாவது ஒன்றைச் செய்வதைக் குறிக்கும்.

இவ்வகையான நிபாக் மார்க்கத்ததைவிட்டு வெளியேற்ற மாட்டாது. எனினும் மார்க்கத்தை விட்டும் வெளியேற்ற வழிவகுக்கின்றது. அதனைச் செய்யக்கூடியவனிடம் ஈமானும் இருக்கும்; நிபாக்கும் இருக்கும்; இவனிடம் நிபாக்குடைய பண்புகள் அதிகரித்தால் அவன் பூரணமான நயவஞ்சகனாக மாறிவிடுகிறான். இதற்கு பின்வரும் நபி மொழி ஆதாரமாக இருக்கின்றது.

" நான்கு விடயங்கள் யாரிடம் அமையப்பெறுகிறதோ அவர் நயவஞ்சகராவார். எவரிடம் நான்கில் ஒன்று காணப்படுகிறதோ அவரிடம் நிபாக்கின் ஒரு பகுதி இருக்கின்றது. அதனை அவர் விட்டு விடுகின்றவரை அவை

நம்பிக்கைக்கு மோசடி செய்தல், பேசினால் பொய் யுரைத்தல், உடன்படிக்கை செய்தால் மாறுசெய்தல், வாதாடினால் பாவம் செய்தல் ஆகியவைகளாகும்" என்று நபி .(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

இந்நான்கு பண்புகளும் ஒருவனிடம் ஒன்றுசேரக் காணப்படுமேயானால் இந்நான்கு பண்புகளும் அவனிடம் அனைத்துத் தீமைகளும் ஒன்று சேர்ந்து விட்டது என்பது அர்த்தமாகும். ஏனெனில், இவையே முனாபிக்குகளின் பண்புகளாகும். இந்நான்கில் ஒன்று அவனிடம் காணப்பட்டால் முனாபிக்குகளின் பண்புகளில் ஒன்று அவனிடம் காணப்படுகிறது என்பது பொருளாகும்.

ஒரு அடியானிடம் ஒரு நல்ல பண்பும், ஒரு கெட்ட பண்பும் அவ்வாறே ஈமானியப் பண்பும் நிபாக்குடைய பண்பும் காணப்பட வாய்ப்பிருக்கிறது. அவற்றிற்கேற்ப அவன் கூலியையோ அல்லது தண்டனையையோ பெற்றுக் கொள்வான். ஜமாஅத் தொழுகையில் பொடு போக்காக, சோம்பேறியாக இருப்பதும் அமல் சார்ந்த நிபாக்கிலே உள்ளதாகும்.

ஆக, நிபாக் என்பது கெட்ட அபாயாகரமான பண்பாகும். இதிலே விழுந்துவிடாமல் இருப்பதில் ஸஹாபாக்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தார்கள். இப்னு அபீ முலைகா என்பவர் கூறுகிறார்:- "நான் ஸஹாபாக்கள் 30

பேரைக் கண்டேன். அவர்கள் எல்லோரும் தங்களிடம் நிபாக் வந்துவிடுமோவென அஞ்சக் கூடியவர்களாக இருந்தார்கள்."

**பெரியநயவஞ்சகத்திற்கும் சிறிய நயவஞ்சகத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசங்கள்:**

இரு நிபாக்குகளுக்குமிடையில் உள்ள வேறு பாடுகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. பெரிய நயவஞ்சகம் மார்க்கத்தை விட்டு வெளியேற்றும். சிறிய நயவஞ்சகம் மார்க்கத்தை விட்டு வெளியேற்ற மாட்டாது.
2. பெரிய நயவஞ்சகம் அகீதாவிலும்; சிறிய நயவஞ்சகம் அமல்களிலும் ஏற்படுகின்றன.
3. பெரிய நயவஞ்சகம் ஒரு மு.்.மினிடம் காணப்பட மாட்டாது, இடம் பெறமாட்டாது; சிறிய நயவஞ்சகம் சில வேளை மு.்.மின்களிடமும் காணப்படும்.
4. பெரிய நிபாக்கைச் செய்யக்கூடியவன் பெரும்பாலும் தவ்பாச் செய்வதில்லை. அப்படி தவ்பா செய்தாலும் நீதிபதியிடம் அவனுடைய தவ்பா ஏற்றுக்கொள்ளப் படுமா? இல்லையா? என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஆனால் சிறிய நிபாக்கைச் செய்யக் கூடியவன் தவ்பாச் செய்தால் அல்லாஹ் அந்த தவ்பாவை ஏற்றுக்கொள்வான்.

இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) கூறுகிறார்கள்: "வெளிப்படையாக முனாபிக்குகள் செய்கின்ற தவ்பாவை ஏற்றுக்கொள்வதில் அறிஞர்களுக்கிடையில்

கருத்து வேறுபாடு நிலவுகின்றது. ஏனெனில் அவர்கள் உண்மையாகத்தான் தவ்பாச் செய்கிறார்களா இல்லையா என்பது அறிய முடியாத ஒரு விஷயம். எப்போதும் வெளிப்படையில் முஸ்லிமாக நடிப்பவர் களல்லவா அவர்கள்."

(மஜ்மூஉல் பதாவா 28/434, 435)

# ஜாஹிலிய்யத் *(அறியாமை)*, ரிஸ்க் *(பாவம்)*, ழலால் *(வழிகேடு)*, ரித்தத் *(மதமாற்றம்)* பற்றிய விளக்கக் குறிப்புக்கள்:-

1) *ஜாஹிலிய்யத்:-* (அறியாமை)

"ஜாஹிலிய்யத்" என்பது இஸ்லாத்திற்கு முன் அறபிகள் அல்லாஹ்வைப் பற்றியும், அவனது தூதர்கள், மார்க்கக் கடைமைகள் என்பன பற்றியும் அறியாமல் இருந்ததோடு குலப்பெருமை பேசிப் பெருமை அடித்துத் திரிந்த நிலையைக் குறிக்கும்.

(அந்நிஹாயா- இப்னுல் அதீர் 1/323)

அறியாமை அல்லது அறிவைப் பின்பற்றாமை என்றும் கூறலாம். இமாம் இப்னு தைமிய்யா(ரழி) கூறுகின்றார்கள்: யார் சத்தியத்தை அறியவில்லையோ அவன் சாதாரண ஜாஹில் ஆவான். யார் சத்தியத்திற்கு மாற்றமான கொள்கையைக் கொண்டிருக்கிறானோ அவன் இரட்டிப்பு மடையனாவான். இந்த விடயம் தெளிவானால் அறிந்து கொள்ளுங்கள்! நபி (ஸல்) அவர்களது வருகைக்கு முன்னர் மக்கள் அறியாமை என்ற ஜாஹிலியத்திலே

இருந்தார்கள். அவர்களது சொல், செயல் யாவும் ஒரு ஜாஹிலால் உருவாக்கப்பட்டவையாக இருந்தன. எனவே அவற்றைச் செய்யக் கூடியவனும் ஜாஹிலே! அவ்வாறே ரஸூல்மார் கொண்டு வந்ததிற்கு மாற்றமான யூத, கிரிஸ்தவமும் ஜாஹிலிய்யத்துத்தான். இவற்றைப் பொதுவான "ஜாஹிலிய்யத்" என்று கூறலாம். ரஸூல் (ஸல்) அவர்களது வருகைக்குப்பின்னர் ஜாஹிலிய்யத் என்பது காபிரான நாடுகள் போன்ற சில குறிப்பிட்ட நாடுகளிலோ அல்லது சில மனிதர்களிலோ காணப்படலாம். உதாரணமாக: ஒரு மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் அவன் ஜாஹிலிய்யத்திலேயே இருக்கிறான். அவன் இஸ்லாமிய நாட்டில் இருந்தாலும் சரியே! பொதுவாக காலத்தை அடிப்படையாக வைத்து நோக்குகையில் நபி (ஸல்) அவர்களது வருகைக்கு பின்னர் ஜாஹிலிய்யத் இல்லை என்றே சொல்லவேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்களது உம்மத்தில் ஒரு கூட்டம் மறுமை நாள் வரை சத்தியத்தில் இருந்து கொண்டே இருக்கும் என்பது தெளிவான ஒரு விடயமாகும். ஆனால் குறிப்பிட்ட சில ஜாஹிலிய்யத்கள் சில வேளை சில இஸ்லாமிய நாடுகளிலே உள்ள முஸ்லிம்களிடம் காணப்படலாம். உதாரணமாக: ரஸூல் (ஸல்) அவர்கள் "எனது உம்மத்தில் நான்கு விடயங்கள் ஜாஹிலிய்யத் தானவையாக இருக்கின்றன" (முஸ்லிம்) என்றும், அபூதர்(ரழி) அவர்களைப்பார்த்து "உன்னிடத்திலே இன்னும் ஜாஹிலிய்யப் பண்புகள் இருக்கின்றன" (புகாரி, முஸ்லிம்) என்றும் நவின்றுள்ளார்கள். (இக்திளாஉஸ் ஸிறாதில் முஸ்தகீம், பாகம் 1, பக்கம்: 225-227)

சுருக்கமாக கூறின் ஜாஹிலிய்யத் என்பது அறியாமை எனப் பொருள்படும். அது இருவகைப்படும்:-

1) பொதுவான ஜாஹிலிய்யத்: இது நபி (ஸல்) தூதராக அனுப்பப்படுவதற்கு முற்பட்ட காலத்தில் காணப் பட்டது. அவர்களது வருகையோடு அது முற்றுப்பெற்று விட்டது.

2) சில நாடுகள், ஊர்கள், தனிமனிதர்களிடம் காணப்படக்கூடிய குறிப்பான ஜாஹிலிய்யத்: இது இருந்து கொண்டே இருக்கும்.

இதிலிருந்து ஜாஹிலிய்யத்தைப் பொதுப்படையாகப் பயன்படுத்துவது கூடாது என்பது தெளிவாகின்றது. எனவே இந்த நூற்றாண்டின் ஜாஹிலிய்யத் என்று பொதுப் படையாகப் பயன்படுத்தாமல் இந்நூற்றாண்டிலுள்ள சிலரது அல்லது பெரும்பாலரது ஜாஹிலிய்யத் என்று பயன் படுத்துவதே சாலவும் பொருத்தமானது.

2) அல்- பிஸ்க் (பாவம்)

அறபு மொழியிலே "பிஸ்க்" என்ற பதம் வெறியேறுதல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

ஷரீஆவின் பார்வையில் பிஸ்க் என்றால், அல்லாஹ் வுக்கு வழிபடுவதை விட்டும் வெளியேறுவதைக் குறிக்கும். எனவேதான் காபிருக்கு பாஸிக் என்றும் சொல்லப்படும். அவ்வாறே சில விடயங்களில் அல்லாஹ்வுக்கு வழி படாமையையும் குறிக்கும். எனவேதான் பெரும்

பாவஞ் செய்யக்கூடிய மு.ஃ.மினுக்கு "பாஸிக்" என்று சொல்லப்படுகிறது. "பிஸ்க்" இரு வகைப்படும்.

ஒன்று: இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகின்ற பிஸ்க். அது தான் குப்ர் ஆகும். இந்த அடிப்படையிலேயே காபிருக்கு பாஸிக் என்று சொல்லப்படுகிறது. இப்லீஸைப் பற்றிக் கூறுகின்ற போது அல்லாஹ் "அவன் தன்னுடைய இரட்சகனின் கட்டளைக்கு மாறு (பிஸ்க்) செய்து விட்டான்." (18:50) என்று கூறுகின்றான். இந்த இடத்தில் அவனிடமிருந்து ஏற்பட்ட "பிஸ்க்" குப்ரின்பால்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: "மேலும் பாவம் (பிஸ்க்) செய்கிறார்களே அத்தகையோர் தங்குமிடம் நரக நெருப்பாகும்." (32:20)

இவ்வசனத்தில் குறிப்பிடப்படுவோர் காபிர்களே என்பதை வசனத்தின் மறுபகுதி உணர்த்துகின்றது. "அதிலிருந்து அவர்கள் வெளியேற நாடும்போதெல்லாம் அதிலேயே மீட்கப்படுவார்கள். மேலும், நீங்கள் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களே அந்த (நரக) நெருப்பின் வேதனையைச் சுவைத்துப் பாருங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்படும். (32:20)

இரண்டாவது: முஸ்லிம்களில் பாவிகளுக்கு பாஸிக் என்று சொல்லப்படும். ஆனால் அவனுடைய பாவச்செயல்

(பிஸ்க்) அவனை இஸ்லாத்தை விட்டும் வெளியாக்கி விடுவதில்லை. பின்வரும் வசனங்கள் இதற்கு ஆதாரமாக இருக்கின்றது.

"மேலும், பத்தினிப் பெண்களை அவதூறு கூறி (அதன்) பிறகு (அதற்குரிய) நான்கு சாட்சிகளைக் கொண்டுவர வில்லையோ அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். மேலும் அவர்களின் சாட்சியத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். இன்னும் அத்தகையோர் பாவி(பாஸிக்) களாவர்." (24:4)

"எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தம்மீது கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜின் காலத்தில் சம்போகம், கெட்டவார்த்தைகள் பேசுதல், சச்சரவு ஆகியவை செய்த்ல் கூடாது". (2:197)

இவ்வசனங்களில் வரும் "புஸூக்" என்ற பிரயோகம் பாவங்களையே குறிக்கின்றன என்பது இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும்.

(கிதாபுல் ஈமான்- இப்னு தைமிய்யா பக்-278)

3. அல்ழலால (வழிகேடு):

(ழலால்) வழிகேடு என்பது நேர்வழியை விட்டும் தடம் புரள்வதைக் குறிக்கிறது. மேலும் இது நேர்வழி என்பதற்கு எதிர்ச்சொல்லாகும். அல்லாஹ் கூறுகிறான்:

"எவர் நேர் வழியில் செல்கின்றாரோ, அவர் நேர்

வழியில் செல்வதெல்லாம் தன(து நன்மை)க் காவேதான், எவர் வழிகேட்டில் செல்கின்றாரோ அவர் வழிகெடுவ தெல்லாம் தனக்கே (தீங்கிழைத்துக் கொள்ளத்)தான். (17:15)

**வழிகேடு (ழலால்) என்ற பதத்தின் அர்த்தங்கள்:**

ழலால் என்ற பதம் பல அர்த்தங்களில் பயன்படுத்தப் படுகின்றது. அவை பின்வருமாறு:-

1. சில வேளை "குப்ர்" (நிராகரிப்பு) என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படும். அல்லாஹ் கூறுகிறான் "எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்க ளையும் நிராகரிக்கின்றாரோ அவர் மிகத்தூரமான வழிகேடாக வழிகெட்டுவிட்டார்." (4:136)

2. சில வேளை "ஷிர்க்" (இணைவைத்தல்) என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படும். அல்லாஹ் கூறுகிறான் "இன்னும் யார் அல்லாஹ்வுக்கு இணை வைப்பாரோ, அவர் திட்டமாக வெகு தூரமான வழிகேடாக வழிகெட்டு விட்டார்." (4:116)

3. சில வேளை மாறுசெய்தல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படும். இது குப்ரை விடக்குற்றத்தில் குறைந்ததாகும்.

4. தவறு என்ற அர்த்தத்திலும் சில வேளை பயன்படுத்தப்படும். அல்லாஹ் கூறுகிறான் "(மூஸா) கூறினார் "நான் தவறியவர்களில் (ஒருவனாக) இருந்த நிலையில் அதைச் செய்து விட்டேன்." (26:20)

5. சிலவேளை மறதி என்ற கருத்திலும் பயன்படுத்தப்

படும். அல்லாஹ் கூறுகிறான் "அவ்விருவரில் ஒருத்தி மறந்து விட்டால் இருவரில் மற்றவள் நினைவூட்டும் பொருட்டேயாகும்." (2:282) (சாட்சி சொல்வதற்கு இரு ஆண்கள் இல்லாதிருந்தால் ஒரு ஆணும், இரண்டு பெண்களும் சாட்சி சொல்ல வேண்டும். ஏன் இரு பெண்கள் என்பது பற்றித் தெளிவு படுத்துவதே இவ்வசனம்.)

6. தொலைந்து போதல் என்ற கருத்திலும் பயன்படுத்தப் படுகின்றது. இதனாலேயே காணாமல்போன ஒட்டகத்திற்கு அறபிகள் "ழால்லதுல் இப்ல்" என்று கூறுகின்றனர்.

(அல் முப்ரதாத்- அர்ராகிப்- பக்- 297, 298)

4. ரித்தத் (மதம் மாறுதல்):

"ரித்தத்" என்றால் அறபு மொழியில் திரும்புதல் என்பது பொருளாகும். இந்த அர்த்தத்திலேயே பின்வரும் வசனம் அமைந்திருக்கின்றது. "நீங்கள் புறமுதுகு காட்டித்திரும் பாதீர்கள்." (5:21)

பரிபாஷையிலே "ரித்தத்" என்பது இஸ்லாத்தை ஏற்ற பின் மீண்டும் நிராகரிப்பதைக் குறிக்கின்றது. அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். "ஆகவே! உங்களிலிருந்து எவரேனும் தன்மார்க்கத்தை விட்டு (மதம்) மாறி நிராகரித்தவராகவே இறந்துவிட்டால், அத்தகையோரின் நற்செயல்கள் இம்மையிலும், மறுமையிலும் அழிந்து விடும். மேலும் அத்தகையோர் நரகவாசிகளாவர். அவர்கள் அதில் நிரந்தரமாக(த் தங்கி) இருப்பார்கள்" (2:217)

**ரித்தத்தின் வகைகள்:**

இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக் கூடிய கருமங்களில் எதையாவது ஒன்றைச் செய்வதால் "ரித்தத்" ஏற்படுகிறது. இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றும் காரியங்கள் பல. அவற்றை நான்கு பிரதான பிரிவுகளில் நாம் நோக்கலாம்.

1. *சொல் ரீதியான "ரித்தத்"*

உதாரணமாக: அல்லாஹ்வை அல்லது அவனது தூதர் (ஸல்) அவர்களை அல்லது மலக்குகளை அல்லது அவனது தூதர்களில் ஒருவரை ஏசுவது அல்லது தனக்கு மறைஞானம் இருப்பதாக வாதிடுவது, அல்லது நுபுவ் வத்தை வாதிடுவது அல்லது அதனை வாதிடுபவனை மெய்ப்பிப்பது அல்லது அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்திப்பது அல்லது அவர்களிடம் உதவி தேடுவது அல்லது அவர்களிடம் பாதுகாவல் தேடுவது போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

2. *செயல் ரீதியான ரித்தத்.*

சிலை, மரம், கல், கப்ருகள் போன்றவற்றிற்கு ஸுஜூது செய்தல், அவற்றிற்காக அறுத்துப்பலியிடல், அசிங்கமான இடங்களில் அல்குர்ஆனை வீசுதல், சூனியம் செய்தல், அதனைக் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுத்தல், அல்லாஹ் இறக்கி வைக்காதவற்றை ஏற்று அவற்றைக் கொண்டு சட்டம் இயற்றுதல் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

3. *கொள்கை சார்ந்த ரித்தத்.*

அல்லாஹ்வுக்கு நிகராக ஒரு சக்தி இருப்பதாக

நம்புவது, மது, விபச்சாரம் என்பன ஹலால் எனவும், ரொட்டி போன்றவற்றை ஹராம் என்றும், தொழுகை கடமை இல்லை என்றும், மார்க்கத்தில் உறுதியாக அறியப்பட்ட இஜ்மாவான விடயங்களை மறுப்பதும் அதற்கு மாற்றமாக நம்புவதையும் இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

4. *சந்தேகத்தின் அடிப்படையில் ஏற்படக்கூடிய* "ரித்தத்"

ஷிர்க் ஹராம் என்பதிலோ அல்லது விபச்சாரம், மது ஹராம் என்பதிலோ அல்லது ரொட்டி போன்றவை ஹலால் என்பதிலோ அல்லது நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவம் உண்மை அது இந்தக் காலத்திற்கு பொருத்தமானது என்பதிலோ சந்தேகம் கொள்வதை இதற்கு உதாரண மாகக் கூறலாம்.

**ஒருவன் முர்தத் என நிரூபிக்கப்பட்டால்:**

1. அவனைத் தவ்பாச் செய்யுமாறு வலியுறுத்த வேண்டும். மூன்று நாட்களுக்குள் தவ்பாச் செய்து இஸ்லாத்தினுள் வந்து விட்டால் அவனுடைய தவ்பா ஏற்றுக்கொள்ளப்படும்.

2. தவ்பாச் செய்ய மறுத்தால் அவனைக் கொலை செய்வது கடமையாகும்.

"யாராவது மதம் மாறினால் அவனைக் கொல்லுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: புகாரி, அபூதாவூத்)

3. தவ்பாச் செய்ய வழங்கப்பட்ட நாட்களுக்குள் அவனது சொத்துக்களில் கையடிப்பது ஹராமாகும். அவன் தவ்பாச் செய்து இஸ்லாத்தை ஏற்றால் அது அவனுக்கே

உரியது. இன்றேல் அவனை ரித்தத்திற்குத் தண்டனை யாகக் கொலை செய்ததிலிருந்து அவனது சொத்துக்கள் பைதுல் மாலிற்கு ஒப்படைக்கப்படும்.

அவன் மதம் மாறியதிலிருந்து அவனது சொத்துக்கள் முஸ்லிம்களின் நலன்களுக்காகச் செலவு செய்யப்படும் என்றும் ஒரு கருத்து உண்டு.

4. அவனது உறவினர்களுக்கு அவனது சொத்திலிருந்தோ அல்லது அவர்களது சொத்திலிருந்து அவனுக்கோ எந்தப்பங்கும் கிடையாது.

5. முர்தத்தாகவே அவன் மரணித்தால் அவனைக் குளிப்பாட்டக் கூடாது, அவனுக்குத் தொழுகை நடாத்தக் கூடாது, முஸ்லிம்களின் மையவாடியில் அவனை அடக்கவும் செய்யவும் கூடாது. பகரமாக காபிர்களின் சவச்சாலையிலோ அல்லது முஸ்லிம்களின் மையவாடி யல்லாத ஏதோ ஓரிடத்தில் அவனைப் புதைக்க வேண்டும்.

இயல்

II

# தவ்ஹீதைச் சீர்குலைக்கும் சொற்களும், செயல்களும்

*இப்பகுதி உள்ளடக்கும் விடயங்கள்:-*

1. பால் கிதாபு, மை பார்ப்பது.
2. சூனியமும் சோதிடமும்.
3. கப்ருகளில் அடக்கப்பட்டோருக்கு அறுத்துப்பலியிடலும், நேர்ச்சை செய்தலும்.
4. சிலைகளையும் நினைவுச் சின்னங்களையும் கண்ணியப்படுத்தல்.
5. மார்க்கத்தைப் பரிகாசம் செய்வதும், அதன் புனிதத்தைக் கெடுப்பதும்.
6. அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்புக் கூறாமல் வேறு சட்டங்களைப் பின்பற்றுதல்
7. சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் தனக்கு இருப்பதாக வாதிடுவது.
8. ஜாஹிலியக் கட்சிகளிலும், நாஸ்தீக அமைப்புக்களிலும் சேர்ந்து செயற்படுவது.
9. வாழ்க்கை பற்றிய சடரீதியான கண்ணோட்டம்.
10. தாயத்தும், மாந்திரீகமும்.
11. அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தலும், படைப்பினங்களைக் கொண்டு வஸீலாத் தேடுதலும்.

# பால் கிதாபு, மை பார்ப்பதன் மூலம் மறைவான ஞானம் தனக்கு இருப்பதாக வாதாடுவது.

*மறைவான விடயம் என்றால் என்ன?*

எதிர் காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள், இறந்த காலத்தில் நடந்து முடிந்த, மனிதர்களுக்குத் தெரியாத விடயங்கள் என்பனவே மறைவான விடயங்களாகும். இது பற்றிய ஞானம் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. "அல்லாஹ்வைத் தவிர வானங்களிலும், பூமியிலும் உள்ளவர்கள் (எவரும்) மறைவானவற்றை அறியமாட்டார்கள்" என்று நபியே நீர் கூறுவீராக. (27:65)

மேற்படி வசனத்திலிருந்து மறைவானவற்றை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள் என்பது தெளிவு. அதேவேளை சில மறைவான விடயங்களை சில நோக்கங்களுக்காக அல்லாஹ் தனது தூதர்களுக்கு அறிவித்துக்கொடுப்பான். "(என் இரட்சகனாகிய அவன்) மறைவானவற்றை அறிகிறவன். எனவே, தான் மறைத்திருப்பவற்றை ஒருவருக்கும் அவன் வெளிப்படுத்தமாட்டான். தூதரில் தான் (தேர்வு செய்து) பொருந்திக் கொண்டவருக்கே தவிர" (72:26,27)

அதாவது: தான் தேர்வு செய்கின்ற தூதரைத்தவிர வேறுயாருக்கும் மறைவானவற்றை அறிவிக்கமாட்டான். அப்படி தான் தெரிவு செய்யும் தூதர்களுக்கு அவன் நாடுகின்றவற்றை அறிவித்துக் கொடுப்பான். ஏனெனில் அவர், தான் ஒரு இறைத்தூதர்தான் என்பதை நிரூபிக்க அற்புதங்களைக் காட்டுவார். அதில் அல்லாஹ் அவருக்கு அறிவித்துக் கொடுப்பதும் அடங்கும். இவ்விடயம் மலக்குகளிலும் மனிதர்களிலுமுள்ள அல்லாஹ்வின் தூதர்களுக்கு இடம்பெறும். இவர்களல்லாத வேறு எவருக்கும் இப்படி நடக்காது.

எனவே, மலக்குகள், இறைத்தூதர்கள் தவிர வேறு யாராவது தனக்கு மறைவான ஞானம் இருப்பதாக எவ்வழிமுறைகளைக்கொண்டு வாதாடினாலும் அவன் பொய்யன், காபிர் ஆவான். கைரேகைகளைப் பார்த்தோ அல்லது மையைப்பார்ப்பதன் மூலமோ அல்லது சோதிடம் போன்றவை மூலமோ வாதிட்டாலும் சரியே.

காணமல் போன பொருட்கள் இன்னது தான். அது இன்ன இடத்தில்தான் இருக்கின்றது என்றும், இந்த நோய் ஏற்படக் காரணம் இவன் உனக்கு இப்படிச் செய்தி ருக்கிறான் என்றும் கூறும் சோதிடர்களும், மந்திர வாதிகளும் மறைவான ஞானத்தை வாதிடுவோரே. இமாம் இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: சோதிடர்களுக்கு ஷைத்தான்களிலுள்ள தோழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இறைவனிடமிருந்து திருடிவந்த

சில மறைவான செய்திகளைக் கொடுப்பார்கள். அவற்றிலுள்ள உண்மைகள் சிலதைப் பொய்யுடன் கலந்து சோதிடர்கள் அறிவிப்பார்கள். இப்படிப்பட்ட சோதிடர் களுக்கு ஷைத்தான்கள் பழவகைகள், இனிப்புப்பண்டங்கள் போன்ற அவ்விடத்தில் இல்லாத உணவுப்பொருட்களைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். மேலும் அவர்களைச் சுமந்து கொண்டு மக்கா, பைதுல் முகத்தஸ் போன்ற இடங்களுக்கும் செல்கின்றார்கள்.

(பார்க்க: மஜ்மூஅதுத் தவ்ஹீத் 797-801)

சில வேளை அவர்கள் வானவியலை அடிப்படையாகக் கொண்டு காற்று அடிப்பது, மழை பெய்வது, விலைமாற்றம் போன்ற விடயங்களை அறிவிப்பார்கள். நட்சத்திரங்களின் ஓட்டம், அவை ஒன்றோடொன்று சந்திப்பது, பிரிவது என்பவற்றை அடிப்படையாக வைத்தே இவை அறியப்படுகின்றன என அவர்கள் நம்புகின்றனர்.

எனவே, அவர்கள் இன்ன இன்ன நட்சத்திரங்களைப் பார்த்து திருமணம் முடித்தால் அல்லது பயணஞ் செய்தால் அல்லது குழந்தை பெற்றால் இன்னதுதான் நடக்கும் என்று “நஸஹு” சொல்வார்கள்.

சிலர் நாள், கோள் பலன் சொல்வதும் இதன் அடிப்டை யிலேதான்.

சில அறிவீனர்கள், பலயீனமான ஈமானை

உடையவர்கள் சிலவேளை இப்படிப்பட்ட சோதிடர்களிடம் சென்று தமது எதிர்காலம், மணவாழ்க்கை என்பனவற்றை வினவுவார்கள். இப்படிப்பட்டவர்கள் மறைவான ஞானத்தை வாதிடுவோரும், அவர்களை மெய்ப்பிப்போரும் முஷ்ரிக், காபிர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வுக்குரிய மறைவான ஞானம் தமக்கும் இருப்பதாகக் கூறி அல்லாஹ்வுடன் கூட்டுச்சேரப் பார்க்கிறார்கள். நட்சத்திரங்களைப் பொறுத்தவரை அவை படைக்கப்பட்டு ஒரு கட்டுப் பாட்டுக்குள் இயங்கக் கூடியவை. அவற்றிற்கு நல்லது, கெட்டது, வாழ்வு, மரணம் என்பவற்றைக் கூற எந்தச் சக்தியுமில்லை. இவை அனைத்தும் செய்திகளைத் திருடும் ஷைத்தானின் தீய செயல்களேயாகும்.

# சூனியமும் சோதிடமும்

இஸ்லாமிய அகீதாவில் சீர்கேட்டை ஏற்படுத்துகின்ற ஷைத்தானியச் செயல்களே சூனியமும், சோதிடமும் ஆகும்.

01. சூனியம (மந்திரம்) :-

இதற்கு அறபியிலே "ஸிஹ்ர்" என்று சொல்லப்படும். இப்படிச் சொல்லப்படக்காரணம் இவை கண்களுக்குப் புலப்படாத, மறைவானவற்றைக் கொண்டு செய்யப்படுவதினாலேயாகும். இது சில மந்திர, மாயாஜால வார்த்தைகள், சில மருந்துகள், புகை போன்றவையால் ஆனதாகும். இதற்கு யதார்த்தம் உண்டு. உள்ளங்களிலும் உடம்பிலும் இது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் நோய் ஏற்படுகிறது; மரணம் சம்பவிக்கிறது; குடும்ப வாழ்வில் பிரிவு ஏற்படுகிறது. இவை இடம்பெற சூனியம் காரணம் என்றாலும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கின்றது. இது ஒரு ஷைத்தானியச் செயலாகும்.

பெரும்பாலும் சூனியம் செய்ய ஷிர்க்கான வழி முறைகளே பயன்படுத்தப்படுகின்றது. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் ஷிர்க்குடன் சேர்ந்து இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள். "அழிவில் ஆழ்த்தும் ஏழு பெரும் பாவங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள்" என்று நபி (ஸல்)

கூறினார்கள். அதற்கு ஸஹாபாக்கள் "அவை என்ன?" என்று கேட்டார்கள். "இணை வைத்தல், சூனியம்,...." என்று நபியவர்கள் பதிலுரைத்தார்கள்.

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

**இரண்டு முறைகளில் சூனியம் ஷிர்க் என்ற வட்டத்தில் நுழைகிறது.**

1. சூனியம் செய்வதற்காகச் ஷைத்தான் பயன் படுத்தப்படுகின்றான். இது விடயத்தில் ஷைத்தானின் உதவியைப் பெறுவதற்காக சூனியக்காரன் ஷைத்தான் விரும்பக்கூடியவற்றைச் செய்கிறான்.

மேலும் சூனியத்தைக் கற்றுக்கொடுப்பதும் ஷைத் தானே. "எனினும் ஷைத்தான்கள் தாம் நிராகரிப்பவர்கள், அவர்கள்தாம் மனிதர்களுக்குச் சூனியத்தைக் கற்றுக் கொடுத்தார்கள்." (2:102)

2. சூனியம் செய்வோர் மறைவான ஞானம் தமக்கிருப்பதாக வாதிடுவதோடு அவர்களது விடயத்தில் அல்லாஹ்வையும் சேர்த்துக் கொள்கின்றனர். இது நிராகரிப்பும் வழிகேடுமாகும்: "(சூனியத்தை) விலை கொடுத்து வாங்கிக் கொண்டவர்களுக்கு, மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை என்பதை அவர்கள் நன்கறிந்துள்ளனர்." (2:102)

இவ்வாறிருப்பின் இது இஸ்லாமிய அகீதாவைத் தகர்த் தெறியும் நிராகரிப்பும், இணைவைத்தலுமாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே சூனியம் செய்யக்

கூடியவர்களைக் கொலை செய்வது கடமையாகும். பெரும் பெரும் ஸஹாபாக்களும் அவர்களைக் கொலை செய்திருக்கிறார்கள்.

ஆனால், இன்று மக்கள் சூனியம் மற்றும் சூனியக் காரனின் விடயத்தில் பொடுபோக்காகவே இருக்கின்றனர். சிலர் அதை ஒரு பெருமைக்குரிய கலையாகக் கருது கின்றனர். சூனியம் (மந்திரம்) செய்யக்கூடியவர்களுக்கு சன்மானங்களும் வழங்கப்படுகின்றது.

இவர்கள் காட்டும் மந்திரம், சூனியம் போன்றவற்றைக் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடுகின்றனர். உண்மையிலே இது மார்க்கவிடயங்களில் எந்தளவு அறிவிலிகளாக மக்கள் இருக்கிறார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

## ஜோஷியம் (சாஸ்திரம)

இதுவும் மறைவான ஞானத்தோடு சம்மந்தப்பட்டதாகவே இருக்கிறது. ஜோஷியம் சொல்லக்கூடியவர்கள், ஷைத் தானின் குறிப்பாக செய்திகளைத் திருடும் ஷைத் தான்களின் துணை கொண்டே சொல்கின்றனர். இதைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். "எவர்கள் மீது ஷைத்தான்கள் இறங்குகிறார்கள் என்பதை நான் உமக்கு அறிவிக்கட்டுமா? பெரும் பொய்யனான ஒவ்வொரு பாவியின் மீதும் அவர்கள் இறங்குகிறார்கள். தாங்கள் கேள்விப்பட்டதையெல்லாம் (ஷைத்தான்கள் அவர்களின் காதுகளில்) போடுகிறார்கள், இன்னும் அவர்களில் பெரும்பாலோர் பொய்யர்களே." (26:221-223)

ஷைத்தான் மலக்குகளது வார்த்தைகளில் ஒன்றைத் திருடி சோதிடனின் காதிலே ஊதிவிடுகின்றான். இந்த ஒரு வார்த்தையோடு 100 பொய்களைச் சேர்த்து சோதிடன் கூறுவான். அந்த ஒரு உண்மைக்காக மக்கள் அவனின் 100 பொய்களையும் உண்மைப்படுத்தி நம்புகின்றனர். உண்மையில் மறைவான ஞானம் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமானதாகும். இதில் யாராவது வேறு யாரையும் சோதிடம் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ கூட்டுச் சேர்ப்பவர்களாக இருந்தால் அல்லது சோதிடர்கள்

சொல்வதை நம்புபவராக இருந்தால் அவர் அல்லாஹ்வுக்கு இணைவைத்தவராவார்.

சோதிடர்கள் ஷைத்தானை அடைந்து கொள்ள அவர்கள் விரும்பக்கூடியதைச் செய்வதனால் சோதிடம் ஷிர்க்காக ஆகின்றது. அல்லாஹ்வுக்கே உரிய மறைவான அறிவை சோதிடர்களுக்கும் கொடுப்பதனால் ருபூபிய்ய த்தில் ஷிர்க்காகவும், ஷைத்தான்களது திருப்திக்காக சில இபாத்தத்துக்களைச் செய்வதால் உலூஹிய்யத்தில் இடம்பெறுகின்ற ஷிர்க்காகவும் இது காணப்படுகின்றது.

“யாராவது ஒரு சோதிடனிடம் வந்து (குறிகேட்டு) அவன் சொல்வதை நம்புவானாக இருந்தால் அவன் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அருளப்பட்டதை நிராகரித்த வனாவான்.” (ஆதாரம்: அபூதாவூத்)

இங்கு கண்டிப்பாக குறிப்பிட வேண்டிய விடயம் என்ன வெனில், சோதிடர்களும், மந்திரவாதிகளும், சூனியக் காரர்களும் இன்று மனிதர்களின் அகீதாவோடு விளையாடு கிறார்கள். தங்களை வைத்தியர்களாகக் காட்டும் இவர்கள் அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுத்துப் பலியிடுமாறும் அறுக்கப்படுகின்ற ஆடோ அல்லது கோழியோ இன்ன இன்ன வர்ணனைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் ஏவுகின்றனர். அல்லது சில விளங்காத ஷிர்க்கும் ஷைத்தானிய வார்த்தைகளும் நிறைந்த மந்திரங்களை எழுதி அவைகளைத் தாயத்துக்களாக அணியுமாறோ

அல்லது வீட்டின் மூலைகளில் அல்லது கடைகளில் தொங்க விடுமாறோ கூறுகின்றனர். இன்னும் சிலர் எதிர்காலத்தில் நடக்கவிருப்பவைகளை அல்லது தொலைந்த பொருட்கள் இருக்கின்ற இடங்களைக் காட்டித் தருபவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்கின்றனர். இப்படிப்பட்டவர்களிடம் அறிவிலிகள் வந்து தமது தொலைந்து போன பொருட்களைப் பற்றி முறை யிடுகின்றனர். அதற்கவர்கள் தமது அடிவருடிகளான ஷைத்தானின் துணைகொண்டு அது பற்றி அவர்களுக்கு அறிவித்துக் .கொடுக்கிறார்கள்.

வேறு சிலர் நெருப்பில் நடத்தல், ஆயுதங்களால் தன்னை வெட்டிக்கொள்ளுதல், வாகனங்களைத் தங்கள் மீது ஏற்றுதல் போன்ற சிலவற்றைச் செய்து தங்களை அவ்லியாக்களாகக் காட்டுகின்றனர். உண்மையில் இவை ஷைத்தானின் செயல்களான மந்திரம் (Magic) ஆகும். அல்லது இவை யாதார்த்தமற்ற சில தந்திரோ பாயங்களாகும்.

# கப்ருகளில் அடங்கப்பட்டோருக்கு அறுத்துப் பலியிடலும் நேர்ச்சை செய்தலும்

ஷிர்க்கிற்கு இட்டுச்செல்லக்கூடிய எல்லா வழிகளையும் நபி(ஸல்) அவர்கள் அடைந்து விட்டு அவை பற்றி எச்சரிக்கையும் செய்தார்கள். அப்படி அவர்கள் எச்சரிக்கை செய்த விடயங்களில் ஒன்றுதான் கப்ரு விடயமாகும். கப்ருகளிலேயே அடங்கப்பட்டோரை வணங்காமல் இருக்கவும் அவர்கள் விடயத்தில் எல்லை மீறாமல் இருக்கவும் சில முன் ஏற்பாடுகளையும் செய்தார்கள்.

அவை:-

1) அவ்லிய்யாக்கள், நல்லடியார்கள் விடயத்தில் எல்லை மீறுவதை எச்சரித்தார்கள். ஏனெனில் அவர்கள் விடயத்தில் எல்லை மீறுவது அவர்களை வணங்குவதற்கு வழிவகுக்கும்.

“(நல்லடியார்கள் விடயத்தில்) எல்லை மீறுவதை நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். உங்களுக்கு முன்னர் இருந்தோர் அழிவதற்குக் காரணம் (நல்லடியார்கள் விடயத்தில்) அவர்கள் எல்லை மீறி நடந்ததேயாகும்”

என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: அஹ்மத், திர்மிதி, இப்னு மாஜா)

"நஸாராக்கள், மர்யமுடைய மகன் (ஈஸாவை) அளவு கடந்து புகழ்ந்தது போல் என்னை நீங்கள் அளவு கடந்து புகழாதீர்கள். மாறாக நான் அல்லாஹ்வுடைய ஒரு அடியான். எனவே, அல்லாஹ்வுடைய அடியாரும் அவனுடைய தூதருமாகும் என்று நீங்கள் கூறுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: புகாரி)

2) கப்ருகள் மீது கட்டிடங்கள் கட்டுவதை எச்சரித் தார்கள்.

அபுல் ஹய்யாஜ் அல் அஸதீ என்பவர் அறிவிக் கிறார். அலி (ரழி) அவர்கள் என்னிடம் பின்வருமாறு சொல்லி என்னை அனுப்பிவைத்தார்கள். "என்னை ரஸூல் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த அதே பணிக்காகவே உம்மை நான் அனுப்புகிறேன். எந்தச் சிலையையும் உடைக்காமல் விட்டுவைக்காதே! நிலத்தை விட்டும் உயர்த்தப்பட்ட எந்த கப்ரையும் சமப்படுத்தாமல் விடாதே!"

(ஆதாரம்: முஸ்லிம்)

மேலும் கப்ருகளைப் பூசுவதையும் அதன் மீது கட்டிடங்கள் கட்டுவதையும் நபியவர்கள் தடுத்தார்கள். "நபி(ஸல்) கப்ருகளைப் பூசுவதையும், அதன் மீது உட்காருவதையும், அதன் மீது கட்டிடங்கள் கட்டுவதையும் தடுத்தார்கள்." (ஆதாரம்: முஸ்லிம்)

3) கப்ரடியில் தொழுவதை எச்சரித்தார்கள். "நபி (ஸல்) அவர்கள் மரணப்படுக்கையில் இருந்த போது அவர்களது முகத்தில் போடப்பட்டிருந்த துணியை அகற்றுபவர்காளாக இருந்தார்கள். நான் அதனை சரிசெய்தால் அவர்கள் எடுத்துவிடுவார்கள். இவ்வாறு இருக்கும் போதே அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் "யூத, கிரிஸ்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! அவர்கள் தங்களது நபிமார்களின் கப்ருகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொண்டார்கள்."

அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி)
ஆதாரம் : புகாரி, முஸ்லிம்

"அறிந்து கொள்ளுங்கள்! உங்களுக்கு முன்னிருந்தோர் தங்களது நபிமாரின் கப்ருகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக்கொண்டனர். நீங்களும் அவற்றை வணக்கஸ் தலங்களாக ஆக்காதீர்கள் அதனைவிட்டும் உங்களை நான் தடுக்கிறேன்." என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(ஆதாரம்: முஸ்லிம்)

கப்ருகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக்கொள்வது என்பதன் அர்த்தம் அவற்றிடத்திலே தொழுவதாகும். அவற்றின் மீது பள்ளிகள் கட்டப்படா விட்டாலும் சரியே!

எந்த இடத்தில் தொழ நாடினாலும் அவ்விடம் பள்ளியாகவே கருதப்படும். "பூமி எனக்கு மஸ்ஜிதாகவும் சுத்தமாகவும் ஆக்கித்தரப்பட்டுள்ளது" என நபியவர்கள்

நவின்றார்கள். (ஆதாரம்: புகாரி) அவற்றின் மீது பள்ளிவாசல்கள் கட்டப்படுமானால் நிலமை படு மோசமானதாகும்.

இந்த எச்சரிக்கைகளைப் பெரும்பாலான மக்கள் அலட்சியம் செய்து தடுக்கப்பட்ட விடயங்களைச் செய்து ஷிர்க்கிலே வீழ்ந்து விட்டிருக்கின்றனர். கப்ருகள் மீது பள்ளிகளையும், ஸியாரத்துக்களையும், மகாம்களையும் கட்டுகின்றனர். கப்ருகளை தரிசிப்பதற்குரிய இடங்களாக மாற்றி அவ்விடத்தில் அறுத்துப்பலியிடல், அதில் அடங்கப்பட்டவர்களிடம் பிரார்த்தித்தல், உதவி தேடல், அவர்களுக்காக நேர்ச்சை செய்தல் போன்ற பெரிய ஷிர்க்குகளைச் செய்கின்றனர்.

இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) கூறுகிறார்கள்: கப்ருகள் விடயத்தில் நபியவர்களும் அவர்களது தோழர்களும் நடந்து கொண்ட விதத்தையும், இன்று மக்கள் நடந்து கொள்ளும் முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டு நிலைகளுக்கிடையிலும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டு கொள்ளலாம். இரு நிலைகளும் ஒன்று சேரவே முடியாத அளவு இருக்கின்றது. நபியவர்கள் கப்ருகளை நோக்கித் தொழுவதைத் தடுத்தார்கள். இவர்கள் கப்ருகளை நோக்கித் தொழுகிறார்கள். அவற்றை வணக்கஸ் தளங்களாக ஆக்குவதைக் கண்டித்தார்கள். இவர்கள் அதன் மீது பள்ளிவாசல்களைக் கட்டி அல்லாஹ்வின்

ஆலயங்களுக்கு ஒப்பாக்குகிறார்கள். அவற்றின் மீது விளக்கேற்றுவதை நபியவர்கள் எச்சரித்தார்கள். இவர்கள் அதனைச் செய்கிறார்கள். அவ்விடத்தில் விழாக்கள் எடுப்பதைத் தடுத்தார்கள். இவர்கள் விழாக்களுக் குரியதாகவும், யாத்திரைக்குரிய இடமாகவும் அதனை ஆக்குகிறார்கள். அன்றியும் பெருநாளைக்கு ஒன்றுசேர்வதை விடவும் அதிகமாக அவ்விடத்தில் ஒன்றுசேர்கிறார்கள்.

கப்ருகளை சமப்படுத்துமாறு நபி (ஸல்) ஏவினார்கள். அபுல் ஹய்யாஜ் அல் அஸதி அறிவிக்கிறார்:- என்னைப் பின்வருமாறு கூறி அலி (ரழி) அனுப்பிவைத்தார்கள். "நபி (ஸல்) என்ன பணிக்காக என்னை அனுப்பி வைத்தா ர்களோ அதே பணிக்காக உன்னை நான் அனுப்பி வைக்கிறேன். உருவப்படங்(சிலை)களைக் கண்டால் அவற்றை உடைக்க வேண்டும். பூமியை விட்டும் உயர்த்தப்பட்ட கப்ருகளைக் கண்டால் அவற்றைச் சமப்படுத்த வேண்டும். இதுவே அந்தப் பணியாகும்."

(ஆதாரம்: முஸ்லிம்)

மேலும் துமாம பின் ஷுபிய்யி கூறுகிறார்:- "நாங்கள் புழாழா பின் உபைத் (ரழி) அவர்களுடன் ரோம் நாட்டில் ஓரிடத்தில் இருந்தோம். எங்களோடிருந்த ஒருவர் அங்கு மரணித்து விட்டார். அவருடைய கப்ரைப் பூமியை விட்டு உயர்த்த வேண்டாமென புழாழா உத்தரவிட்டு இவ்வாறு நபியவர்கள் ஏவினார்கள் என்று கூறினார்கள்.

இவர்கள் மேற்படி இரண்டு ஹதீஸ்களுக்கும் கடுமையாக மாற்றஞ் செய்கிறார்கள். பூமியை விட்டும் வீடுகள் போன்று அவற்றை உயர்த்துகிறார்கள். அதன் மீது குப்பாக்களையும் கட்டுகிறார்கள். மேலும், இமாமவர்கள் கூறுகையில் நபியவர்கள் கப்ரு விடயத்தில் காட்டிய வழிமுறைக்கும் இவர்கள் ஏற்படுத்தியிருக்கும் வழிமுறைகளுக்கும் இடையிலுள்ள பாரிய வேறுபாட்டைக் கவனித்துப் பாருங்கள். இதனால் கணிப்பிட முடியாத அளவு தீய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. மறுமையை ஞாபகப் படுத்துவதற் காகவும் அங்கு அடங்கப்பட்ட மக்களுக்காகப் பிராத்தித்துப் பிழைபொறுக்கத் தேடுவதற்காகவும் கப்ருகளை தரிசிக்கு மாறு தூண்டினார்கள். அந்த நேரத்தில் தரிசிக்கக்கூடியவன் தனக்கும் மரணித்தவருக்கும் நல்லது செய்தவனாகக் கருதப்படுவான்.

இந்த முஷ்ரிக்குகள் நிலைமையைத் தலைகீழாக மாற்றி விட்டனர். கப்ருகளை ஸியாரத் செய்வதன் நோக்கம் கப்ராளிகளை அல்லாஹ்வுக்கு நிகராக்குவதும் அவர்களிடத்தில் பிரார்த்திப்பது, தமது தேவைகளை கேட்பது, எதிரிகளை மிகைக்கக்கூடிய வாய்ப்பைத்தருமாறு வேண்டுவது போன்றவையாக ஆக்கிவிட்டனர். இதனால் தமக்கும் கப்ராளிகளுக்கும் கெட்டது செய்தவர்களாக ஆகின்றனர்.

(பார்க்க: இகாஸதுல் லஹ்பான் 1/214,215,217)

மேற்போந்த விடயங்களிலிருந்து கப்ரு (ஸியாரம்) களுக்கு அறுத்துப்பலியிடுவது, நேர்ச்சை செய்வது "ஷிர்க் அக்பர்" என்னும் பெரிய இணையாகும் என்பது தெளிவா கின்றது. ஏனெனில் கப்ருகள் மீது கட்டிடங்கள் கட்டி அவற்றை வணக்கஸ்தலங்களாக ஆக்கக் கூடியவர்கள் நபி (ஸல்) அவர்களது வழிமுறைக்கு முற்று முழுதாக மாறுசெய்கின்றார்கள். அதே நேரம் அவற்றை ஸியாரங் களாக ஆக்குகின்ற போது அறிவிலிகள், அதில் அடங்கப்பட்டோர் நல்லது செய்யவோ, தீங்கிளைக்கவோ சக்தி படைத்தவர்கள் என்றும், அவர்களிடத்தில் யாராவது உதவி தேடினால் உதவி செய்வர், தேவைகளை நிறை வேற்றுவர் என்றும் நம்புகின்றனர். இதன் வெளிப் பாடாகவே அவற்றுக்கு நேர்ச்சை செய்கின்றனர். அறுத்துப் பலியிடுகின்றனர். நிலைமை எந்தளவுக்கு முற்றி விட்ட தென்றால் கப்ருகளை அல்லாஹ்வை விட்டு விட்டு வணங்கப்படுகின்ற சிலைகளாக மாற்றிவிட்டனர்.

"யா அல்லாஹ்! எனது கப்ரை வணங்கப்படும் சிலையாக ஆக்கி விடாதே!" என்று நபியவர்கள் பிரார்த்தித்தார்கள். (ஆதாரம்: மாலிக், அஹ்மத்)

இப்படி நபியவர்கள் பிரார்த்திக்கக் காரணம் இவ்வாறு சில கப்ருகள் ஆக்கப்படும் என்பதனாலேயாகும். பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளில் இதனை நாம் காணுகிறோம். ஆனால் நபி (ஸல்) அவர்களது கப்ரைப் பொறுத்தவரை அதனை அவர்களின் துஆவின் காரணமாக

அல்லாஹ் பாதுகாத்துக் கொண்டான். இருந்த போதிலும் கூட அங்கு சில மௌட்டீகக்காரர்களால் சில கூடாத காரியங்கள் நடக்கத்தான் செய்கின்றன. எனினும் அவர்கள் நபியவர்களின் கப்ரை அடைந்து கொள்ள முடியாது. ஏனெனில் அவர்களது கப்ரு இல்லத்திலேதான் இருக்கிறது. அது பள்ளிவாயலில் இல்லை. மேலும் அதனைச் சுற்றி வேலிகளும் கட்டப்பட்டுள்ளன. இதனையே இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) அவர்கள் நூனிய்யா என்ற தனது கவிதைத் தொகுப்பில் பின்வருமாறு பாடுகிறார்.

“ரப்புல் ஆலமீன் அவர்களது பிரார்த்தனையை அங்கீ கரித்து மூன்று சுவர்களால் அதனைப்பாதுகாத்தான்.”

# சிலைகளையும்,
# நினைவுச்சின்னங்களையும்,
# கண்ணியப்படுத்துவதன் சட்டம்

"சிலைகள்" என்றால் மனிதன், மிருகம் போன்ற உயிருள்ளவற்றை உருவங்களாக செதுக்கி எடுப்பதைக் குறிக்கும்.

"நினைவுச் சின்னம்" என்றால் சில அடையாளங்கள், கற்களாகும். அவற்றிடத்திலே தமது தலைவர்கள் அல்லது கண்ணியத்துக்குரிய பெரிய மனிதர்களின் படங்களை வைத்து அவர்களை நினைவுகூறுமுகமாக அவ்விடத்தில் அறுத்துப்பலியிடுவது முஷ்ரிக்குகளது வழக்கமாக இருந்தது.

நபியவர்கள் உயிருள்ளவற்றைப் படம் எடுப்பதை எச்சரிக்கை செய்தார்கள். குறிப்பாக அறிஞர்கள், மன்னர்கள், ஆலிம்கள், தலைவர்கள் போன்ற கண்ணியத்துக் குரியவர்களின் உருவங்களைப் படம் எடுப்பதைத் தடுத்தார்கள். உருவங்களை பலகை, தாள், சுவர், சீலை போன்றவற்றில் கையினால் வரைந்தாலும் அல்லது நிழற்படங்களாக கெமறா மூலம் எடுத்தாலும் அல்லது சிற்பங்களாகச் செதுக்கி எடுத்தாலும் அது எச்சரிக்கப் பட்டதாகும்.

உருவப்படங்களை சுவரில் தொங்கவிடுவதும், சிலைகள் நினைவுச்சின்னங்களை வைத்திருப்பதும் நபியவர்களால் தடுக்கப்பட்டுள்ளது. இவை ஷிர்க்கிற்கு இட்டுச்செல்லக் கூடியவை என்பதே தடைக்கான காரணமாகும். புவியில் முதல் இணைவைத்தல் ஏற்பட்டதற்குக் காரணம் உருவப்படங்கள் வரைந்ததும் அதனைப் பேணிப்பாதுகாத்து வந்ததுமேயாகும்.

நூஹ் (அலை) அவர்களது சமூகத்தில் சில நல்லடியார்கள் இருந்தார்கள். அவர்கள் இறந்ததும் மக்கள் அதிகம் கவலைப்பட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய ஷைத்தான் அவர்களது உள்ளங்களிலேயே அந்த நல்லடியார்களை நினைவு கூறும் விதமாக அவர்கள் இருந்த இடங்களில் சில அடையாளங்களை நட்டுமாறும் அதிலே அவர்களின் பெயர்களைப் பொறிக்குமாறும் அவர்களைத்தூண்டினான். அவர்களும் செய்தார்கள். இருந்தும் அவர்களை அம்மக்கள் வணங்கவில்லை அம்மக்கள் மரணித்து கல்வியும் உயர்த்தப்பட்ட போது அடுத்து வந்த மக்கள் அவர்களை வணங்க ஆரம்பித்தனர்.

(ஆதாரம்: புகாரி)

இந்த உருவப்படங்களால் ஏற்பட்ட ஷிர்க்கைக் கண்டிப்பதற்காக நூஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பிய போது அம்மக்கள் நபியவர்களின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டனர். பின்னர் சிலைகளாக மாற்றப்பட்ட அந்த உருவப்படங்களையே வணங்குவோம் என்பதில் பிடிவாதமாக இருந்தனர்.

“மேலும் அவர்கள் உங்கள் தெய்வங்களை விட்டு விடாதீர்கள், இன்னும் வத்து, ஸுவாஉ, யகூஸ், யஊக், நஸ்ரு ஆகியவற்றை நிச்சயமாக நீங்கள் விட்டு விடாதீர்கள்” என்றும் சொல்கின்றார்கள்” (71:23) என்று அல்லாஹ் அவர்களது நிலைமையை விளக்குகிறான். மேற்படி வசனத்தில் சொல்லப்பட்ட பெயர்கள் அந்த நல்லடியார்களது பெயர்களாகும்.

நினைவுச் சின்னங்களால் ஏற்பட்ட ஷிர்க்கையும், அல்லாஹ்வுடைய தூதரின் அழைப்பை ஏற்க மறுத்ததையும் இங்கு நாம் கவனிக்கக் கடைமைப்பட்டுள்ளோம். இதன் காரணமாகவே தூபான் என்ற வெள்ளப்பிரளயத்தைக் கொண்டு அவர்களை அல்லாஹ் அழித்து அவனதும், அவனது படைப்புகளதும் கோபத்துக் குரியவர்களாக ஆக்கினான்.

உருவப்படம் வரைவதும் அதனைப் பாதுகாப்பதும் எந்தளவு பாரதூரமானது என்பதை விளங்கிக்கொள்ள இதுவே போதுமான சான்றாகும். இதனாலேயேதான் நபி (ஸல்) அவர்களும் உருவப்படம் வரைவோரை சபித்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் மறுமையில் கடுமையான வேதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும், உருவப் படங்களை நொறுக்குமாறும், உருவப்படங்கள் உள்ள வீடுகளுக்கு (ரஹ்மத்துடைய) மலக்குகள் நுழைய மாட்டார்கள் என்றும் கூறியுள்ளார்கள். இப்படியான தடைகளை விதிக்கக்காரணம் முஸ்லிம் உம்மத்தை

அகீதாவில் ஏற்படுகின்ற சீரழிவிலிருந்து பாதுகாப்பதற்காக வேயாகும். ஏனெனில், இப்புவியில் ஏற்பட்ட முதல் ஷிர்க்கிற்கு இதுவே காரணமாகும். இந்த நினைவுச் சிலைகளை சபைகளில் நாட்டினாலும், பூந்தோட்டங்கள், விளையாட்டு மைதானங்களில் நாட்டினாலும் அது ஹறாமாகும். ஏனெனில், அது ஷிர்க்கின்பால் இட்டுச் செல்லக் கூடியதாகவும் இஸ்லாமிய அகீதாவைச் சீரழிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

இன்றைய உலகில் காபிர்கள் இதனைச் செய்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கென்று ஒரு நேர்த்தியான அகீதா (கொள்கை) கிடையாது என்பது வேயாகும்.

காபிர்களுக்கு ஒப்பாக முஸ்லிம்களும் இவற்றைச் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் முஸ்லிம்கள் தங்களின் பலம், ஈடேற்றம், ஆகியவற்றின் அடித்தளமான அகீதாவை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

# மார்க்கத்தை பரிகாசம் செய்தல், அதன் புனிதத்தைக் கெடுத்தல் பற்றிய சட்டம்.

தீனைப் பரிகாசம் செய்வது இஸ்லாத்தை விட்டும் முற்று முழுதாக வெளியேற்றிவிடுகின்ற றித்தத் ஆகும்.

"(நபியே! அவர்களிடம்) அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனது தூதரையுமா நீங்க்ள் பரிகசித்துக் கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்பீராக! நீங்கள் (செய்யும் பரிகாசத்திற்கு வீண்) சாட்டுக் கூற வேண்டாம். உங்களின் விசுவாசத்திற்குப் பின் திட்டமாக நீங்கள் நிராகரித்தே விட்டீர்கள்" (9:65,66) என்று அல்லாஹ் கூறுகிறான்.

இவ்வசனம் அல்லாஹ்வை, அவனது தூதரை, அவனது வேத வசனங்களைப் பரிகாசம் செய்வது நிராகரிப்பாகும் என்று அறிவித்துக்கொண்டிருக்கிறது.

இம்மூன்றில் ஒன்றை எவன் பரிகசிக்கின்றானோ அவன் மூன்றையும் பரிகசித்தவனாகவே கருதப்படுவான். ஏனெனில் முனாபிக்குகள் ரஸூல் (ஸல்) அவர்களையும் அவர்களது தோழர்களையுமே பரிகாசம் செய்தனர். அப்போதுதான்

இவ்வசனம் இறங்கியது.

இம்மூன்று விடயங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவைகளாகும். தவ்ஹீதை அலட்சியம் செய்து இறந்தோரிடம் பிரார்த்திப்பதைக் கௌரவமாகக் கருதக்கூடியவர்களிடம் தௌஹீதைக் கொண்டு ஏவி ஷிர்க்கை விட்டும் தடுத்தால் அதை அவர்கள் அலட்சியப் படுத்துவார்கள். இதனாலேயே திருமறை இப்படிக் கூறுகின்றது. "(நபியே) அவர்கள் உம்மைப் பார்த்து விட்டால் பரிகாசமாகவே தவிர அவர்கள் உம்மை எடுத்துக்கொள்வதில்லை. அல்லாஹ் (தன்னுடைய) தூதராக அனுப்பினானே அவர்தானா இவர்? (என்று கூறுகின்றனர்) (தெய்வங்களாகிய) அவற்றின் மீது நாம் உறுதியாக இல்லாதிருந்தால், நம்முடைய (வணக்கத்திற் குரிய) தெய்வங்களை விட்டும் திருப்பி நம்மை இவர் வழிகெடுக்கச் சமீபித்திருப்பார்" (25:41,42) நபி (ஸல்) அவர்கள் அம்மக்களை ஷிர்க்கை விட்டும் தடுத்தபோது நபியவர்களை அவர்கள் பரிகாசம் செய்தனர்.

நபிமார்கள் தவ்ஹீதின்பால் அழைப்பு விடுத்துக் கொண்டிருந்த போதெல்லாம் முஷ்ரிக்குகள் அவர்களை மடையர்கள், பைத்தியகாரர்கள், வழிகேடர்கள் என்று குறை கூறிக்கொண்டே இருந்தனர். இதற்குக் காரணம் இவர்களது உள்ளங்களில் ஷிர்க் பற்றி இருந்த மதிப்பும் மரியாதையும்தான். இவ்வாறே இன்றும் அப்படிப்பட்டவர்கள் தவ்ஹீதின்பால் அழைக்கப்படும் போது அழைப்பவர்களைப் பரிகசிக்கின்றனர்.

“மனிதர்களில் அல்லாஹ்வையன்றி அவனுக்கு இணையாளர்களை (சமமானவர்களாக) ஆக்கிக் கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பது போன்று அவர்களை நேசிப்பவர்களும் இருக்கின்றனர்” (2:165) என்று அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ்வை நேசிப்பது போன்று அவனது படைப்புக்களை நேசிக்கக்கூடியவன் முஷ்ரிக்காவான். இங்கு நாம் அல்லாஹ்வுக்காக நேசிப்பதற்கும், அல்லாஹ் வோடு நேசிப்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

கப்ருகளைச் சிலைகளாக ஆக்கிக் கொண்டிருப் பவர்கள் தவ்ஹீதையும் அல்லாஹ்வை வணங்குவதையும் பரிகசிப்பதை நாம் காணலாம். அல்லாஹ் அல்லாத அவர்களுக்கு சிபாரிசு செய்வதற்காக அவர்கள் ஆக்கிக்கொண்டோரை அல்லாஹ்வைவிட மேலாகக் கண்ணியப்படுத்துகின்றனர்.

அல்லாஹ்வைக்கொண்டு துணிந்து பொய்ச்சத்தியம் செய்யும் இவர்கள் அவர்களது ஷெய்குகளைக்கொண்டு பொய்யாகவேனும் சத்தியம் செய்ய அஞ்சுகின்றனர். இன்றும் பலர் தமது ஷெய்குமார்களைக் கொண்டு அவர்களது கப்ரடியிலோ அல்லது வேறு இடங்களிலோ உதவி தேடுவது, பள்ளிவாசலில் ஸஹர் நேரத்தில் இருந்துகொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதை விட பயன்தரவல்லது என்று நம்புகின்றனர். அத்துடன் தமது தரீக்காவை விட்டும் தவ்ஹீதின் பால் செல்லக்

கூடியவர்களைப் பரிகாசம் செய்கின்றனர்.

அவர்களில் பெரும்பாலோர் பள்ளிவாசல்களைப் பாழ் படுத்திவிட்டு கப்ருஸ்தானங்களை உயிர்ப்பிப்பவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறு இவர்கள் செய்வது ஷிர்க்கின் மீது இவர்கள் கொண்டுள்ள மரியாதையால் அல்லாஹ்வையும், அவனது வேத வசனங்களையும், அவனது தூதரையும் பரிகசிப்பதைத் தவிர வேறென்ன?

(பார்க்க: மஜ்மூஉல் பதாவா 15/48,49)

இது பொரும்பாலும் இன்று கப்ரு வணங்கிகளிடமே காணப்படுகிறது.

**பரிகாசம் இரு வகைப்படும் :**

1. (9:65) இவ்வசனம் இறங்கக்காரணமாக இருந்தவர்கள் செய்தது போன்று வெளிப்படையாகப் பரிகாசம் செய்வது. “இந்த எங்களுக்கு ஓதித்தருகின்ற இவர்களைவிட வயிறு வளர்ப்பவர்கள், பொய்யர்கள், கோழைகள் யாருமில்லை.” என்று அவர்கள் நபி (ஸல்) அவர்களையும் ஸஹா பாக்களையும் பார்த்துக் கூறினர்.

இன்னும் அதே பாணியில் பரிகாசம் செய்பவர்களைக் காணலாம். “ஐந்தாவது மார்க்கத்தை (மத்ஹபைக்) கொண்டு வந்திருக்கிறார்கள்” என்றோ அல்லது நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கக் கூடியவர்களைக் கண்டால் பரிகாசத்

தொணியில் "ம்......தீன் தாரிகள் வருகிறார்கள்" என்றோ கூறிப் பரிகாசம் செய்கின்றனர்.

2. மறைமுகமாக பரிகாசம் செய்வது:- இது நிறைய நடக்கிறது. கண்களால் சாடை செய்வது நாக்கை நீட்டிப் பரிகாசிப்பது, கையால் சைகை செய்வது போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இஸ்லாம் இந்த நூற்றாண்டிற்குப் பொருந்தாத மார்க்கம். இது மத்திய காலப் பகுதிக்குத்தான் பொருத்தமானது. இது குற்றவியல் தண்டனைகளில் கடுமையானதும், காட்டு மிராண்டித்தனமானதுமான போக்கைக் கடைப்பிடிக்கிறது. பெண்களைக் கொடுமைப்படுத்துகின்றது. இறைச் சட்டங்களை விட மனித சட்டங்களே மக்களுக்குச் சிறந்தது என்றும் தவ்ஹீதின்பால் அழைத்து கப்ரு வணக்கத்தைக் கண்டிப்போரை தீவிர வாதிகள், முஸ்லிம்களைப் பிளவுபடுத்துவோர், வஹ்ஹாபிகள் ஐந்தாவது மத்ஹபை உண்டாக்கியோர் என்றும் கூறுவது இவ்வகையைச் சார்ந்த பரிகாசமாகும்.

மேலும் சுன்னாவைப் பின்பற்றுவோரை பல வகையான கிண்டல் வார்த்தைகளைப் பயன்படுத்திப் பரிகாசம் செய்வதும் இவ்வகையைச் சார்ந்ததே.

# அல்லாஹ் இறக்கியதைக் கொண்டு தீர்ப்புக்குக் கூறாமல் வேறு சட்டங்களைப் பின்பற்றுதல்.

அல்லாஹ்வுடைய சட்டங்களுக்குக் கட்டுப்படுவது, அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது, இரத்தம், சொத்துக்கள், அடிப்படையான விடயங்கள், பேச்சுக்கள் போன்றவற்றில் ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளின் போது அல்குர்ஆன் சுன்னாவின்பால் திரும்புவது போன்ற அனைத்தும் ஈமான் வேண்டி நிற்கக்கூடிய அம்சங்களாகும்.

அல்லாஹ் நீதியாளனாக இருக்கிறான். அவனிடமே நீதி கேட்க வேண்டும். ஆட்சியாளர்கள் அவன் இறக்கி வைத்ததைக் கொண்டே தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

குடி மக்கள் அல்குர்ஆன் சுன்னாவிடமே தீர்ப்புக் கேட்டுச் செல்ல வேண்டும்.

ஆட்சியாளர்கள் விடயத்தில் பின்வருமாறு அல்லாஹ் கூறுகிறான்.

“(விசுவாசிகளே! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுமாறும், மனிதர்களுக்கிடையில் நீங்கள்

தீர்ப்புக் கூறினால், (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்." (4:58)

குடிமக்கள் விடயத்தில் பின்வருமாறு கூறுகிறான்:- "விசுவாசங் கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்படியுங்கள் தூதர்களுக்கும் வழிப்படுங்கள் (அல்லாஹ் வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்படிந்து நடக்கும்) அதிகாரம் உடைய (தலை) வர்களுக்கும் கீழ்படியுங்கள். ஆனால் யாதொரு விடயத்தில் நீங்கள் பிணங்கிக் கொண்டால், அதனை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் திருப்பி (ஒப்படைத்து) விடுங்கள். (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஏற்றுக் கொள்ளுங்கள்) மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் இதுதான் நன்மையாகவும், மிக அழகான முடிவாகவும் இருக்கும்." (4:59)

தொடர்ந்து அல்லாஹ்வுத்தஆலா ஈமானும், இறை சட்டங்களைக் கொண்டு தீர்ப்பு வழங்காமல் இருப்பதும் ஒன்றுசேரமாட்டாது என்பதைப் பின்வரும் வசனங்களில் விளக்குகிறான்.

"(நபியே!) உம்மீது இறக்கப்பட்ட (இவ்வேதத்)தையும், உமக்கு முன்னர் இறக்கிவைக்கப்பட்டுள்ள (வேதங்கள் யா)வற்றையும் மெய்யாகவே தாங்கள் விசுவாசிப்பதாக

எண்ணிக் கொண்டிருப்போர்பால் நீர் பார்க்கவில்லையா? அவர்கள் தாகூத்தை (ஷைத்தானை) தீர்ப்புக் கூறுபவனாக ஆக்க நாடுகிறார்கள். (ஆனால்) அவர்களோ, அவனை நிராகரித்து விடவேண்டுமெனத் திட்டமாகக் கட்டளையிடப் பட்டுள்ளார்கள். அந்த ஷைத்தானோ அவர்களை வெகு தூரமான வழிகேட்டில் வழிகெடுத்து விடவே நாடுகிறான்." (4:60)

மேலும் அல்லாஹ் கூறுவதைக் கவனியுங்கள்! "ஆனால் உமதிரட்சகன் மீது சத்தியமாக அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக ஆக்கி, நீர் செய்யும் தீர்ப்பைத் தங்கள் மனங்களில் எத்தகைய அதிருப்தியையும் பெறாமல் முற்றிலும் ஏற்றுக்கொள்ளாத வரையில் அவர்கள் விசுவாசிகளாக மாட்டார்கள். (4:65)

இது மாத்திரமல்ல, இன்னும் மிகத் தெளிவாகவே அல்லாஹ் அவன் இறக்கியதைக் கொண்டு தீர்ப்பு வழங்காதோரதும் அவனது தீர்ப்பை ஏற்று அதற்குக் கட்டுப்படாதோரதும் ஈமானை மறுத்துரைக்கிறான். அதே போன்று அவன் இறக்கியதைக் கொண்டு தீர்ப்பு வழங்காத ஆட்சியாளர்களைக் காபிர்கள், பாவிகள், அநியாயக் காரர்கள் என்றும் கூறுகின்றான்.

"எவர் அல்லாஹ் இறக்கிவைத்ததைக்கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அத்தகையோர்தாம் நிராகரிப் பாளர்கள்". (5:44)

“எவர் அல்லாஹ் இறக்கியதைக் கொண்டு தீர்ப்பளிக்க வில்லையோ அத்தகையோர்தாம் அநியாயக்காரர்கள்.” (5:45)

“இன்னும் எவர் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அத்தகையோர் பாவிகாளாவர்.” (5:47)

இஜ்திஹாத் சம்பத்தப்பட்ட விடயங்களாக இருந்தாலும் அல்லாஹ் இறக்கியதைக் கொண்டே தீர்ப்புக் கேட்கவும், வழங்கவும் வேண்டும். அல்குர்ஆன் சுன்னாவிற்கு ஒத்துவரக்கூடியவை இவ்விடயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். மத்ஹப் வெறியோ, தனிமனித வழிபாடோ இவ்விடயத்தில் சரிவரமாட்டாது.

சட்டப்பிரச்சினைகளில் சில தனியார் சட்டங்களில் மாத்திரம்தான் அல்லாஹ் இறக்கியதைக் கொண்டு சில நாடுகளில் தீர்ப்புக் கூறப்படுவதுண்டு. இப்படியில்லாமல் கண்டிப்பாக எல்லாப்பிரச்சினைகளிலும் அல்லாஹ் இறக்கியதைக் கொண்டே தீர்ப்புக் கூற வேண்டும். ஏனெனில் இஸ்லாத்தில் ஒரு பகுதியை ஏற்று மறு பகுதியை விடுவதற்கு அனுமதி கிடையாது. அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:-

“விசுவாசங்கொண்டோரே! நீங்கள் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள் ” (2:208)

“நீங்கள் வேதத்தில் சிலவற்றை விசுவாசித்து (மற்றும்) சிலவற்றை நிராகரிக்கின்றீர்களா?” (2:85)

இவ்வாறே மத்ஹப்வாதிகள் தமது இமாம்களின் கருத்துக்களை குர்ஆன் ஹதீஸோடு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். ஒத்துவந்தால் எடுக்கவேண்டும். இன்றேல் பிடிவாதம் இல்லாமல் குர்ஆன் ஹதீஸின் பக்கம் மீள வேண்டும். குறிப்பாக அகீதா விடயத்தில் இவ்விதி பேணப்படவேண்டும். இக்கருத்தையே எல்லா இமாம்களும் கூறியுள்ளனர். இவ்விடயத்தில் யாராயினும் முரண்டு பண்ணுவார்களாக இருந்தால் அவர்களும் பின்வரும் திருமறை வசனம் எச்சரிக்கின்ற கூட்டத்தில் சேர்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

“அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரி களையும், சந்நியாசிகளையும், மர்யமுடைய குமாரர் மஸீஹையும் தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டனர்.” (9:31)

இவ்வசனம் கிரிஸ்தவர்கள் விடயத்தில் மாத்திரம் குறிப்பானதல்ல. மாறாக அவர்களைப் போன்று செய்கின்ற அனைவரையும் இது உள்ளடக்கும்.

யார் அல்லாஹ் இறக்கிவைத்ததைக் கொண்டு தீர்ப்புச் சொல்லாமல் அல்லாஹ்வுக்கும் ரசூலுக்கும் மாறு செய்கிறானோ அல்லது தனது மனோ இச்சைக்குக்

கட்டுப்பட்டு இறைச்சட்டத்தை விட்டு விட்டு மனித சட்டங்களை எடுத்துக்கொள்கிறானோ அவன் தனது கழுத்திலிருந்து இஸ்லாம், ஈமான் என்ற வளையத்தைக் கழற்றியவனாகக் கருதப்படுவான். அவன் தன்னை ஒரு மு.்.மின் என்று கருதிக் கொண்டிருந்தாலும் சரியே! இக்கருத்தையே அல்குர்ஆனும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

"அவர்கள் தாகூத்தை (ஷைத்தானை)த் தீர்ப்புக் கூறுபவனாக ஆக்க நாடுகிறார்கள். (ஆனால்) அவர்களோ அவனை நிராகரித்துவிட வேண்டுமெனத் திட்டமாகக் கட்டளையிடப்பட்டுள்ளார்கள்." (4:60)

தாகூத்தை நிராகதிப்பது தவ்ஹீதின் அடிப்படைகளில் ஒன்றாகும். (மேலும் பார்க்க அல்குர்ஆன் 2:99)

தாகூத்களிடம் தீர்ப்புக்கேட்டுச் செல்வது அவற்றை ஈமான் கொள்வதாகவே கருதப்படும்.

இறைச்சட்டங்கள் மனிதர்களுக்கு பயன்தரக்கூடியன என்ற கருத்தில் மாத்திரம் அவற்றுக்குக் கட்டுப்படக்கூடாது. பகரமாக அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுதல் எனும் இபாதத்தாக திகழ்கிறது. அல்லாஹ் அருளியதைக் கொண்டு தீர்ப்புவழங்காதோருக்கு ஈமான் இல்லை எனக்கூறப்படுவதன் மூலம் அல்லாஹ்வின் சட்டங்களைக் கொண்டு தீர்ப்பு வழங்குவதன் அவசியத்தையும் இது

ஈமானில் ஒரு அம்சமாகவும், அடிப்படை அகீதாவாகவும், இறைவணக்கமாகவும் திகழ்கிறது என்பதற்கான சான்றாகத் திகழ்கின்றது என்ற நோக்கிலேயே அச்சட்டங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இறைச்சட்டங்களில் தமக்கு சாதகம் உண்டு என்ற காரணத்திற்காக அவற்றை எடுத்துக் கொள்வோரை அல்லாஹ் பின்வரும் வசனங்களில் கண்டிக்கிறான்.

"தங்களுக்கிடையில் (ஏற்பட்டவற்றில் அல்லாஹ்வின் தூதராகிய) அவர் தீர்ப்பளிக்க அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் வாருங்கள்" என அவர்கள் அழைக்கப்பட்டால், அவர்களில் ஒரு பிரிவினர் புறக் கணிக்கக்கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் உண்மை அவர்கள் பக்கம் இருக்குமானால் கீழ்படிந்தவர்களாக (விரைந்து) அவரிடம் வருவார்கள்," (24:48,49)

அவர்கள் தமது மனோ இச்சைக்கு மாற்றமானதைப் புறக்கணித்தார்கள். தமக்குச் சாதகமானதை எடுக்க விரைந்தார்கள். ஆனால் அவர்களிடமும் அல்லாஹ்வுடைய தூதரிடமும் தீர்ப்புக்கேட்டுச் செல்வது ஓர் இபாதத் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. எனவேதான் அல்லாஹ் அவர்களைக் கண்டிக்கிறான்.

**இறைசட்டங்கள் அல்லாதவற்றைக் கொண்டு தீர்ப்பு வழங்குவோரின் நிலை?**

"எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் நிச்சயமாக காபிர்கள்தாம்" (5:44)

இவ்வசனத்தின்படி அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பு வழங்காமல் விடுவது நிராகரிப்பு (குப்ர்) என்பது தெளிவாகின்றது. இக்குப்ர் சில வேளை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடுகின்ற பெரிய குப்ராகவும், சில வேளை இஸ்லாத்தை விட்டும் வெளி யேற்றாத சிறிய குப்ராகவும் இருக்கும். இது தீர்ப்பு வழங்குகின்றவரின் நம்பிக்கையைப் பொறுத்து அமையும்.

அவர், இறைசட்டங்களைக் கொண்டு தீர்ப்பு வழங்குவது வாஜிப் இல்லை. அதில் மனிதனுக்குத் தேர்வுச்சுதந்திரம் இருக்கிறது என்றோ அல்லது இறைச் சட்டங்களை இழிவாகக் கருதி இவையல்லாத மனித சட்டங்கள் சிறந்தவை என்றோ, இறைசட்டங்கள் இக்காலத்திற்கு ஒவ்வாதவை என்றோ கருதுவாராயின் அல்லது அல்லாஹ் அருளிய சட்டங்களல்லாதவற்றைக் கொண்டு தீர்ப்பு வழங்குவதன் மூலம் காபிர்களினதும், நயவஞ்சகர் களினதும் திருப்தியை எதிர்பார்ப்பாராயின் அது "குப்ர் அக்பர்" என்னும் பெரிய நிராகரிப்பு ஆகும். அதே வேளை இறைச்சட்டங்களைக் கொண்டு தீர்ப்புச் சொல்வது வாஜிப் என்றும் அவற்றைக்கொண்டு தீர்ப்புச் சொல்லாதோர்

பாவிகள் என்றும் நம்பிய நிலையில் இறைச்சட்டங்கள் அல்லாதவற்றைக் கொண்டு தீர்ப்புச் சொல்வாராக இருந்தால் அவர் "குப்ர் அஸ்கர்" எனும் சிறிய நிராகரிப்பைச் செய்தவராகக் கருதப்படுவார்.

ஒரு விடயத்தில் இறைச்சட்டம் என்ன என்பதை அறிய முயற்சி (இஜ்திஹாத்) செய்தும் அவருக்குச் சரியாக இறைச்சட்டம் தெரியாவிட்டால் அவர் தவறிழைத்தவராகக் கருதப்படுவார். அவருடைய முயற்சிக்குக் கூலி வழங்கப்படுகின்ற அதேவேளை அவருடைய தவறு மன்னிக்கப்படும்.

(பார்க்க: ஷரஹுத் தஹாவிய்யா, பக் 363,364)

மேற்படி விளக்கம் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு உரியதாகும். பொதுப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) கூறுகிறார்கள்:- தீர்ப்புச் சொல்லக்கூடியவர் மார்க்கப்பற்றுள்ளவராக இருந்தும் தனக்கு அறிவில்லாத ஒரு விடயத்தில் தீர்ப்புச் சொல்வாராக இருந்தால் அவர் நரகவாசியாவார். அவர் அறிஞராக இருந்து தான் அறிந்த சத்தியத்திற்கு மாற்றமாகத் தீர்ப்புச் சொல்வாராக இருந்தால் அவரும் நரகவாசியாவார். அறிவில்லாமல் நீதமில்லாமல் தீர்ப்புச் சொல்வாராக இருந்தால் அவர் நரகவாசியாக இருப்பதே மிகப்பொருத்தமானதாகும்.

இவை ஒரு தனி நபருடைய விடயத்தைப் பொறுத்து

அமையக்கூடிய தீர்ப்பாகும். முஸ்லிம்களது தீன விடயத்தில் பொதுப்படையாக அவர் வழங்கக்கூடிய தீர்ப்பைப் பொறுத்தவரை சத்தியத்தை அசத்தியமாகவும், அசத்தியத்தை சத்தியமாகவும், சுன்னாவை பித்ஆவாகவும், பித்ஆவை சுன்னாவாகவும், நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும், அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏவியதைத் தடுப்பவராகவும், தடுப்பவற்றை ஏவுபவராகவும் இருப்பாராக இருந்தால் அவர் பற்றிய தீர்ப்பை வழங்குகின்ற உரிமை சர்வஉலகங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வையே சாரும்.

"அதிகாரங்கள் அனைத்தும் அவனுக்கே உரியதாகும்." (28:88)

"அவன் எத்தகையவன் என்றால் தன்னுடைய தூதரை நேர்வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பிவைத்தான். சகல மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச் செய்வதற்காக (தன் தூதரை அனுப்பி வைத்தான்) இன்னும் (இதற்குச்) சாட்சியாக இருக்க அல்லாஹ் போதுமானவன்" (48:28)

(பார்க்க: மஜ்மூஉல் பதாவா, 35/388)

மேலும் இமாமவர்கள் கூறுகையில்:-

அல்லாஹ் அவனது தூதர் மீது அருளியதைக் கொண்டு தீர்ப்பளிப்பது வாஜிப் என்பதை யாராவது நம்ப மறுத்தால் அவர் காபிராவார்.

அல்லாஹ் அருளியதைப் பின்பற்றாமல் தான் சரியெனக்

கருதுவதைக் கொண்டு மக்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்குவது ஆகும் என்று கருதுபவரும் காபிராவார். உலகில் தோன்றிய எந்த சமுதாயமாக இருந்தாலும் நீதியைக்கொண்டு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று ஏவியே வந்திருக்கிறது. ஆனால் அச்சமுதாயங்களின் தலைவர்கள் நீதியெனக் கருதுவதே அவர்களுக்கு நீதியாக இருக்கும்.

முஸ்லிம்கள் பட்டியலில் தங்களையும் இணைத்துக் கொண்டுள்ள பலர் அவர்களது மூதாதையர்களிடமிருந்து பெற்று வந்த சம்பிரதாயங்களைக் கொண்டே தீர்ப்பு வழங்கி வருகின்றனர். குர்ஆன் சுன்னாவை விட்டு விட்டு இவற்றைக் கொண்டு தீர்ப்பு வழங்குவதே அவசியமெனவும் கருதுகின்றனர். இதுவே "குப்ர்" ஆகும்.

அதிகமான மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள் கிறார்கள். ஆனால் தாம் வழிபடுகின்ற தலைவர்கள் காட்டித் தந்ததைக் கொண்டே தீர்ப்புச்சொல்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் இறைச்சட்டங்கள் அல்லாதவற்றைக் கொண்டு தீர்ப்புக்கூறுவது கூடாதென்று அறிந்தும் அதன்படி நடக்காமல் இருப்பவர்களாக இருந்து, இறைச் சட்டங்களுக்கு மாற்றமாகத்தீர்ப்பு கூறுவது கூடும் என்று கருதுபவர்களாக இருந்தால் அவர்கள் காபிர்கள் ஆவர் (பார்க்க: மின்ஹாஜுஸ் ஸுன்னா அந்நபவிய்யா) அஷ்ஷெய்க் முஹம்மத் பின் இப்றாஹிம் அவர்கள் குறிப்பிடுகையில்: அல்லாஹ் அல்லாதவர்களிடம் தீர்ப்புக் கேட்டுச்செல்வது கூடாது. மேலும் அல்லாஹ்வுடைய

சட்டங்களே சத்தியமானவை என்று நம்பி அல்லாஹ் அல்லாதவர்களிடம் தீர்ப்புக் கேட்டுச் செல்வதை சிறிய குப்ர் என்று சொல்வதாக இருந்தால் அது ஒன்று அல்ல இரண்டு முறை நடக்க வேண்டும். மாறாக இறைசட்டங்கள் அல்லாதவற்றைக் கொண்டே தீர்ப்பு வழங்கி தொடர்ந்தும் அவற்றிற்க்கு கட்டுப்பட்டு நடந்து விடுவதானது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகின்ற பெரிய குப்ர் ஆகும். நாம் தவறு செய்கிறோம். இறைச்சட்டங்களே நீதியானவை என்று கருதினாலும் சரியே.

(பார்க்க: பதாவா அஷ்ஷெய்க் முஹம்மத் பின் இப்றாஹிம் 12/280)

இங்கே ஷெய்க் அவர்கள் தொடர்ந்தேர்ச்சியாக இடம் பெறாத குறிப்பிட்ட சில விடயங்கள் சம்பந்தப்பட்ட தீர்ப்பிற்கும், தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற பொதுப்படையான தீர்ப்பிற்கும் இடையில் வித்தியாசத்தைக் குறிப்பிடுகிறார்கள். மேலும் இந்த ரீதியில் இடம் பெறக்கூடிய குப்ர் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக் கூடியது என்றும் அடித்துக் கூறுகிறார்கள். ஏனெனில் இஸ்லாமிய ஷரீஅத்தின் பக்கம் சாய்ந்து மனித சட்டங்களை அதற்குப் பகரமாக ஆக்குவதானது அவர் மனித சட்டங்களை ஷரீஅத் சட்டங்களை விடச் சிறந்ததாக எண்ணுவதாகவே கருதப்படும். இது தவ்ஹீதிற்கு மாற்றமான இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகின்ற பெரிய குப்ர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் தனக்குரியதாக வாதாடுவது

அடியார்கள் அவர்களது வணக்கம், கொடுக்கல் வாங்கல், அவர்களுக்கு மத்தியில் ஏற்படுகின்ற சர்ச்சைகள் போன்றவற்றில் எப்படி நடந்து கொள்வது என்பது பற்றிய சட்டங்களை இயற்றுகின்ற முழு அதிகாரமும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது.

"படைப்பும் ஆட்சி (கட்டளை)யும் அவனுக்கே உரியதெனத் தெரிந்துகொள்ளுங்கள். அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மகத்துவமுடையவனாகி விட்டான்". (7:54)

அடியார்களுக்குப் பொருத்தமான சட்டங்கள் எவை என்பதை அவனே மிக அறிந்தவன். அல்லாஹ் சகல உலகங்களின் இரட்சகன். வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதால் அவனது சட்டங்களை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

"யாதொரு விஷயத்தில் நீங்கள் பிணங்கிக் கொண்டால் அதனை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் திருப்பி (ஒப்படைத்து) விடுங்கள். (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஏற்றுக்கொள்ளுங்கள்) மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும்

விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் இதுதான் நன்மையாகவும், மிக அழகான முடிவாகவும் இருக்கும்". (4:59)

மேலும் அல்லாஹ் கூறுகின்ற போது:-

"நீங்கள் எவ்விஷயத்தில் கருத்துவேறுபாடு கொண்டிருக் கிறீர்களோ அதன் தீர்ப்பு அல்லாஹ்வின் பக்கமே இருக்கின்றது. அந்த அல்லாஹ்தான் என் இரட்சகன்". (42:10)

அல்லாஹ்வின் அடியார்களைச் சட்டம் இயற்றும் அதிகாரிகளாக ஆக்கிக் கொள்வதைப் பின்வரும் வசனத்தில் அல்லாஹ் மறுத்துரைக்கிறான்.

"மார்க்கத்தில் அல்லாஹ் எதற்கு அனுமதியளிக்க வில்லையோ அதை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக் கூடிய இணையாளர்கள் அவர்களுக்கு இருக்கின்றார்களா? (42:21)

அல்லாஹ் சட்டமாக ஆக்கியதைத் தவிர வேறு சட்டங்களை ஏற்றுக்கொள்வோர் அல்லாஹ்வுக்கு இணை வைத்தோராவர். அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தராத வணக்கவழிபாடுகள் "பித்அத்" ஆகும். எல்லா பித்அத்துக்களும் வழிகேடுகளாகும்.

"எமது மார்க்கத்தில் இல்லாததை யார் புதிதாக உண்டு பண்ணுகிறாரோ அது நிராகரிக்கப்படும்." (புகாரி, முஸ்லிம்)

என்றும், "நம்முடைய கட்டளை இல்லாத ஒரு விடயத்தை யார் செய்கிறாரோ அது நிராகரிக்கப்படும்." (முஸ்லிம்) என்றும் நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

அரசியலிலும், மனிதர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கு வதிலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தராதவை ஜாஹிலிய்ய மற்றும் தாகூத்திய சட்டங்களாகவே கருதப்படும்.

"அறியாமை (ஜாஹிலிய்யா) காலத்துத் தீர்ப்பையா அவர்கள் தேடுகின்றனர்? உறுதியாக நம்பிக்கை கொண்ட சமூகத்தாருக்குத் தீர்ப்பளிப்பதில் அல்லாஹ்வைவிடவும் மிக்க அழகானவன் யார்? " (5:50)

அதே போன்று ஒன்றை இது ஹலால், ஹராம் என்று சொல்லுகின்ற முழு உரிமையும் அல்லாஹ்விற்கே உரியது. அதில் அல்லாஹ்வோடு கூட்டுச்சேர யாருக்கும் முடியாது.

அல்லாஹ்வுத்தஆலா பின்வருமாறு கூறுகிறான்:- "(அறுக்கும் போது) எதன் மீது அல்லாஹ்வுடைய பெயர் கூறப்படவில்லையோ அதிலிருந்து நீங்கள் புசிக்காதீர்கள். இன்னும் நிச்சயமாக அது பாவமாகும். (இதில்) உங்களுடன் தர்க்கிக்குமாறு நிச்சயமாக ஷைத்தான்கள் தங்களுடைய நண்பர்களைத் தூண்டுகின்றனர். நீங்கள் அவர்களுக்குக் கீழ்படிந்து விட்டால் நிச்சயமாக

இணைவைப்பவர்கள் (ஆவீர்கள்)" (6:121)

அல்லாஹ் ஹராம் ஆக்கியதை ஹலால் ஆக்குவதில் ஷைத்தான்களுக்கும் அவர்களது தோழர்களுக்கும் வழிப்படுவதை அல்லாஹ் ஷிர்க் என்று கூறுகின்றான். அவ்வாறே அல்லாஹ் ஹலால் ஆக்கியதை ஹராம் ஆக்குவதிலோ அல்லது அல்லாஹ் ஹராம் ஆக்கியதை ஹலால் ஆக்குவதிலோ தலைவர்களுக்கும், உல மாக்களுக்கும் வழிப்படுவோர் அவர்களை தமது இரட்சகர்களாக ஆக்கியோராவர் என்று பின்வரும் வசனம் கூறுகின்றது.

"அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரி களையும், சந்நியாசிகளையும், மர்யமுடைய குமாரர் மஸீஹையும் தங்கள் தெய்வங்களாக எடுத்துக்கொண்டனர். இன்னும், ஒரே ஒரு இரட்சகனையே வணங்க வேண்டு மென்றல்லாது (வேறு எதனையும்) அவர்கள் கட்டளையிடப் படவில்லை. அவனையன்றி வணக்கத்திற்குரியவன் (வேறெவரும்) இல்லை. அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அவன் மிகவும் பரிசுத்தமானவன்". (9:31)

அதீ பின் ஹாதிம் அத்தாயீ (ரழி) அவர்களிடம் இவ்வசனத்தை நபி (ஸல்) அவர்கள் ஓதிக் காண்பித்த போது அவர், "அல்லாஹ்வுடைய தூதரே! நாங்கள் அவர்களை வணங்குபவர்களாக இருக்கவில்லையே என்று கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (பாதிரிகளும்,

சந்நியாசிகளும்) அல்லாஹ் உங்களுக்கு ஹராம் ஆக்கியதை ஹலால் என்று செல்லும் போதும் அல்லாஹ் ஹலால் ஆக்கியதை உங்களுக்கு ஹராம் ஆக்கும் போதும் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்கள்தானே?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "ஆம்" என்றார் "அதுவே அவர்களை வணங்குவதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் விளக்கம் அளித்தார்கள் (ஆதாரம்: திர்மிதி, இப்னு ஜரீர்)

ஹராம், ஹலால் விடயத்தில் அல்லாஹ்வை விட்டு விட்டு அவர்களுக்கு கட்டுப்படுவது கலிமாவின் மெய்ப்பொருளாகிய தவ்ஹீதைத் தகர்த்தெறியும் ஷிர்க் ஆகும். (பார்க்க: பத்ஹுல் மஜீத் பக்கம்: 107)

"லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவின் பொருளில் உள்ளதுதான் ஹலால், ஹராம் என்கின்ற உரிமை அல்லாஹ் ஒருவனுக்கே உரியது என்பதாகும். ஹராம், ஹலால் விடயத்தில் மார்க்க அறிஞர்களைப் பின்பற்றுவோரின் நிலையே இதுவென்றால் காபிர்களாலும், நாஸ்திகர்களாலும் உருவாக்கப்பட்ட சட்டங்களை முஸ்லிம் நாடுகளிலும் அறிமுகஞ்செய்து அவற்றைப் பின்பற்றுவோரின் நிலையைச் சொல்லவா வேண்டும்?

## ஜாஹிலிய்யக் கட்சிகளிலும், நாஸ்தீக அமைப்புக்களிலும் சேர்ந்து கொள்வதன் சட்டம்.

1. கம்யூனிசம், முதலாளித்துவம், நாஸ்தீகம் போன்ற அமைப்புக்களையும் கொள்கைகளையும் ஆதரிப்பதும் அவற்றில் இணைந்து செயற்படுவதும் மதமாற்றத்தை உண்டுபண்ணக்கூடியதாகும்.

இவ்வமைப்புக்களில் இணைந்து செயற்படக்கூடியவன் முஸ்லிம் என்று தன்னைப் பிரகடனப்படுத்துவானாக இருந்தால் அவன் உண்மையிலே மிகப் பெரிய நயவஞ்சக னாகவேதான் இருப்பான். ஏனெனில் முனாபிக்குகள்தான் வெளிப்படையில் முஸ்லிமாக நடித்துக்கொண்டு உள்ர ங்கத்தில் குப்ரை ஆதரிக்கக் கூடியவர்கள்.

இப்படிப்பட்டவர்களைப் பின்வரும் வசனங்கள் அடையாளங்காட்டுகின்றன.

“அவர்கள் விசுவாசங்கொண்டோரைச் சந்தித்தால் “நாங்களும் (உங்களைப் போல்) விசுவாசங் கொண்டிரு க்கிறோம்” எனக் கூறுகிறார்கள். மேலும் அவர்கள் தங்களின் (இனத்தவர்களாகிய) ஷைத்தான்களுடன் தனித்துவிட்டால் “நிச்சயமாக நாங்கள் உங்களுடன்

இருக்கிறோம். நாங்கள் (விசுவாசிகளைப்) பரிகாசம் செய்யக்கூடியவர்கள்தாம்" எனக் கூறுகின்றனர். (2:14)

"(வேஷதாரிகளாகிய) இத்தகையோர் உங்களைப்பற்றி எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றனர். அல்லாஹ்வி(ன் உதவியி)னால் உங்களுக்கு வெற்றிகிடைத்தால் "நாங்கள் உங்களுடன் இருக்கவில்லையா? என்று கூறுகின்றனர். நிராகரிப்போருக்கு பங்கேதும் கிடைத்துவிட்டால், நாங்கள் உங்களை வெற்றி கொள்ளக்கூடிய நிலையிலிருந்தும் விசுவாசங்கொண்ட அவர்களிடமிருந்து நாங்கள் உங்களைத் தடுக்கவில்லையா? என்று கூறுகின்றனர்."
(4:141)

இப்படிப்பட்ட நயவஞ்சகர்கள் இரு முகங்கொண்டு நோக்கக் கூடியவர்கள். ஒரு முகத்தால் மு.்.மின்களையும், மறு முகத்தால் அவர்களது சகோதரர்களான நாஸ்திகர் களையும் நோக்குகிறார்கள். மேலும் இவர்களுக்கு இரு நாவுகள் உண்டு. அவற்றில் ஒன்று வெளிப்படையாக முஸ்லிம்களுடன் பேசும். மற்றயது மறைத்து வைத்தி ருக்கும் இரகசியத்தைப் பற்றிச் சொல்லும்.

இதுவே (2:14) வசனத்தின் அர்த்தமாகும். இவர்கள் குர்ஆன் சுன்னாவைப் பற்றிப் பிடிப்போரை இழிவுபடுத்து வதற்காக அவையிரண்டையும் புறக்கணிக்கின்றனர்.

தீமையையே அதிகரிக்கச்செய்யும் அறிவு தம்மிடம்

இருக்கின்றது என்ற இறுமாப்பில் குர்ஆன், சுன்னா என்ற வஹிக்குக் கட்டுப்பட மறுக்கின்றனர். இவர்களின் இயல்பு வஹியைப் பற்றிப்பிடிப்போரைப் பரிகாசம் செய்வதுதான் என்பதைப் பின்வரும் வசனம் உறுதிப்படுத்துகின்றது.

(பார்க்க: 2:14)

ஆனால் "அல்லாஹ் அவர்களைப் பரிகசிக்கின்றான். மேலும் அவர்களுடைய வழிகேட்டில் கபோதிகளாக அவர்களை(த் தட்டழியும்படி) விட்டு வைத்திருக்கிறான்"

(2:15)

முஃமின்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து இருக்குமாறே ஏவப்பட்டுள்ளனர்.

"விசுவாசங் கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்! (சொல்லாலும் செயலாலும்) உண்மையாளர்களுடன் ஆகிவிடுங்கள்." (9:119)

இந்த நாஸ்தீக கொள்கைகளும் சித்தாந்தங்களும் அழிவுக்கு இட்டுச் செல்லக்கூடியனவேயாகும். ஏனெனில், அவை உருவாக்கப்பட்டது அசத்தியத்தின் அடிப் படையிலாகும்.

கம்யூனிசத்தைப் பொறுத்தவரை அது படைத்தவன் ஒருவன் இருப்பதை மறுக்கிறது. மேலும் தெய்வீக மதங்களுக்கெதிராகப் போர் தொடுக்கின்றது.(நேர்த்தியான)

ஒரு கொள்கை இல்லாமல் வாழ்வதை எந்த சிந்தனைதான் ஏற்றுக்கொள்ளும்? உண்மையில் இயல்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய உறுதியான அம்சங்களை மறுப்பவன் தனது பகுத்தறிவை இழந்தவனாகவே இருக்கவேண்டும்.

Secularism என்பது மதங்களை மறுத்து, சடவாதத்தின் மீது தங்கியிருக்கிறது. மதசார்பற்றோரைப் பொறுத்தவறை இப்படித்தான் வாழ வேண்டுமென்பதில்லை. எப்படியும் மிருகங்களைப் போல் வாழ்ந்தால் சரி என்பதையே கூறுகிறது. முதலாளித்துவமோ முழுக்கவனத்தையும் சொத்துக்களை ஈட்டுவதிலேதான் செலுத்துகிறது. ஹராம், ஹலால் பேண வேண்டும், ஏழை எளியவர் மீது அன்பு காட்டவேண்டும் என்பதே கிடையாது. முதலாளித்துவத்தின் பொருளாதாரம் முழுக்க முழுக்க நாட்டையும் தனி மனிதர்களையும் சுரண்டி அழிவுக்கு இட்டுச்செல்லுகின்ற ஏழைகளின் இரத்தத்தை உறுஞ்சிக் குடிக்கின்ற வட்டி என்ற அரக்கனின் மீதே தங்கி இருக்கின்றது.

கொஞ்சமேனும் ஈமான் உள்ளவர்கள் ஒருபுறம் இருக்க பகுத்தறிவுள்ள எவர்தான் இந்தக்கொள்கைகளை ஆதரிப்பர்? உண்மையிலேயே முஸ்லிம்களில் பெரும் பாலோர் சரியான தீனை விட்டுத் தடம் புரண்டு அந்நிய கலாச்சாரத் தாக்கங்களுக்கு உட்பட ஆரம்பித்த போதே இச்சித்தாந்தங்கள் முஸ்லிம் நாடுகளில் ஊடுருவ ஆரம்பித்தன.

2. ஜாஹிலியக்கட்சிகளிலும், இனவாத அமைப்புக் களிலும் சேர்ந்து செயற்படுவது நிராகரிப்பாகவும் மதமாற்ற முமாகவே கருதப்படும்.

இன, சாதி, கோத்திர வெறியை இஸ்லாம் வன்மை யாகக் கண்டிக்கிறது. "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம். இன்னும் ஒருவருக்கொருவர் நீங்கள் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களைக் கோத்திரங் களாகவும், கிளைகளாகவும் ஆக்கினோம். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் கண்ணிய மிக்கவர் உங்களில் மிகவும் பயபக்தியுடையவர்தாம்." (40:13)

"இன, சாதி வெறியின் பக்கம் அழைக்கப்படக் கூடியவனும், அதற்காகப் போராடக் கூடியவனும், அதன் நிமித்தம் கோபிக்கக் கூடியவனும் எம்மைச் சார்ந்தவனல்ல" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம்)

"அல்லாஹ் ஜாஹிலிய்யக் காலப் பெருமைகளையும், பெற்றோரைக்கொண்டு பெருமை பாராட்டுவதையும், உங்களை விட்டும் போக்கிவிட்டான். மனிதன் ஒன்றில் இறையச்சமுள்ள மு.்.மினாக இருப்பான். அல்லது கெட்டபாவியாக இருப்பான். மனிதர்கள் ஆதத்தின் சந்ததியினர். ஆதமோ மண்ணிலிருந்து படைக்கப்பட்டார். அறபிகளுக்கும் அறபி அல்லாதவர்களுக்கும் இறையச்

சத்தைக் கொண்டேதவிர எந்த சிறப்பும் இல்லை.” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : திர்மிதி)

இந்தக் கட்சிகள் உண்மையில் முஸ்லிம்களைத் துண்டாடுகின்றன. அல்லாஹ் நன்மையான இறையச்ச முள்ள விடயங்களை அடிப்படையாக வைத்து பரஸ்பர ஒத்துழைப்பு நல்கி ஒன்றுபட வேண்டும் என்று வலியு றுத்துகின்ற அதேவேளை பிரிவினையை வன்மையாகக் கண்டிக்கிறான்.

“நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாக பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் கருத்து வேறுபட்டு) நீங்கள் பிரிந்து விடவேண்டாம். மேலும் உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப்பாருங்கள். நீங்கள் (ஒருவர் மற்றவருக்கு) விரோதிகளாக இருந்த சமயத்தில் அவன் உங்கள் இருதயங்களுக்கிடையே அன்புப் பிணைப்பை உண்டாக்கினான். ஆகவே அவனுடைய பேரருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள்.” (3:103)

நாங்கள் ஒரே கட்சியாகிய வெற்றி பெற்ற அல்லாஹ் வுடைய கட்சியினராகவே இருக்க வேண்டுமென்றே அல்லாஹ் விரும்புகிறான்.

(எனினும் அரசியல், கலாசார ரீதியான படையெடுப்பை ஐரோப்பா இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராக மேற்கொண்ட

போது முஸ்லிம் உலகு இரத்த, சாதி, தேச வெறிகளுக்கு உட்பட ஆரம்பித்தது. இதனை அறிவுரீதியான ஒரு பிரச்சினையாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மை யாகவும் எடுத்துக்கொண்டது. இஸ்லாம் சாவுமணி அடித்த இந்த விடயத்தை உயிர்ப்பிக்கவும், அதனைக்கொண்டு பெருமைப்படவும் முஸ்லிம்கள் தலைப்பட்டனர். இந்தத் துர்நாற்றத்திலிருந்து முஸ்லிம்களை வெளியாக்கியதைப் பெருமையுடன் அல்லாஹ் சொல்லிக் காட்டுகின்ற அதேவேளை, இந்த அருளுக்காக நன்றி செலுத்துமாறும் தூண்டுகிறான். காலம் கடந்த ஜாஹிலிய்யத்தை வெறுப்புடனும் கோபத்துடனுமே ஒரு மு:.மின் ஞாபகப் படுத்துவான். சிறையில் சித்திரவதை செய்யப்பட்ட ஒரு கைதி விடுதலை செய்யப்பட்டபின் தான் சிறையில் பட்ட துன்பங்கள், துயரங்கள், வேதனைகளை நினைக்கும் போது அவனது மயிர்கள் கூச்சரிக்கவே செய்யும்.

நீண்ட நாட்கள் படுக்கையிலே இருந்து அவஸ்த்தைப் பட்ட நோயாளி குணமடைந்த பின் தனது பழைய நினைவுகளை மீட்டும்போது ஆனந்தமடையவே செய்வான்.

(பார்க்க: அபுல் ஹஸன்அலி "நத்வியின் ரித்ததுன் லா அபாபக்ர லஹா")

இந்தக் கட்சிகள் அல்லாஹ்வுடைய சட்டங்களுக்கு மாறு செய்து தனது தீனுக்கு இரண்டகம் செய்கின்ற வர்களுக்கு அல்லாஹ் அனுப்பிவைத்த ஒரு வேதனை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

("நபியே! அவர்களிடம்) நீர் கூறுவீராக!" உங்கள் (தலைக)ளுக்கு மேலிருந்தோ அல்லது உங்கள் பாதங்களுக்கு கீழிருந்தோ உங்களுக்கு (யாதொரு) வேதனை அவன் அனுப்புவதற்கும் அல்லது உங்களை பல பிரிவுகளாக்கி (உங்களுக்கு மத்தியில் நீங்கள் போர், சிறைச்சேதம் ஆகியவற்றைச் செய்து) உங்கள் சிலரின் கொடுமையை(க் கொண்டு) மற்ற சிலரை சுவைக்கச் செய்வதற்கும் அவன் சக்தியுடையவன். (6:65)

"அவர்களது தலைவர்கள் அல்லாஹ்வுடைய வேதத்தைக்கொண்டு தீர்ப்பு வழங்கவில்லையானால் அவர்களுக்கு மத்தியில் அல்லாஹ் அழிவை உண்டு பண்ணுவான்" என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

(ஆதாரம் : இப்னு மாஜா)

கட்சிகள் (இயக்கங்கள் மத்ஹபுகள்) மீது கொண்டுள்ள வெறியானது தமது கட்சியைச் சாராதோரிடமிருந்து சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தடையாக இருக்கிறது.

இப்படித்தான் யூதர்கள் இருந்தார்கள்.

"அல்லாஹ் இறக்கிவைத்த (இவ்வேத)த்தை நீங்கள் விசுவாசங் கொள்ளுங்கள்" என அவர்களுக்கு கூறப்பட்டால்" எங்கள் மீது இறக்கப்பட்ட (தவ்றாத்தை) விசுவாசிப்போம்" எனக் கூறுகிறார்கள். அதற்குப் பின்னால் உள்ள (குர்ஆன்) வேதத்தை நிராகரித்தும் விடுகிறார்கள். (ஆனால்) அவர்களிடம் இருப்பதை உண்மைப்படுத்தக்

கூடியதாக இருக்கும் நிலையில் இதுவே சத்திய மானதாகும்." (2:91)

மேலும் இது நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்ததை மூதாதையர்களை ஆதாரங்காட்டி ஏற்க மறுத்த ஜாஹிலிய்யாக்கால மக்களின் நிலையை ஒத்ததாகும்.

"(இவ்வேதமாகிய) அல்லாஹ் இறக்கி வைத்ததைப் பின்பற்றுங்கள்" என அவர்களுக்கு கூறப்பட்டால்" இல்லை. நாங்கள் எங்கள் மூதாதையர்களை எதன் மீது கண்டோமோ அதையே பின்பற்றுவோம்" எனக் கூறுகின்றனர்." (2:170)

இந்தக் கட்சியைச் சார்ந்தோர் இஸ்லாத்திற்குப் பகரமாக இந்த கட்சிகளை, இயக்கங்களைத் தமது மார்க்கமாக ஆக்கிக்கொள்ள முனைகின்றனர் என்பதே உண்மையாகும்.

# வாழ்க்கை பற்றிய சடரீதியான கண்ணோட்டமும் அதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளும்

வாழ்க்கை பற்றிய இரண்டு விதமான கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன.

1. **சடரீதியான கண்ணோட்டம்**
2. **சரியான கண்ணோட்டம்**

**1.சடரீதியான கண்ணோட்டம்**

மனிதனுடைய சிந்தனை இவ்வுலக இன்பங்களை அடைந்து கொள்வதைப் பற்றியே அமைந்திருக்கும். அவனது செயற்பாடுகள் அந்த சிந்தனையை ஒட்டியே இருக்கும். இவைதவிர வேறு எது பற்றியும் சிந்திக்கவோ, செயற்படவோ அவகாசம் இருக்காது. இவ்வுலகை மறுமைக்கான விளைநிலமாக அல்லாஹ் ஆக்கி வைத்திருக்கிறான். எனவே, இவ்வுலகம் அமல் செய்வதற்கென்றும், மறுமை அதற்கான கூலி வழங்கப் படுவதற்கென்றும் நம்பி நல்லமல்களைக்கொண்டு இவ்வுலகை பயன்படுத்தியவன் ஈருலகிலும் வெற்றி யடைந்தான். இம்மையை பாழ்படுத்தியவன் மறுமையில் தோல்வியடைந்தான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

“இத்தகையவன் இம்மையிலும் மறுமையிலும் நஷ்டமடைகிறான். இதுதான் தெளிவான நஷ்டமாகும்” (22:11) என்பதையும் அறிந்து கொள்ளமாட்டான்.

மேலும் இவ்வுலகம் வீணாகப்படைக்கப்படவில்லை உயர்ந்த ஓர் இலட்சியத்திற்காகவே அல்லாஹ் இவ்வுலகைப் படைத்தான் என்பதையோ அவன் சிந்திப்பதில்லை.

அல்லாஹ் கூறுகிறான் :
“உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன் மரணத்தையும் வாழ்க்கையையும் படைத்தான்.” (67:2)

“(மனிதர்களில்) அழகிய செயலுடையவர்கள் யார் என்று அவர்களைச் சோதிப்பதற்காக நிச்சயமாக பூமியில் உள்ளவற்றை அதற்கு அலங்காரமாக நாம் ஆக்கினோம்.” (18:07)

இவ்வுலகில் சொத்துக்கள், பிள்ளைகள், புகழ், பதவி என எண்ணிலடங்காத இன்பங்களையும் அலங்காரத்தையும் அல்லாஹ் ஆக்கிவைத்திருக்கிறான். பெரும்பாலான மக்கள் இதன் வெளிக்கவர்ச்சியிலேயே மதி மயங்குகின்றனர். அதன் யதார்த்தத்தை சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். மேலும் அதனை அடைந்து கொள்வதிலேயே மும்முரமாக ஈடுபடுகின்றனரே ஒழிய அதற்குப்பின்னுள்ள வாழ்க்கைக் குரிய நல் அமல்களைச் செய்வதில்லை. ஏன் இவ்வுலக

வாழ்க்கைக்குப் பின் வேறொரு வாழ்க்கை உண்டு என்பதைக் கூட மறுக்கின்றனர். அல்லாஹ் கூறியது போன்று அன்றியும் "இது நம்முடைய இவ்வுலக வாழ்க்கை தவிர (இறந்தபின் வேறு வாழ்க்கை) இல்லை (இறந்தபின்) நாம் (உயிர்ப்பிக்கப்பட்டு) எழுப்பப்படுகிறவர்களுமல்ல என்று அவர்கள் கூறுகின்றனர். இதுவே உலக வாழ்க்கை சம்பந்தமான சடரீதியான கண்ணோட்டமாகும்.

இக்கண்ணோட்டத்தை அல்குர்ஆனின் பல இடங்களில் அல்லாஹ் எச்சரிக்கை செய்கின்றான்.

"நிச்சயமாக நம்முடைய சந்திப்பை பயப்படாது இவ்வுலக வாழ்க்கையைப் பொருந்திக்கொண்டு இன்னும் அதனைக்கொண்டு திருப்தியடைந்து (அதிலேயே மூழ்கியும்) விட்டார்களே அவர்களும் இன்னும் நம் வசனங்களை (புறக்கணித்து) விட்டு மறந்தவர்களாக இருப்பவர்களும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த (தீய) வற்றின் காரணமாக அவர்கள் தங்குமிடம் நரகம்தான்." (10:7,8)

"எவர்கள் இவ்வுலக வாழ்வையும், அதன் அலங்கார த்தையும் நாடுபவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் செயல்(களுக்குரிய பலன்க)ளை இ(வ்வுலகத்)திலேயே நாம் பூரணமாக அவர்களுக்கு நிறைவு செய்வோம். அவர்களோ அதில் குறைவு செய்யப்பட மாட்டார்கள். இத்தகையோருக்கு மறுமையில் (நரக) நெருப்பைத் தவிர

(வேறு ஒன்றும்) இல்லை; அவர்கள் இவ்(வுலகத்)தில் செய்தவை அழிந்தும் விட்டன; அவர்கள் செய்து கொண்டிருந்தவை வீணானவையேயாகும்." (11:15,16)

உலக வாழ்கைகை பற்றிய சடரீதியான கண்ணோட்டத்தை உடையோர் மறுமைக்குரிய அமல்களைச் செய்வதன் மூலம் இம்மையை நாடக் கூடியவர்களான நயவஞ்சகர்களாகவோ, பிறர் பார்க்கவென அமல் செய்வோராக இருப்பினும் அல்லது கம்யூனிஸ, முதலாளித்துவ, நாஸ்திகவாதிளான மறுமையைப் பொய்யாக்க கூடியவர்களாக இருப்பினும் மேற்படி வசனங்களில் வந்த எச்சரிக்கைக்குரியவர்களே. இவர்கள் வாழ்க்கைக்குரிய பெறுமானத்தைப் புரிந்து கொள்ளா தவர்கள். வாழ்க்கை பற்றிய இவர்களது கண்ணோட்டம் மிருகங்களை விடக் கீழானதாகும். ஏனெனில் இவர்கள் தமது சிந்தனைகளைப் புறக்கணித்து, முயற்சிகளை வீணாக்கி தமக்கு பயன்தராதவற்றில் நேரத்தைக் கழிக்கின்றனர். மேலும் அவர்கள் அவசியம் சென்றடைய வேண்டிய உலகிற்காக எதுவும் செய்வதில்லை. ஆனால் மிருகங்களோ அவற்றிற்கென்று ஓர் இலக்கு இல்லை. சிந்திக்கின்ற திறனும் அவற்றிற்குக் கிடையாது. எனவே அப்படிப்பட்டவர்கள் பற்றி அருள்மறை இப்படிக் கூறுகிறது.

"அல்லது நிச்சயமாக அவர்களில் பெரும்பாலோர் (உம்முடைய கூற்றை) கேட்கிறார்கள் என்றோ அல்லது அதனை விளங்கிக் கொள்கிறார்கள் என்றோ நீர் எண்ணிக்

கொண்டீரா? அவர்கள் (ஆடு, மாடு, ஒட்டகை ஆகிய) கால்நடைகளைப் போன்றவர்களேயன்றி வேறில்லை. அல்ல (அவற்றை விட) அவர்கள் பாதையால் மிக வழிதவறியவர்கள்." (25:44)

மேலும் உலகம் பற்றிய இத்தகைய கண்ணோட்டத்தை உடையோர் அறிவில்லாதவர்கள் என்றும் அல்குர்ஆன் வர்ணிக்கின்றது.

"எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறியமாட்டார்கள். அவர்கள் இவ்வுலக வாழ்க்கை யிலிருந்து வெளிப்படையானதை (மட்டும்) அறிவார்கள். அவர்களோ மறுமையைப்பற்றி மறந்தவர்களாகவே இருக்கின்றனர்." (30:6,7)

அவர்கள் தொழில் நுட்பம், கண்டுபிடிப்புகளில் தேர்ச்சி பெற்றோராக இருப்பினும் அறிவாளிகள் என்று சொல்ல முடியாத அறிவிலிகளே. ஏனெனில், அவர்களது அறிவு இவ்வுலக வாழ்க்கையின் வெளிப்படையானதை மட்டுமே அறிந்துகொள்கிறது. இது குறைபாடுடைய அறிவாகும்.

உண்மையில் உலமாக்கள் (அறிஞர்கள்) என்ற பதம் அல்லாஹ்வைப் பற்றிய அறிவும், அச்சமும் உள் ளோருக்கே பயன்படுத்தப்படும்.

"நிச்சயமாக அல்லாஹ்வை அவனுடைய அடியார்

களில் பயப்படுவதெல்லாம் (அவனைப்பற்றி அறிந்த) கல்வி மான்கள்தாம்" (35:28) என்று அல்லாஹ் கூறுகிறான்.

இவ்வுலக வாழ்க்கை பற்றிய சடவாத கண்ணோட்டத்தையே காரூனுடைய சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

"பின்னர் அவன் தன் அலங்காரத்தில் தன் சமூகத்தாருக்கு முன் புறப்பட்டுவந்தான். (அதனைக் கண்ணுற்றவர்களில்) இவ்வுலக வாழ்க்கையையே பெரிதென விரும்புகிறவர்கள், "காரூன் கொடுக்கப்பட்டது போன்று நமக்கும் இருந்திருக்க வேண்டுமே! (ஏனென்றால்) நிச்சயமாக அவன் மகத்தான பாக்கியவான்" என்று கூறினார்கள்." (28:79)

அவனது சமூகத்தார் அவனுக்குக் கொடுக்கப்பட்டது போன்று செல்வம் கொடுக்கப்பட வேண்டுமென்று ஆவல்கொண்டு அவன் மீது பொறாமை கொண்டதோடு அவனை நிறையக் கொடுக்கப்பட்ட பாக்கியவான் என்றும் வர்ணித்தார்கள். இக்கூற்று அவர்கள் உலக வாழ்வுபற்றிக் கொண்டிருந்த சடரீதியான கண்ணோட்டத்தின் வெளிப்பாடாக அமைந்ததாகும். இதைப்போலவே இன்று பலயீனமான ஈமானையுடைய முஸ்லிம்கள், காபிரான நாடுகள் அடைந்திருக்கும் பொருளாதார, தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கண்டு பிரமித்துப்போய் நிற்கின்றனர். அதே நேரம் அந்த நாடுகள் குப்ரிலே இருக்கின்றன. அவற்றின் இறுதி இலக்கு படுமோசமானது என்பதைச் சிந்திக்க மறந்துவிடுகின்றனர்.

## 2. உலக வாழ்க்கை பற்றிய சரியான கண்ணோட்டம்

உலக வாழ்க்கையில் உள்ள பணம், பதவி, அந்தஸ்த்து, ஆற்றல்கள் என்பவற்றை மறுமை வெற்றிக்காக பயன்படுத்துவதே உலகம் பற்றிய சரியான கண்ணோட்ட மாகும். உலகத்தைப் பொறுத்தவரை அது இகழ்ச்சிக்குரிய ஒன்றல்ல மாறாக புகழ்ச்சியும் இகழ்ச்சியும் அதிலே செயற்படுகின்ற அடியானையே சாரும். அது மறுமையை அடைந்து கொள்வதற்கான பாலமாகவே இருக்கின்றது. சுவர்க்கவாசிகள் அடைந்துகொள்கின்ற சுகமான வாழ்க்கை அவர்கள் உலகில் செய்த விளைச்சலின் பிரதிபலிப்பேயாகும்.

மேலும் இவ்வுலகம் ஜிஹாத், தொழுகை, நோன்பு அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்தல் போன்ற நல்லறங்களுக்கான களமாக இருக்கிறது. சுருங்கச் சொன்னால் நல்லறங்களுக்காகப் போட்டி போட்டுக் கொள்கின்ற இடமாக இவ்வுலகம் இருக்கிறது.

எனவேதான் சுவர்க்கவாசிகளைப் பார்த்து மறுமையில் அல்லாஹ் இப்படிக் கூறுகிறான்.

"சென்று போன நாட்களில் (அதாவது உலகில் மறுமைக்காக நன்மையானவற்றை) நீங்கள் முற்படுத்தி வைத்திருந்த காரணத்திற்காக மகிழ்வோடு (இவைகளை) உண்ணுங்கள் இன்னும் அருந்துங்கள் (என்று கூறப்படும்).

(69:24)

# மாந்திரீகமும் தாயத்தும்

## I. மாந்திரீகம்

காய்ச்சல், ஜின்கள் ஊடுருவுவது போன்ற ஆபத்துக் களிலிருந்து நோயாளிகளை பாதுகாப்பதற்காகச் செய்யப் படுகின்ற பாதுகாப்பு ஏற்பாடே மாந்திரீகமாகும். இது இருவகைப்படும்.

அ. ஷிர்க்கிலிருந்து நீங்கிய மாந்திரீகம்.
அதாவது, குர்ஆன் வசனங்களைக் கொண்டோ அல்லது அல்லாஹ்வின் திருநாமங்கள், பண்புகளைக் கொண்டோ செய்யப்படும் மாந்திரீகமாகும்.

இந்த அமைப்பில் மாந்திரீகம் செய்வதில் தவறில்லை. நபி (ஸல்) அவர்களும் மாந்திரீகம் செய்திருக்கிறார்கள். செய்யுமாறு ஏவியும் இருக்கிறார்கள். மேலும் அனுமதி வழங்கியும் உள்ளார்கள்.

“நாங்கள் அறியாமைக் காலத்தில் மந்திரித்து வந்தோம். (இது பற்றி நபி (ஸல்) அவர்களிடம்) அல்லாஹ்வின் தூதரே! இது விஷயமாக தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? என்று நாங்கள் கேட்டோம். நீங்கள் மந்திரித்துப் பார்த்த (வாசகத்)தை என்னிடம் காட்டுங்கள்

என்று கூறினார்கள். பின்னர், எதில் ஷிர்க் வசனம் இல்லையோ அதன் மூலம் (மந்திரிப்பது தவறில்லை)" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அவ்.ஃ.ப் பின் மாலிக் (ரழி)
ஆதாரம் : முஸ்லிம்

மூன்று நிபந்தனைகளுக்குட்பட்டிருப்பின் மந்திரிப்பது கூடும் என்ற விடயத்தில் அறிஞர்கள் ஏகோபித்த கருத்து கொண்டுள்ளனர் என இமாம் சுயூத்தீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

அவை:

1) அல்லாஹ்வுடைய கலாமைக்கொண்டு அல்லது அவனது திருப்பெயர்கள் பண்புகளைக்கொண்டு அமைய வேண்டும்.

2) அறபி மொழியிலோ அல்லது பொருள் விளங்கக் கூடிய அமைப்பிலோ இருத்தல் வேண்டும்.

3) மந்திரத்திற்கு தனியாக தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தி கிடையாது. மாறாக அல்லாஹ்வின் நாட்டப்படியே அது தாக்கம் செலுத்துகிறது என்று உறுதியாக நம்ப வேண்டும்.

(பார்க்க: "பத்ஹுல் மஜீத்" பக்கம்: 135)

மந்திரிக்கின்ற முறையைப் பொறுத்தவரை நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த மந்திரங்களை ஓதி நோயாளியின் மீது ஊதவேண்டும். அல்லது ஓதி நீரில் ஊதி அதனை நோயாளிக்குக் குடிக்கச் செய்யவேண்டும்.

“நபி (ஸல்) அவர்கள் பத்ஹான் எனும் இடத்திலிருந்து கொஞ்சம் மண்ணை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு அதிலே ஓதி ஊதினார்கள். பின்னர் அதனை அவர் மீது கொட்டினார்கள்.”

அறிவிப்பவர் : தாபித் பின் கைஸ் (ரழி)

ஆதாரம் : அபூதாவூத்

ஆ.ஷிர்க்கோடு கூடிய மாந்திரீகம்

இது அல்லாஹ் அல்லாதவர்களை அழைத்து அவர்களிடம் உதவி மற்றும் பாதுகாப்புத்தேடி மேற்கொள்ளப்படும் மாந்திரீகமாகும்.

உதாரணமாக ஜின்கள், மலக்குகள், நபிமார்கள், நல்லடியார்கள் போன்றோரின் பெயரைக்கொண்டு செய்யப்படும் மாந்திரீகத்தைக் குறிப்பிடலாம். அல்லாஹ் அல்லாதவர்களை அழைத்தல் என்ற காரணத்தினால் இது ஷிர்க்காகும்.

அதே போன்று, அறபுமொழி அல்லாதவற்றைக் கொண்டோ அல்லது பொருள் விளங்காத வார்த்தைகளைக்கொண்டோ செய்யப்படும் மந்திரமும் இவ்வகையைச் சார்ந்ததே. ஏனெனில் அறியாத விதமாக ஷிர்க்கும் குப்ரும் இதில் நுழைய வாய்ப்பிருக்கிறது. இம்முறைகளில் மந்திரிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

## II. தாயத்து

நோய், கண்ணேறு போன்றவை நீங்க குழந்தைகள், பெரியவர்கள் கழுத்தில் (இடுப்பில்) கட்டப்படுவதே தாயத்து. இது இருவகைப்படும்

அ. குர்ஆனைக் கொண்டு கட்டப்படுவது

அதாவது குர்ஆனின் சில வசனங்களையோ அல்லது அல்லாஹ்வுடைய திருநாமங்கள், பண்புகளில் சிலதையோ எழுதி தாயத்துக் கட்டுவது.

இது கூடுமா? இல்லையா? என்பது பற்றி அறிஞர்கள் மத்தியில் இரு வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன.

*முதற்கருத்து :*

குர்ஆனைக் கொண்டு தாயத்துக் கட்டுவது கூடும் என்பதாகும் அப்துல்லாஹ் பின் அம்ருப்னுல் ஆஸ், ஆயிஷா (ரழி) மற்றும் அபூ ஜ.'.பர் அல்பாகிர், அஹ்மத் பின் ஹன்பல் (ஒரு அறிவிப்பின் படி) ஆகியோர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.

தாயத்துக் கட்டுவது கூடாது என்று வந்திருக்கும் ஹதீஸ்களுக்கு, அவற்றில் ஷிர்க்கான வாசகங்கள் இடம்பெற்றுள்ளதால்தான் இவர்கள் கூடாது என்று விளக்கமளிக்கின்றார்கள்.

*இரண்டாவது கருத்து:*

இப்னு மஸ்ஊத், இப்னு அப்பாஸ், ஹுதைபா, உக்பா, இப்னு ஆமீர், இப்னு உகைம் (ரழி) போன்ற

ஸஹாபாக்களும், தாபிஈன்களில் ஒரு கூட்டத்தாரும், இமாம் அஹ்மத் அவர்களும் இன்னும் பலரும் இக்கருத்தை ஆதரிக்கின்றனர்.

இக்கருத்துக்கு பின்வரும் நபி மொழியை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

"(ஷிர்க்கான வாசகம் மூலம்) மந்திரித்தல், தாயத்துக்கள், திவலா (கணவன், மனைவிக்கிடையில் அன்பை ஏற்படுத்துவதற்காகச் செய்யும் சூனியவகை) ஆகியவை ஷிர்க்காகும் என நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன்."

அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத் (ரழி)

ஆதாரம் : அஹ்மத், அபூதாவுத், இப்னு மாஜா, ஹாகிம்

இந்த இரண்டாவது கருத்தே பின்வரக்கூடிய காரணங்களால் மிகச் சரியானதாகும்.

1) தாயத்துக் கூடாதென்ற தடை பொதுவானது. அதிலிருந்து குர்ஆன் வசனங்களை கொண்டு தாயத்துக் கட்டுவது கூடும் என்று விதிவிலக்களிக்கவல்ல எந்த ஆதாரங்களும் இல்லை.

2) குர்ஆனைக் கொண்டு தாயத்துக் கட்டுவது கூடும் என்று கூறினால் காலப்போக்கில் அது அல்லாதவற்றைக் கொண்டு தாயத்துக்கட்ட வாய்ப்பிருக்கிறது.

3) குர்ஆனைக் கொண்டு தாயத்துக் கட்டுவதால் புனித குர்ஆனுக்கு இழிவு ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

அதாவது அதை அணியக்கூடியவர் மல சல கூடங்களுக்கு செல்லவேண்டி ஏற்படும். அந்தநேரம் தம்மோடு அல்குர்ஆன் வசனங்களைக் கொண்டு செல்வார்.

(பார்க்க : "பத்ஹுல் மஜீத்" பக்கம் : 136)

ஆ. தாயத்தின் இரண்டாவது வகை குர்ஆன் அல்லாத எலும்பு, சிப்பி, நூல், ஆணி, ஷைத் தான்களின் பெயர்கள், மந்திர மாயாஜால வார்த்தை களைக்கொண்டு தயாரித்துக் கட்டுவது.

இது ஹராம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்துடன் இது ஷிர்க் ஆகும். ஏனெனில் இது அல்லாஹ் அல்லாதவர்களின் மீது தங்கி இருப்பதாகும்.

"யார் எதையேனும் தொங்கவிட்டுக் கொள்கிறாரோ அவர் (அல்லாஹ்வின் உதவியின்றி) அதன் பொறுப்பில் விடப்படுவார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் : அஹ்மத், திர்மிதி)

அதாவது எதனை தன் கழுத்திலோ, கையிலோ அல்லது இடுப்பிலோ கட்டிக் கொள்கிறாரோ அதன் பொறுப்பில் அவர் விடப்படுவார். அதே நேரம் யார் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து அவன்பால் மீண்டு, தன் விடயங்களை அவனிடம் பொறுப்புச் சாட்டுகின்றாரோ அவருக்கு அல்லாஹ் போதுமானவனாக இருக்கின்றான். மேலும் அவனுடைய கஷ்டங்களை அகற்றி

விடுகின்றான். அது அல்லாமல் தாயத்துக்கள், மருந்துகள் கப்ருகள் மீது முழு நம்பிக்கை வைத்து அவற்றின் மீது பாரம் சாட்டக்கூடியவன் அல்லாஹ்வுடன் உள்ள தனது தொடர்பைத் துண்டித்து தனது அகீதாவைப் பாழ்படுத்திய நஷ்டவாளியாவான்.

ஒரு முஸ்லிம் தனது அகீதாவை (கொள்கையை)ச் சீரழிக்கக்கூடிய விடயங்களிலிருந்து தன்னைப் பாதுகாப்பது இன்றியமையாததாகும். எனவே அவன் தடுக்கப்பட்ட மருந்துகளை உட்கொள்ளக்கூடாது. சோதிடர்கள், மந்திரவாதிகள் போன்றோரிடம் தமது நோய்களைக் குணப்படுத்தும் நோக்கில் செல்லக்கூடாது. ஏனெனில் அவர்கள் நோய்களைக் குணப்படுத்துபவர்கள் என்ற பெயரில் உள்ளங்களையும், ஆகீதாவையும் ஆரோக்கியமற்றதாக ஆக்குகிறார்கள். யார் அல்லாஹ் வின் மீது தவக்குல் வைக்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வே போதுமானவன்.

சில மனிதர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு எந்தவித வெளிப்படையான நோய்களும் இல்லாமல் கற்பனையான சில நோய்களை உருவாக்கிக் கொண்டு அல்லது கண்ணேறு வராமல் இருக்கவென்று தாயத்துக்களை அணிந்து கொள்கிறார்கள். இன்னும் சிலர் தமது வாகனங்கள், வீட்டு மூலைகள், கடைகள், கால் நடைகள் போன்றவற்றிலும் இவற்றை மாட்டிவிடுகின்றனர்.

இவை அனைத்தும் பலஈனமான ஈமானின் வெளிப்பாடு களேயாகும். உண்மையில் நோய் ஏற்படுமாக இருப்பின் தவ்ஹீத் சரியான அகீதா என்றால் என்னவென்று அறிந்து அதற்கு முரண்படாத அமைப்பில் பரிகாரம் காணப்படுவதே அவசியமாகும்.

# அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல், படைப்பினங்களைக் கொண்டு வஸீலா மற்றும் உதவி தேடுதல் பற்றிய சட்டம்

அ. அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல்:

சத்தியம் செய்வது அல்லாஹ்வைக் கொண்டோ அல்லது அவனது திருநாமங்கள், பண்புகளைக் கொண்டோதான் அமைய வேண்டும் என்பதும் அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்வது கூடாது என்பதும் அறிஞர்களால் ஏகோபிக்கப்பட்ட விடயமாகும். (பார்க்க : "ஹாஷியது இப்னு காஸிம் அலா கிதாபித் தவ்ஹீத்" பக்கம் : 303)

அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்வது ஷிர்க் என்பதை பின்வரும் நபி மொழி உணர்த்துகிறது.

"யார் அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்கிறாரோ அவர் குப்ரை அல்லது ஷிர்க்கைச் செய்து விட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர் (ரழி)

ஆதாரம் : அஹ்மத், திர்மிதி, அல்-ஹாகிம்

இது "ஷிர்க் அஸ்கர்" எனும் சிறிய இணை வைத்தலாகும். ஆனால் அல்லாஹ் அல்லாமல் சத்தியம் செய்யப்படுபவர் அல்லது சத்தியம் செய்யப்படுகின்ற பொருளை சத்தியம் செய்யக் கூடியவர் வணங்குபவராக இருந்தால் அப்போது அவற்றின் மீது சத்தியம் செய்வது "ஷிர்க் அக்பர்" எனும் பெரிய இணைவைத்தல் ஆகும்.

இன்று கப்ரு வணங்கிகள் அவர்கள் வணங்குகின்ற வற்றின் மீதுசெய்கின்ற சத்தியம் பெரிய இணை வைத்தலாகும். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி அவனைக் கண்ணியப்படுத்துவதை விட கப்ருகளில் அடங்கப்பட்டவர்களை அஞ்சி கண்ணியப்படுத்து கின்றார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் மதிக்கும் (வணங்கும்) அவ்லியாக்கள் மீது சத்தியம் செய்யச் சொன்னால் அவர்கள் உண்மையாளர்களாக இருந்தாலும் அவர்களின் மீதுள்ள பக்தியால் சத்தியம் செய்ய மறுக்கின்றனர். அதே நேரம் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யச் சொன்னால் அவர்கள் பொய்யர்களாக இருந்தாலும் பயப்படாமல் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்துவிடுகின்றனர்.

சத்தியத்தின் மூலம் சத்தியம் செய்யப்படுபவர் கண்ணியப்படுத்தப்படுவதால் அது அல்லாஹ்வைக் கொண்டு மாத்திரமே அமைதல் வேண்டும்.

அல்லாஹ்வைக் கொண்டு செய்யப்படுகின்ற சத்தியம்

பேணப்படவேண்டும். அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வதை அதிகப்படுத்தக் கூடாது.

"இழிந்தவனாக, அதிகமாக சத்தியம் செய்யக்கூடிய ஒவ்வொருவனுக்கும் நீர் கீழ்ப்படியாதீர்" (68:10)

"இன்னும் உங்கள் சத்தியங்களை(ப்பேணி)க் காப் பாற்றிக் கொள்ளுங்கள்" (5:89)

அதாவது, தேவை ஏற்படின் உண்மையாளர்களாக நீங்கள் இருந்தாலேயன்றி சத்தியம் செய்யாதீர்கள் என்று மேற்குறிப்பிட்ட வசனங்கள் கூறுகின்றன. ஏனெனில் (தேவையில்லாமல்) அதிகம் சத்தியம் செய்வதும், பொய்ச் சத்தியம் செய்வதும் அல்லாஹ்வை இழிவுபடுத்து வதாக்வே கருதப்படும். இது பூரணமாக தவ்ஹீதுக்கு மாற்றமானது.

"மூன்று நபர்களோடு மறுமையில் அல்லாஹ் பேசவும் மாட்டான்; அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான்; அவர்களுக்கு நோவினை தரும் வேதனைதான் உண்டு" என்று கூறிய நபியவர்கள் அதில் ஒரு நபரைப் பின்வருமாறு அடையாளம் காட்டுகிறார்கள். "(அவர்களில்) ஒருவன் பொருட்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் அல்லாஹ்வையே முற்படுத்துபவன் வாங்கும் போதும் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வான் விற்கும்போதும் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தே விற்பான்"

(ஆதாரம் : தப்ரானீ)

இங்கு அதிகம் சத்தியம் செய்வது பற்றி வந்திருக்கின்ற கடுமையான எச்சரிக்கையானது அல்லாஹ்வுடைய கண்ணியத்தைப் பேணும் முகமாக அதிகம் சத்தியம் செய்வது ஹறாம் என்பதை வலியுறுத்துகிறது.

அவ்வாறே அல்லாஹ்வைக் கொண்டு பொய்ச் சத்தியம் செய்வதும் ஹறாமாகும்.

நயவஞ்சகர்களது பண்புகள் பற்றிக் கூறும் அல்லாஹ் அவர்கள் பொய்யென்று தெரிந்தும் கூட அதை உறுதிப் படுத்த சத்தியம் செய்வார்கள் என்று அவர்களைப் பற்றி வர்ணிக்கின்றான்.

**மேலே நாம் குறிப்பிட்ட விடயங்களிலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு நாம் வரலாம்.**

i) அமானிதத்தின் மீது சத்தியமாக, க.்.பாவின் மீது சத்தியமாக, நபியின் மீது சத்தியமாக... என்று அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்வது கூடாது. அது ஷிர்க்காகும்.

ii) பொய்ச் சத்தியம் செய்வது ஹறாமாகும்

iii) தேவையில்லாமல் அதிகமாக சத்தியம் செய்வது கூடாது. அது அல்லாஹ்வை அவமதிப்பதாகக் கருதப்படும்.

iv) உண்மையாளராக இருந்தால் தேவையின் போது அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யலாம்.

ஆ. படைப்பினங்களைக் கொண்டு வஸீலாத் தேடுவது :

"வஸீலா" என்றால் நெருங்குதல் அல்லது நெருங்குவதற்கான வழி என்று பொருள்படும்.

"மேலும் அவன்பால் நெருங்குவதற்குவதற்கான வழியை (அதாவது வஸீலாவை)த் தேடிக் கொள்ளுங்கள். (5:35) என்று அல்லாஹ் கூறுகிறான்.

வணக்க வழிபாடுகளைக் கொண்டு அவனை நெருங்குவதற்கான வழியைத் தேடுங்கள் என்பது இவ்வசனத்தின் கருத்தாகும்.

**வஸீலா இருவகைப்படும்**

A. ஷரீஅத்தில் அனுமதி வழங்கப்பட்ட வஸீலா. இது பலவகைப்படும்.

i) அல்லாஹ்வுடைய திருநாமங்கள், பண்புகளைக் கொண்டு வஸீலாத் தேடுவது.

"இன்னும் அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள், அவனுடைய பெயர்களில் (தவறான பொருள் கொண்டு) திருத்திக் கூறுவோரை விட்டுவிடுங்கள். அவர்கள் செய்து கொண்டிருந்தவைக்குரிய கூலியைக் கொடுக்கப்படுவார்கள்." (7:180)

ii) தனது ஈமானைக் கொண்டும் நல்லமல்களைக்

கொண்டும் வஸீலாத் தேடுவது,

முஃமின்களைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

“எங்கள் இரட்சகனே! உங்கள் இரட்சகனை விசுவாசியுங்கள் என்று (எங்களை) விசுவாசத்தின்பால் அழைத்தோரின் அழைப்பை, நிச்சயமாக நாங்கள் செவியேற்று (அவ்வாறே) விசுவாசங் கொண்டோம். எங்கள் இரட்சகனே! ஆதலால் நீ எங்கள் குற்றங்களை மன்னிப்பாயாக! எங்களுடைய தீமைகளை எங்களை விட்டு நீக்கியும் விடுவாயாக! மேலும் (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கச் செய்வாயாக! (என்றும் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள்.) (3:193)

மேலும் இந்த முறையில் வஸீலாத் தேடுவது கூடும் என்பதற்கு புகாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ள குகையில் அடைபட்ட அந்த மூன்று நபர்களின் வரலாறும் ஆதாரமாக இருக்கிறது. அம்மூவரும் குகையில் அடைபட்டபோது தமது நல்லமல்களைச் சொல்லி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். அல்லாஹ் அவர்களைக் குகையில் இருந்து வெளியேற வழிசெய்தான்.

iii) அல்லாஹ்வுடைய தவ்ஹீதைக் கொண்டு வஸீலாத் தேடுவது நபி யூனுஸ் (அலை) அவர்கள் அவ்வாறு வஸீலாத் தேடியுள்ளார்கள்.

"நெருக்கடிக்குள்ளான அவர் உன்னைத்தவிர வணக்கத் துக்குரிய நாயன்(வேறு ஒருவனும்) இல்லை நீ மிகப் பரிசுத்தமானவன் என (பிரார்த்தனைசெய்து) அழைத் தார்கள்." (21:87)

iv) தனது பலயீனம், தேவை என்பவற்றை வெளிப் படுத்தி, தான் அல்லாஹ்வின்பால் தேவையுள்ளவன் என்பதைக் குறிப்பிட்டு வஸீலாத் தேடுவது இவ்வாறு அய்யூப் (அலை) அவர்கள் வஸீலாத் தேடியுள்ளார்கள்.

"அவர் தம் இரட்சகனிடம் நிச்சயமாகத் துன்பம் என்னைப் பீடித்துக் கொண்டது. நீயோ கிருபையாளர்களி ளெல்லாம் மிகக் கிருபையாளன்" என்று (பிரார்த்தனை செய்து) அழைத்தபோது" (21:83)

v) உயிரோடுள்ள நல்லடியார்களின் பிரார்த்தனை மூலம் வஸீலாத் தேடுவது.

ஸஹாபாக்கள் அவர்களுக்கு வரட்சி ஏற்பட்டால் நபி (ஸல்) அவர்கள் உயிருடன் இருந்த காலமெல்லாம் அவர்களிடம் சென்று தமக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டார்கள். அவர்கள் மறைவுக்குப் பின் அவர்களது சிறிய தந்தை அப்பாஸ் (ரழி) அவர்களிடம் சென்று பிரார்த்திக்குமாறு கேட்பார்கள். அவர்களுக்காக அவர் பிரார்த்திப்பார் (ஆதாரம் : புகாரி)

vi) தனது பாவங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் வஸீலாத் தேடுவது.

"அவர், என் இரட்சகனே! நிச்சயமாக நான் எனக்கே அநியாயம் செய்து கொண்டேன். ஆகவே, நீ என்னை மன்னிப்பாயாக! என்று (பிரார்த்தித்துக் கூறினார்கள்)."

(28:16)

**B.** ஷரீஅத்தில் அனுமதிக்கப்படாத வஸீலா

மரணித்தோரிடமிருந்து ஷபாஅத், பிரார்த்தனை போன்றவற்றைக் கேட்பதன் மூலம் அல்லது நபி (ஸல்) அவர்களது புகழ்கொண்டு அல்லது படைப்பினங்கள் பொருட்டால் வஸீலாத் தேடுவதே ஷரீஅத்தில் அனுமதிக்கப்படாத வஸீலாவாகும்.

அதனை சற்று விரிவாகப் பார்ப்போம்.

i) இறந்தவர்களிடம் பிரார்த்திப்பது கூடாது.

ஏனெனில் மரணித்தோர் உயிரோடு இருக்கும் போது சக்தி பெற்றது போல் மரணித்த பின் அவர்களை அழைத்தால் பதில் அளிக்கச் சக்தி பெற மாட்டார்கள்.

அதேபோல் மரணித்தோரிடம் ஷபாஅத்தை வேண்டுவதும் கூடாது. ஏனெனில் உமர், முஆவியா(ரழி) போன்ற பல சஹாபாக்கள், தாபிஈன்கள் அவர்களுக்கு வரட்சி ஏற்பட்டபோது அப்பாஸ் (ரழி), யஸீத் இப்னுல் அஸ்வத்(ரழி) போன்ற உயிருடன் இருந்தவர்களிடமே

சென்று தமக்காக மழை வேண்டி பிரார்திக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். பகரமாக அவர்கள் (மரணித்துவிட்ட) நபி (ஸல்) அவர்களைக் கொண்டோ அல்லது அவர்களது கப்ரடியில் நின்று கொண்டோ பிரார்த்திக்கவில்லை.

உமர் (ரழி) அவர்கள் தமது பிரார்த்தனையில் "யா அல்லாஹ் நாங்கள் நபி (ஸல்) அவர்களது (பிரார்த்தனையைக்) கொண்டு உன்னிடம் நெருங்கினோம். நீ எங்களுக்கு மழையைப் பொழியச் செய்தாய் இப்போது அவர்களது சிறிய தந்தையின் துஆவைக் கொண்டு உன்னிடம் நெருங்குகிறோம். எங்களுக்கு மழையைப் பொழியச் செய்வாயாக!" என்று கூறி பிரார்த்தித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் மரணித்தும் அனுமதிக்கப்பட்ட முறையில் வஸீலாத் தேட வேண்டுமென்பதற்காக நபியவர்களின் சாச்சாவிடத்தில் சென்றார்கள். மரணித்தவர்களைக் கொண்டு வஸீலாத் தேடுவது கூடுமென்றிருந்தால் அவர்கள் நபி அவர்களின் கப்ரடியில் வந்து பிரார்த்தித்திருப்பார்கள். அதற்கான தோதும் அவர்களுக்கு இருந்தது.

("மஜ்மூஉல் பதாவா" 1/318-319)

அவர்கள் அப்படிச் செய்யாமல் விட்டதே அது கூடாது என்பதற்கு ஆதாரமாகும்.

ii) நபி (ஸல்) அவர்களது அல்லது அவர்களல்லாத வேறெவரதும் புகழைக்கொண்டு வஸீலாத் தேடுவது கூடாது.

“நீங்கள் அல்லாஹ்விடம் கேட்டால் எனது புகழைக் கொண்டு கேளுங்கள். ஏனெனில், எனது புகழ் அல்லாஹ்விடத்தில் மகத்தானது” என்ற செய்தி நபி (ஸல்) அவர்கள்மீது இட்டுக்கட்டப்பட்ட போலி ஹதீஸ் ஆகும். முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்த நூலிலும் இது இடம்பெறவில்லை. அறிஞர் பெருமக்கள் யாரும் குறிப்பிடவுமில்லை. (மஜ்மூஉல் பதாவா 10/319)

இது தொடர்பாக ஸஹீஹான எந்த ஆதாரங்களும் இல்லாததால் எவரது புகழைக் கொண்டும் வஸீலாத் தேடுவது கூடாது. வஸீலாத் தேடுவது ஓர் இபாதத்; இபாதத்துக்கள் உறுதிப்படுத்தப்படுவது ஸஹீஹான ஹதீஸ்களைக் கொண்டு மாத்திரமே.

iii) படைப்பினங்கள் பொருட்டால் வஸீலாத் தேடுவ்து இரண்டு காரணங்களால் கூடாது.

a) அல்லாஹுத்தஆலா யாருக்கும் எதனையும் கொடுக்க வேண்டும் என்ற கடமை கிடையாது. மாறாக அவன் படைப்பின்ங்களுக்கு வாரிவழங்குவது அவனது அருட்கொடையில் நின்றும் உள்ளதாகும்.

“விசுவாசிகளுக்கு உதவி செய்வதும் நம்மீது கடமை யாக இருந்தது” (30:47) என்று அல்லாஹ் கூறுவதும் இதன் பாற்பட்டதுதான்.

அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடக்கின்ற அடியானுக்கு அவன் வழங்குகின்ற கூலி அல்லாஹ்வுடைய அருளேயன்றி அதற்கான பிரதியீடன்று

b) ( أسألك بحق السائلين ) "கேட்போரின் பொருட்டால் உன்னிடம் கேட்கிறேன்." என்றொரு செய்தியை படைப்பினங்கள் பொருட்டால் வஸீலாத் தேடுவதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். இது ஆதார மாகக் கொள்ள முடியாத பலயீனமான ஒரு செய்தியாகும். இதன் அறிவிப்பாளர் வரிசையில் அதிய்யா அல் அவ்பீ என்பவர் இடம் பெறுகிறார். இவர் பலயீனமானவர் என்பது ஹதீஸ்கலை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவிடயம்.

இ. படைப்பினங்களைக் கொண்டு உதவி தேடுதல்.

ஒரு விடயத்தை நிறைவேற்றித்தருமாறோ அல்லது ஒரு கஷ்டத்தை அகற்றிவிடுமாறோ கேட்பதுதான் உதவி தேடுதல் என்பதன் பொருள்

**படைப்பினங்களைக் கொண்டு உதவி தேடுவது இருவகைப்படும்.**

1. படைப்பினங்கள் செய்வதற்குச் சக்தி பெறக்கூடிய விடயங்களில் அவற்றிடம் உதவி தேடுவது. இது கூடும் என்பதற்குப் பின்வரும் திருமறை வசனங்கள் ஆதாரமாக இருக்கின்றன.

“நன்மைக்கும் (அல்லாஹ்வுடைய) பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்” (5:2)

“அப்போது அவர் இனத்தைச் சேர்ந்தவன். அவருடைய பகைவனைச் சார்ந்தவனுக்கு எதிராக உதவி செய்யுமாறு அவரிடத்தில் கோரினான்” (28:15)

2. அல்லாஹ்வுக்கு மட்டுமே முடியுமான காரியங்களில் உதவி செய்யுமாறு படைப்பினங்களிடம் வேண்டுவது. கஷ்ட துன்பங்களை அகற்றுமாறும், நோயாளிகளைக் குணப்படுத்துமாறும் இறந்தோரிடம் அல்லது (அதற்கு சக்தி பெறாத) உயிரோடிருப்போரிடம் உதவி தேடுவதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இந்த அமைப்பில் உதவி தேடுவது கூடாது. அது “ஷிர்க் அக்பர்” எனும் பெரிய இணைவைத்தலாகும்.

நபி (ஸல்) அவர்களது காலத்தில் ஒரு முனாபிக் மு.்.மின்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தான். அப்போது அவர்களில் சிலர் “புறப்படுங்கள் நாம் இந்த முனாபிக்கிடமிருந்து பாதுகாப்புப் பெற நபியவர்களைக் கொண்டு உதவி தேடுவோம்” என்று கூறினார்கள். இச்செய்தி நபியவர்களை எட்டியதும் “என்னைக் கொண்டு உதவி தேடுவது கூடாது. மாறாக அல்லாஹ்வைக் கொண்டே உதவி தேட வேண்டும்” என்று கூறினார்கள்.

(ஆதாரம் :தப்ரானீ)

தவ்ஹீதைப் பாதுகாக்கவேண்டும், ஷிர்க்குடைய வாயில்களை மூடவேண்டும், தனது உம்மத்தை ஷிர்க்கான சொல்களிலிருந்து எச்சரிக்கை செய்யவேண்டும் என்பதற்காக ஸஹாபாக்களுக்கு உதவி செய்ய சக்தி இருந்தும் கூட நபி (ஸல்) அவர்கள் தனது விடயத்தில் இப்படியான பிரயோகங்களைப் பயன்படுத்துவதை வெறுத்திருக்கிறார்கள்.

உயிரோடிருக்கும் போது தான் செய்வதற்கு சக்திபெற்ற விடயங்களிலேயே இந்நிலை என்றால் மரணித்தபின் அவர்களுக்கு முடியாத காரியங்களில் அவர்களிடம் உதவி தேடுவது எந்தவகையில் கூடும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். நபியவர்கள் விடயத்திலேயே கூடாதென்றால் மற்றவர்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

## இயல் III

## நபி (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் விடயத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டிய அம்சங்கள்.

I) நபி (ஸல்) அவர்களை நேசித்தல், கண்ணியப் படுத்துதல் அவசியம். ஓர் அடியான் தன்னைப் படைத்து தனக்கு எல்லா விதமான அருட்கொடைகளையும் வழங்கிய அல்லாஹ்வை முதலில் நேசிக்க வேண்டும். இதுவே வணக்கங்களில் சிறந்தது.

"விசுவாசிகளோ, அல்லாஹ்வை நேசிப்பதில் மிகக் கடினமானவர்கள்" (2:165)

அதற்கு அடுத்தபடியாக அவனது தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும். அவர்கள்தான் அல்லாஹ்வின் பால் அழைத்து, அவனை அறிமுகஞ் செய்து, அவனது ஷரீஅத்தை எத்திவைத்து, அவனது சட்டங்களைத் தெளிவுபடுத்தினார்கள்.

மு.்.மின்களுக்கு இம்மை, மறுமை நன்மைகள் ஏதாவது

கிடைத்திருக்குமாக இருந்தால் அது இந்த ரசூலின் வாயிலாகவேதான் இருக்கும்.

அவர்களுக்கு வழிப்பட்டு, அவர்களைப் பின்பற்றாதவரை யாரும் சுவனம் செல்ல முடியாது.

“மூன்று விடயங்கள் யாரிடம் காணப்படுகிறதோ அவர் ஈமானின் சுவையை உணர்ந்து கொண்டவராவார். அல்லாஹ்வும், அவனது தூதரும் ஏனைய அனைத்தை விடவும் அவருக்கு நேசத்துக்குரியவர்களாக இருக்க வேண்டும்; ஒரு மனிதனை நேசிப்பதாக இருந்தால் அல்லாஹ்வுக்காக மட்டுமே நேசிக்க வேண்டும்; குப்ரில் இருந்து ஈடேற்றம் பெற்ற பின் மீண்டும் அதில் போய் விழுவதை, நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பதைவிடக் கடுமையாக வெறுக்க வேண்டும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

அல்லாஹ்வுடைய நேசத்திற்கு அடுத்தபடியாக நபியவர்களின் நேசம் இடம்பெற வேண்டும். அல்லாஹ்வை நேசிப்பது, நபி அவர்களை நேசிக்க வேண்டும் என்ற விடயத்தை வேண்டி நிற்கின்றது.

அல்லாஹ்வைத் தவிரவுள்ள அனைத்தையும் விட நபியவர்களை நேசிக்க வேண்டுமென்பதைப் பின்வரும் நபிமொழி தெளிவுபடுத்துகிறது.

“தனது பிள்ளை, தந்தை, அனைத்து மனிதர்களையும் விட நான் நேசத்திற்குரியவனாக மாறும் வரை உங்களில் யாரும் விசுவாசியாக மாட்டார்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

ஏன்? தன்னைவிடவும் மேலாக ஒரு மு. ்.மின் நபி (ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும்.

ஒரு முறை உமர் (ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ்வுடைய தூதரே! எல்லா வற்றையும் விட நீங்கள்தான் எனது நேசத்திற் குரியவர்கள். ஆனால், என்னைத் தவிர (உங்களை விட என்னை நான் அதிகம் நேசிக்கிறேன்) என்று கூறினார். அப்போது நபி (ஸல்) “இல்லை உமரே! உன்னை விடவும் நான் உனது நேசத்திற்குரியவனாக இருக்க வேண்டும்” என்று கூறினார்கள். உடனே உமர் (ரழி) இப்போது என்னை விடவும் உங்களை அதிகம் நேசிக்கிறேன் என்றார். “உமரே! இப்போது தான் சரியாகச் சொன்னீர்” என்று நபியவர்கள் சொன்னார்கள். (ஆதாரம் : புகாரி)

இந்த ஹதீஸிலிருந்து நபி (ஸல்) அவர்களை நேசிப்பது வாஜிப் என்பதும் அல்லாஹ்வைத் தவிரவுள்ள மற்ற எல்லாவற்றையும் விட நபியவர்களை அதிகம் நேசிக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது. மேலும் அல்லாஹ்வை நேசிப்பதானது நபி (ஸல்) அவர்களை நேசிப்பதை வேண்டி நிற்கின்றது. ஒரு மு. ்.மினுடைய

உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதுள்ள நேசம் அதிகரிக்கும் போது நபி (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசமும் அதிகரிக்கின்றது. அது குறையும் போது இதுவும் குறைந்து விடுகின்றது.

அல்லாஹ்வை நேசிக்கக்கூடியவர்கள் பிறரை அல்லாஹ்வுக்காகவே நேசிப்பர்.

நபி (ஸல்) அவர்கள் மீது வைக்கின்ற நேசம் அவர்களைக் கண்ணியப்படுத்துவதையும், அவர்களைப் பின்பற்றுவதையும், அவர்களது வார்த்தைகளை படைப்பினங்கள் அனைவரது வார்த்தைகளை விடவும் முற்படுத்துவதையும் வேண்டி நிற்கின்றது.

இமாம் இப்னுல் கையியிம் (ரஹ்) கூறுகிறார்கள்:-

மனிதன் மீது வைக்கின்ற மதிப்பும், நேசமும், அல்லாஹ்வின் மீது வைக்கின்ற மதிப்பு, நேசத்தைத் துயர்ந்ததாக இருக்கவேண்டும். உதாரணமாக நபி (ஸல்) அவர்களை நேசிப்பதும், கண்ணியப்படுத்துவதும் அவர்களைத் தூதராக அனுப்பிவைத்த அல்லாஹ்வை நேசிப்பதை, மதிப்பதை அடியொட்டியதாகவே இருக்கின்றது. அல்லாஹ் நபியவர்களை நேசிக்கின்றான் என்பதற்காக அவர்களது சமூகத்தார் அவர்களை நேசிக்கிறார்கள். மேலும், அல்லாஹ் அவர்களைக் கண்ணியப்படுத்துகின்றான் என்பதற்காக இவர்களும் கண்ணியப்படுத்துகின்றனர்.

நபி (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை அல்லாஹ் அவர்கள் மீது அன்பையும், மதிப்பையும் வழங்கியிருக் கின்றான். அதனாலேதான் அவர்களது தோழர்களது உள்ளங்களில் அவர்களைவிட அன்பும் மரியாதையும் உள்ள யாரும் இருக்கவில்லை.

அம்ருப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் பின்வருமாறு கூறினார்கள். நான் இஸ்லாத்தை ஏற்கும் முன்னர் நபியவர்களைவிட வெறுப்பிற்குரியவர் எவரும் எனக்கு இருக்கவில்லை. எப்போது இஸ்லாத்தை ஏற்றேனோ அந்தக் கனத்திலிருந்து அவர்களை விட நேசத்திற்கும், மரியாதைக்குமுரியவர் எவரும் எனக்குக்கிடையாது.

உர்வா பின் மஸ்ஊத் என்பவர் குறைஷிகளைப் பார்த்து “நான் ரோம், பாரசீக மன்னர்களிடமும் இன்னும் பல அரசர்களிடமும் தூதுக்குழுக்களோடு சென்றி ருக்கிறேன். ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்களை அவர்களது தோழர்கள் மதிப்பது போன்று அவர்கள் எவரையும் அவரது தோழர்கள் மதிப்பதை நான் காணவில்லை. நபி(ஸல்) அவர்கள் மீது அவர்கள் வைத்திருக்கும் மரியாதையால் எப்போதும் அவர்களை உற்று நோக்கியவர்களாகவே அவர்களது தோழர்கள் இருக்கிறார்கள்....” என்று கூறினார்.

(பார்க்க : “ஜலாஉல் அப்ஹாம்” பக்கம்: 120,121)

II) நபி (ஸல்) அவர்களைப் புகழ்வதில் எல்லை மீறுவது என்பது அவர்கள் அல்லாஹ்வுடைய அடியார் என்ற நிலையிலிருந்து உயர்த்தி இறைத்தன்மைகள் சிலவற்றை அவர்களுக்கு வழங்குவதைக் குறிக்கும். நபி (ஸல்) அவர்களிடம் பிரார்த்திப்பது, அவர்களைக்கொண்டு உதவி தேடுதல், சத்தியம் செய்தல் போன்றவற்றை அவர்கள் விடயத்தில் எல்லை மீறுதல் என்பதற்கு உதாரணமாகக் கூறலாம்.

நபி (ஸல்) அவர்களைப் புகழ்வதில் எல்லை மீறுவதைப் பின்வரும் ஹதீஸ் கண்டிக்கின்றது

“மர்யமுடைய குமாரரை கிறிஸ்தவர்கள் அளவுகடந்து புகழ்ந்தது போன்று என்னை நீங்கள் அளவு கடந்து புகழாதீர்கள். நான் ஓர் அடியான் எனவே என்னை அல்லாஹ்வுடைய அடியார் என்றும் அவனுடைய தூதர் என்றும் கூறுங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

அதாவது, அசத்தியமான முறையில் என்னைப் புகழாதீர்கள். மேலும், கிரிஸ்தவர்கள் ஈஸா (அலை) அவர்கள் விடயத்தில் அளவு கடந்து புகழ்ந்து அவருக்கு இறைத்தன்மையைக் கொடுத்தார்கள். அப்படி எனது விடயத்திலும் நடந்து கொள்ளாதீர்கள். என்னை எனது இரட்சகன் வர்ணித்ததுபோல் நீங்களும் வர்ணிப்பீர்களாக இருந்தால் அதுவே போதுமானதாகும். எனவே, என்னை

அல்லாஹ்வின் அடியார், அவனுடைய தூதர் என்று கூறுங்கள்.

சில தோழர்கள் நபி (ஸல்) அவர்களை, ‘‘நீங்கள் தான் எங்கள் தலைவர் (செய்யித்)’’ என்று கூறினார்கள். அப்போது நபியவர்கள் அல்லாஹ்தான் (செய்யித்) என்று கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவூத்)

சில மனிதர்கள் நபி (ஸல்) அவர்களை விழித்து, “எங்களில் சிறந்தவரே!, சிறந்தவரின் மைந்தரே! எங்கள் தலைவரே! தலைவரின் புதல்வரே!” என்று கூறியபோது “மனிதர்களே! நீங்கள் என்னை அல்லாஹ்வுடைய தூதரே! என்று கூறுவதே போதுமானது. வேறு வார்த்தைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஷைத்தான் உங்களை வழிகெடுக்காமல் இருக்கட்டும் அல்லாஹ் என்னை எந்த அந்தஸ்த்தில் வைத்திருக்கிறானோ அதைவிட என்னை நீங்கள் உயர்த்துவதை நான் விரும்பவில்லை” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: அஹ்மத், நஸாயி)

நீங்கள் தான் எங்கள் தலைவர் (செய்யித்), நீங்கள் தான் எங்களில் சிறந்தவர், கண்ணியமானவர் என்பன போன்ற வாசகங்களைக் கொண்டு புகழ்வதையே நபியவர்கள் வெறுத்துள்ளார்கள். உண்மையில் அவர்கள் படைப்பினங்களில் மிகவும் சிறந்தவரும் கண்ணியமானவரும் ஆவார்கள். இருந்தும் மக்கள் அவர்கள் விடயத்தில்

அத்துமீறி தவ்ஹீதுக்குக் களங்கத்தை உண்டுபண்ணி விடாமலிருக்கவே அவற்றைக்கொண்டு புகழ்வதை வெறுத்தார்கள்.

ஓர் அடியானுக்கு இருக்கவேண்டிய மிக உயர்ந்த இரண்டு பண்புகளைக் கொண்டு தன்னை வர்ணிக்குமாறு கூறினார்கள். அவை இரண்டிலும் அத்துமீறலோ, அகீதாவுக்கு ஆபத்தோ இல்லை. அல்லாஹ்வுடைய அடியார், அவனுடைய தூதர் என்பதே அவ்விரண்டு பண்புகள். அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்த அந்தஸ்தை விட அவர்களை உயர்த்துவதை அவர்கள் விரும்பவே இல்லை. இருந்தாலும்கூட பெரும்பாலான மக்கள் அவர்களது தடையையும் மீறி அவர்களிடம் பிராத்திக் கிறார்கள்; அவர்களைக் கொண்டு உதவி தேடுகிறார்கள்; அவர்கள் மீது சத்தியம் செய்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் அல்லாஹ்விடத்தில் மாத்திரம் கேட்க வேண்டியதை நபியவர்களிடம் கேட்கிறார்கள். மவ்லித் களரிகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) அவர்கள் தனது நூநிய்யா என்ற கவிதைத் தொகுப்பில் பின்வருமாறு பாடுகிறார்கள்.

அல்லாஹ்வுக்கென்றே சில உரிமைகள் உண்டு. அவற்றில் அவனது அடியார்களுக்கு பங்கில்லை.

அவனுடைய அடியார்களுக்கும் சில உரிமைகள் உண்டு. இரண்டும் வெவ்வேறு உரிமைகள் அவற்றை ஒன்றாக்கி விடாதீர்கள்.

III) நபியவர்களது அந்தஸ்த்து:

அல்லாஹுத்தஆலா புகழ்ந்த புகழ்ச்சியைக் கொண்டு அவர்களது அந்தஸ்த்தை விபரிப்பதில் எந்த தவறுமில்லை. அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்த்தை அல்லாஹ் கொடுத்திருக்கின்றான்.

அவர்கள் அல்லாஹ்வுடைய அடியாராகவும், அவனுடைய தூதராகவும், படைப்புகளில் சிறந்தவராகவும் இருக்கிறார்கள். மேலும் முழு மனித சமுதாயத்திற்கும் ஏன் மனு ஜின் சமூகங்களுக்கும் அவர்களே தூதராக இருக்கிறார்கள். ரஸுல்மார்களில் சிறந்தவராகவும் நபிமார்களில் இறுதியானவராகவும் காணப்படுகிறார்கள். அவர்களது இதயத்தை அல்லாஹ் விசாலமாக்கி வைத்தான். அவர்களது நினைவை உயர்வு படுத்தினான். மேலும் அவர்களுக்கு மாறு செய்வோருக்கு இழிவை ஏற்படுத்தினான். "(மகாமே மஹ்மூத் என்னும்) மிக்க புகழ்பெற்ற இடத்தில் உம்மை உமதிரட்சகன் (மறுமையில்) எழுப்பப் போதுமானவன்" (17:79) என்ற திருமறை வசனத்தில் குறிப்பிடப்படும் மகாமே மஹ்மூதிற்குச் சொந்தக்காரர். மகாமே மஹ்மூத் என்பது மறுமையில் மக்களின் அமளி துமளியிலிருந்து அவர்களுக்கு ஆறுதல் வழங்குமாறு அல்லாஹ்விடத்தில் பரிந்துரை செய்வதற்காக

எழுப்பப்படுகின்ற இடம். அது நபி (ஸல்) அவர்களுக்கு மாத்திரமே உரியது. அதுமட்டுமல்ல, படைப்பினங்களில் அல்லாஹ்வுக்கு அதிகம் அஞ்சக்கூடியவராகவும் இருக்கிறார்கள். அவர்கள் சந்திதானத்தில் சப்தத்தை உயர்த்துவதை அல்லாஹ் தடுத்திருக்கிறான். மேலும் சப்தத்தை தாழ்த்திப் பேசுவோரை புகழ்ந்து கூறுகிறான்.

"விசுவாசிகளே! நபியினுடைய சப்தத்திற்கு மேல் உங்களுடைய சப்தத்தை உயர்த்தாதீர்கள்; மேலும், உங்களில் சிலர் மற்ற சிலருடன் உரக்கப் பேசுவதைப் போல் அவரிடம் பேசுவதில் (சப்தத்தை உயர்த்தி) நீங்கள் உரக்கப்பேசாதீர்கள்; (ஏனெனில் இதனை) நீங்கள் உணர்ந்துகொள்ள முடியாத நிலையில் உங்களுடைய (நன்மையான) செயல் அழிந்துவிடும்.

நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடத்தில் (பேசும் பொழுது) தங்களுடைய சப்தங்களை தாழ்த்திக் கொள்கிறார்களே அத்தகையோர் அவர்களுடைய இதயங்களை பயபக்திக்காக அல்லாஹ் பரிசுத்தமாக்கி வைத்தானே அத்தகையோராவார். அவர்களுக்கு மன்னிப்பும் மகத்தான கூலியும் உண்டு.

(நபியே!) நிச்சயமாக (உம்முடைய) அறைகளுக்குப் பின்னாலிருந்து சப்தமிட்டு உம்மை அழைக்கிறார்களே அத்தகையோர் அவர்களில் பெரும்பாலானோர் (உம்மை அழைத்துப் பேசும் முறையை) விளங்கமாட்டார்கள்.

நிச்சயமாக அவர்களிடம் நீர் வெளியேறி வரும்வரையில் அவர்கள் பொறுமையோடு இருப்பார்களானால் அது அவர்களுக்கு மிகச் சிறந்ததாக இருக்கும். இன்னும் அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக் கிருபையுடையவன்."

(49:2-5)

இந்த வசனங்களுக்கு விளக்கமளிக்கையில் இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். இந்த வசனங்களில் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுடன் மு.·.மின்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறான். அவர்களது சந்திதானத்தில் அவர்களைவிட சப்தத்தை உயர்த்திப் பேசக்கூடாது; பகரமாக அல்லாஹ்வுடைய ரசூலே! அல்லாஹ்வுடைய நபியே! என்றுதான் அழைக்கவேண்டும். "உங்களுக்கு மத்தியில் சிலர் சிலரை (ப் பெயர் கூறி) அழைப்பது போன்று அல்லாஹ்வின் தூதரின் அழைப்பை (முஹம்மதே! என்று கூறி) ஆக்கிக் கொள்ளாதீர்கள்." (24:63)

அல்லாஹ்கூட நபியே! ரசூலே! என்றுதான் அழைக்கின்றான்.

மேலும் அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் அவர்கள் மீது ஸலவாத் சொல்கிறார்கள். தனது அடியார்களையும் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுமாறு அல்லாஹ் கட்டளை இடுகிறான்.

"நிச்சயமாக அல்லாஹ்வும், அவனுடைய மலக்குகளும்

நபியின் மீது ஸலவாத்து (அருள், பிரார்த்தனை) செய்கிறார்கள். (ஆகவே) விசுவாசிகளே! நீங்கள் அவர்மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். ஸலாமும் கூறுங்கள்." (33:56)

எனினும், நபியவர்களைப் புகழ்வதெற்கென்று குறிப்பிட்ட காலமோ, குறிப்பிட்ட அமைப்போ நாமாக உருவாக்கிக் கொள்ள முடியாது. இன்று நபியவர்களைப் புகழ்வதற்கென்று மவ்லித்வாதிகள் குறிப்பிட்ட ஒரு தினத்தை ஆக்கிக்கொண்டிருப்பது நிராகரிக்கப்படவேண்டிய செயலாகும்.

சுன்னத்துக்களை கண்ணியப்படுத்தி அவற்றைக் கொண்டு அமல் செய்வது வாஜிப் என்றும் இஸ்லாமிய சட்டவாக்கத்தில் சுன்னா, குர்ஆனுக்கு அடுத்த இடத்தைப் பெறுகிறது என்றும் நம்புவதும் நபியவர்களை கண்ணியப் படுத்துவதிலே அடங்கும். ஏனெனில் சுன்னாவும் அல்லாஹ் விடமிருந்து வந்த வஹியாகும். "அவர் மனோ இச்சைப்படி (எதையும்) பேசுவதுமில்லை. இது அறிவிக்கப்படும் வஹியே தவிர வேறில்லை." (53:3,4)

அதிலே சந்தேகத்தை உண்டுபண்ணுவதோ, அதன் அந்தஸ்த்தை குறைத்து நோக்குவதோ, அது ஸஹீ ஹானதா, பலயீனமானதா என்பதைப்பற்றிய திறனாய் விலோ அல்லது அதற்கான விளக்கங்கள் வழங்குவதிலோ அறிவும் பேணுதலும் இல்லாமல் ஈடுபடுவதோ் கூடாது.

இன்று சிலர், குறிப்பாக வளர்ந்து வரும் இளை ஞர்கள் சிலர் சுன்னா விடயத்தில் தவறான போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள். அதாவது எந்தவித ஆய்வும் இல்லாமல் ஹதீஸ்களை ஸஹீஹ் என்றும், ழயீப் என்றும் தீர்ப்புக் கூறுகிறார்கள். இது அவர்களுக்கும் உம்மத் திற்கும் ஆபத்தை உண்டு பண்ணக்கூடிய விடயம். எனவே, அவர்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஞானமில்லாத விடயங்களில் அவர்கள் தலையிடக்கூடாது.

02. நபியவர்களுக்கு வழிப்படுவதன் அவசியம்

நபி (ஸல்) அவர்கள் ஏவியதை எடுத்து நடப்பதன் மூலமும், அவர்கள் விலக்கியதைத் தவிர்ந்து கொள்வதன் மூலமும் அவர்களுக்கு வழிப்படுவது அவசியமாகும். கலிமாவின் இரண்டாவது பகுதியாகிய "அஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹ்" என்பது இதனையே வேண்டி நிற்கின்றது.

நபி (ஸல்) அவர்களுக்கு வழிப்படுவதன் அவசியம் பற்றிப் பல வசனங்களில் அல்லாஹ் வலியுறுத்திக் கூறுகிறான்.

சில இடங்களில் அவனுக்கு வழிப்படுவதை ஏவுவதோடு சேர்த்து நபியவர்களுக்கு வழிப்படுமாறு கூறுகிறான்.

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்

படியுங்கள். (அவனது) தூதருக்கும் கீழ் படியுங்கள்" (4:59)

சில இடங்களில் நபியவர்களுக்கு வழிப்படுவதை மாத்திரம் வலியுறுத்துகிறான்.

"எவர் (அல்லாஹ்வுடைய) தூதருக்கும் (முற்றிலும்) கீழ்படிந்து நடக்கிறாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ் வுக்கே கீழ்படிந்து விட்டார்" "(நம்முடைய தூதராகிய) அவர்களுடைய கட்டளைக்கு மாறுசெய்கிறார்களே, அத்தகையோருக்கு ஏதாவது துன்பம் பிடித்து விடு வதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்து விடுவதையோ பயந்து கொள்ளட்டும்." (24:63)

அவர்களது இதயங்களில் குப்ர், நிபாக், பித்அத் போன்ற துன்பங்களும் உலகில் அவர்கள் கொலை செய்யப்படுதல் அல்லது சிறைப் பிடிக்கப்படுதல் போன்ற நோவினை தரும் வேதனைகளும் ஏற்படும் என்பது இவ்வசனத்தின் அர்த்தமாகும்.

மேலும், அல்லாஹ்வுடைய நேசமும், மன்னிப்பும் கிடைப்பதற்கு நபி (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டு அவர்களைப் பின்பற்றுவதை மிக முக்கிய காரணமாக அல்லாஹ் ஆக்கிவைத்திருக்கிறான்.

"(நபியே! மனிதர்களிடம்) நீர் கூறுவீராக!" நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னை

நீங்கள் பின்பற்றுங்கள். (அவ்வாறு நீங்கள் செய்தால்) உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்து விடுவான்." (3:31)

அத்துடன் அவர்களுக்கு கட்டுப்படுவதை நேர்வழி யாகவும், மாறு செய்வதை வழிகேடாகவும் ஆக்கி யிருக்கிறான்.

"நீங்கள் (தூதராகிய) அவருக்குக் கீழ்படிந்து நடந்தால் நீங்கள் நேர்வழியை அடைந்து விடுவீர்கள்." (24:54)

"உமக்கவர்கள் பதில் கூறவில்லையானால் நிச்சயமாக அவர்கள் பின்பற்றுவதெல்லாம் தங்களின் மனோ இச்சைகளைத்தான் என்று உறுதியாக நீர் அறிந்து கொள்வீராக! அல்லாஹ்விடமிருந்துள்ள நேர்வழியை அன்றி தன்னுடைய மனோ இச்சையைப் பின்பற்றியவனை விடவும் மிக வழிகெட்டவன் யார்? நிச்சயமாக அல்லாஹ் (இத்தகைய) அநியாயக்கார சமூகத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான்." (28:50)

அதுமட்டுமல்ல, அவர்களில் அவர்களது உம்மத்திற்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

"உங்களில் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஆதரவு வைத்து அல்லாஹ்வையும் அதிகமாக நினைவு

கூர்பவராக இருப்பவருக்கு அல்லாஹ்வின் தூதரில் திட்டமாக அழகிய முன்மாதிரி இருக்கிறது." (33:21)

இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கையில் ரஸூல் (ஸல்) அவர்களை அவர்களது சொல், செயல் மற்றும் அனைத்து நிலைமை களிலும் அவர்களைப் பின்பற்றுவதற்கான ஓர் அடிப் படையாக இவ்வசனம் அமைந்திருக்கிறது. எனவேதான், எதிரணிகள் சந்தித்த அந்நாளில் பொறுமையிலும் போராட்டத்திலும் தனது இரட்சகனுடைய உதவியை எதிர்பார்ப்பதிலும் நபியவர்களைப் பின்பற்றுமாறு அல்லாஹ் அம்மக்களுக்கு கட்டளையிட்டான்.

ரஸூல் (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்டு அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்பதை ஏறக்குறைய 40 இடங்களில் அல்லாஹ் கூறுகிறான்.

எனவே, உணவு பானத்தை விட நபியவர்கள் கொண்டுவந்ததை அறிந்து பின்பற்றுவது அவசியமாகும். ஏனெனில் உணவும், பானமும் இல்லையென்றால் உலகில்தான் அழிவு ஏற்படும். ஆனால், ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கீழ் படிந்து அவர்களைப் பின்பற்ற வில்லையானால் நிரந்தர அழிவும் வேதனையும் ஏற்படும்.

வணக்க வழிபாடுகளில் தன்னைப் பின்பற்றுமாறும், தான் காட்டித்தந்த முறைப்படியே அந்த இபாதத்துக்கள்

நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் நபி (ஸல்) அவர்கள் ஏவியுள்ளார்கள்.

"நீங்கள் என்னை எவ்வாறு தொழக்கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்" (புகாரி) என்றும்,

"நான் ஹஜ் செய்த பிரகாரம் நீங்களும் ஹஜ் செய்யுங்கள்" (முஸ்லிம்) என்றும்,

"நமது கட்டளை இல்லாத காரியத்தை யாராவது செய்வாரானால் அது நிராகரிக்கப்படும்" (புகாரி, முஸ்லிம்) என்றும்,

"எனது வழிமுறையைப் புறக்கனிப்பவன் என்னைச் சார்ந்தவனல்ல" (புகாரி, முஸ்லிம்) என்றும் பல அமைப்புக்களில் அவர்களைப் பின்பற்றுவதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

### 03. நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறல்:

நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவதை நபியவர்கள் உம்மத்தின் மீது அல்லாஹ் ஷரீஅத் ஆக்கியிருக்கிறான்.

"நிச்சயமாக! அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியவர்கள் மீது ஸலவாத்து (அருள், பிரார்த்தனை)

செய்கிறார்கள். ஆகவே விசுவாசிகளே! நீங்கள் அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள், ஸலாமும் கூறுங்கள். (33:56)

அல்லாஹ் ஸலவாத் சொல்லுகிறான் என்றால் மலக்குகளிடம் நபியவர்களைப் புகழ்கிறான் என்பதும், மலக்குகள் ஸலவாத் சொல்கிறார்கள் என்றால் அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்காக துஆச் செய்கிறார்கள் என்பதும், மனிதர்கள் செய்கிற ஸலவாத் என்பது நபியவர்களுக்குச் செய்கின்ற இஸ்தி.்.பார் என்பதும் பொருளாகும் என அபுல்ஆலியா(ரழி) என்பவர் அறிவிக்கிறார். (அதாரம்: புகாரி)

இவ்வசனத்தில் அல்லாஹுத்தஆலா தனது அடியாரும் நபியுமாகிய முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு தன்னிடம் எப்படிப்பட்ட ஓர் அந்தஸ்த்து இருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துவதோடு அவர்களைப் பற்றி தன்னிடமுள்ள நெருங்கிய மலக்குகளிடம் புகழ்ந்துரைக்கிறான். மலக்குகளும் அவர்களுக்காக பிரார்த்திக்கிறார்கள். மேலும் உலகத்தாரும் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறவேண்டுமென்று கட்டளையிடுகிறான்.

(அவர்கள் மீது ஸலாம் கூறுங்கள்) என்பதன் அர்த்தம் இஸ்லாமிய முகமன் கொண்டு வாழ்த்துங்கள் என்பதாகும்.

ஒருவர் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொன்னால் கூடவே அவர் ஸலாமும் சொல்ல வேண்டும். ஸலாம்,

ஸலவாத் இவற்றில் ஒன்றோடு மாத்திரம் நிறுத்திக் கொள்ளக்கூடாது. ஏனெனில் அல்லாஹ் இரண்டையும் செய்யுமாறே ஏவியுள்ளான். சில சந்தர்ப்பங்களில் ஸலவாத் சொல்லுவது அவசியமாகிறது. ஒன்றில் வாஜிபாகவோ அல்லது சுன்னா முஅக்கதாவாகவோ இருக்கிறது.

இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) அவர்கள், "ஜலாஉல் அப்ஹாம்" என்ற தனது நூலில் அவசியம் ஸலவாத் சொல்ல வேண்டிய 40 இடங்களைக் குறிப்பிடுகிறார். அவற்றில் முதலாவதாக அத்தஹிய்யாத்தின் இறுதியில் ஸலவாத் கூறுவதைக் குறிப்பிடுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஸலவாத் சொல்வது ஷரீஅத்தில் உள்ளது என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்துவேறுபாடு கிடையாது. எனினும் அது வாஜிபா? இல்லையா? என்பதில் கருத்துவேறுபாடு கொண்டுள்ளனர்.

(பார்க்க: "ஜலாஉல் அப்ஹாம்" 222,223)

பின்னர் ஏனைய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுகிறார்கள். அவற்றில் குனூத்தின் இறுதிப்பகுதி, வெள்ளிக்கிழமை, இரு பெருநாள் குத்பாக்கள், முஅத்தின் கூறியதைப்போல் கூறிய பின் துஆ ஓதும்போது, நபி (ஸல்) அவர்களது பெயர் குறிப்பிடப்படும்போது ஸலவாத் சொல்வதும் அடங்கும்.

பின்னர் இமாமவர்கள் நபியவர்கள் மீது ஸலவாத்

சொல்லுவதனால் கிடைக்கக்கூடிய 40 பலாபலன்களைக் குறிப்பிடுகிறார்கள். அவற்றில் இவ்விடயத்தில் அல்லாஹ் வுக்கு கட்டுப்படுதல், ஒரு முறை நபியவர்கள் மீது ஸலவாத் சொல்பவருக்கு அல்லாஹ் 10 முறை அருள்புரிகிறான். ஸலவாத் சொல்லி கேட்கப்படும் துஆ அங்கீகரிக்கப்பட அதிக வாய்ப்பிருக்கிறது. ஸலவாத் சொல்லுவது நபி (ஸல்) அவர்களது ஷபாஅத் கிடைப்பதற்கான ஒரு காரணியாகும். ஸலவாத் சொல்லுவதால் பாவங்கள் மன்னிக்கப்படும். நபி அவர்கள்மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்பவருக்கு நபியவர்கள் பதில் சொல்கிறார்கள் என்பன போன்ற பயன்களும் அடங்கும்.

(பார்க்க : "ஜலாஉல் அப்ஹாம்" பக்கம் : 302)

அல்லாஹ்வுடைய ஸலவாத்தும் ஸலாமும் நபியவர்கள்மீது உண்டாவதாக!

## 04.அஹ்லுல் பைத்தின் சிறப்பும் அவர்கள் பற்றிய நடுநிலையான போக்கும்

அஹ்லுல் பைத் எனப்படுவோர் ஸதகா பெறுவதற்கு அனுமதிக்கப்படாத நபியவர்களின் குடும்பத்தினர் ஆவார்கள். விபரமாகக் கூறுவதாயின் அலி, ஜஃபர், அகீல், அல்-அப்பாஸ் ஆகியோரது குடும்பத்தினரையம், ஹாரித் பின் அப்துல் முத்தலிபின் சந்ததியினரையும் நபி (ஸல்) அவர்களது மனைவியர், பெண்பிள்ளைகளையும் "அஹ்லுல் பைத்" என்பது குறிக்கும்.

இதற்குப் பின்வரும் திருமறை வசனம் ஆதாரமாக இருக்கிறது.

“(நபியுடைய) வீட்டினரே! அல்லாஹ் நாடுவதெல்லாம் உங்களைவிட்டும் (சகல) அசுத்தங்களையும் போக்கி உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவதைத்தான்.” (33:33)

இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கையில், குர்ஆனைச் சிந்திக்கக்கூடியவர்கள் இவ்வசனத்தில் நபியவர்களின் மனைவியர்களும் அடங்குவர் என்பதில் சந்தேகம் கொள்ளமாட்டார். வசனப் போக்கு அவர்களையும் அடக்குவதாகவே இருக்கிறது. எனவேதான் இவ்வசனத்தைத் தொடர்ந்து,

“மேலும் உங்கள் வீடுகளில் ஓதப்படுகின்ற அல்லாஹ் வின் வசனங்களையும், ஹிக்மத் (எனும் சுன்னத்)தையும் நினைவு கூருங்கள். (33:34) என்று கூறுகிறான்.

அதாவது உங்கள் வீடுகளில் வைத்து அல்லாஹ் வுடைய தூதர் மீது அருளப்படுபவற்றைக்கொண்டு அமல் செய்யுங்கள்.

கதாதா(ரழி) அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் கூறுகிறார்கள்: ஏனைய மனிதர்களுக்கு வழங்கப்படாமால் உங்களுக்கு மாத்திரம் தரப்பட்டிருக்கும் இந்த நிஃமத்தை நினைத்துப் பாருங்கள். வஹி ஏனையோரது வீடுகளில் இறங்காமல் உங்கள் வீடுகளில் இறங்குகிறது.

இந்த சிறப்பிற்கு நபியவர்களின் மனைவியவர்களில் அன்னை ஆயிஷா(ரழி) அவர்களே மிகவும் அருகதை உடையவர்கள். ஏனெனில் நபியவர்களின் மனைவியாகிய ஆயிஷா (ரழி) அவர்களின் மடியில் இருக்கும்போதே அவர்களுக்கு வஹி அருளப்பட்டிருக்கிறது.

சில அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள் நபி (ஸல்) அவர்கள் மணந்தவர்களில் கன்னியாக இருந்தவர் ஆயிஷா (ரழி) அவர்கள்தான். நபியவர்களை மணம் முடிக்குமுன் அவர்கள் யாரையம் மணந்துகொள்ளவில்லை. எனவே, இந்தச்சிறப்பு அவர்களுக்கு இருப்பது பொருத்தமானதே. நபியவர்களின் மனைவியர் "அஹ்லே பைத்" என்றிருந்தால் அவர்களது உறவினர்களும் இந்த நாமத்திற்கு உரியவர்களே. (பார்க்க : தப்ஸீர் இப்னு கதீர்)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் ரஸூல் (ஸல்) அவர்களது குடும்பத்தினரை நேசிப்பதோடு அவர்கள் விடயமாக நபி (ஸல்) அவர்கள் "கதீர்கும்" என்ற இடத்தில் வைத்துக்கூறிய வஸிய்யத்தைப் பேணி வருகின்றனர். நபி (ஸல்) அவர்கள் "எனது குடும்பத்தார் (அஹ்லுல் பைத்) விடயத்தில் அல்லாஹ்வை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன் என்று கூறினார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம்)

எனவே, அஹ்லுல் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் அவர்களை நேசித்து கண்ணியப்படுத்துகின்றனர். ஏனெனில், அவர்களை நேசிப்பது நபி (ஸல்) அவர்களை

நேசிப்பதிலும், கண்ணியப்படுத்துவதிலும் அடங்கும். நபியவர்களை நேசிப்பது அவர்களது சுன்னாவைப் பின்பற்றுவதற்குரிய நிபந்தனையாகும்.

அஹ்லுல் பைத் விடயத்தில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் நிலைப்பாடு நடுநிலையானது. அவர்களில் மார்க்கப்பற்றுள்ளவர்களை நேசிக்கிறார்கள். மார்க்கத்திற்கு புறம்பானவர்களை விட்டு ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஏனெனில், மார்க்கம் இல்லையெனில் அவர்கள் நபியவர்களின் நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் எப்பயனும் இல்லை. நபி (ஸல்) அவர்கள் மீது "நீர் உம்முடைய நெருங்கிய உறவினர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக" (26:214) என்ற வசனம் அருளப் பட்டபோது அவர்கள் எழுந்து சென்று "குறைஷிகளே! உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மறுமையில் நான் அல்லாஹ்விடத்தில் உங்கள் விடயமாக எந்த சக்தியும் பெறமாட்டேன் என்று கூறினார்கள். அவ்வாறே அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப், நபியவர்களின் மாமி ஸபிய்யா ஆகியோருக்கும் கூறினார்கள். மேலும், மகள் பாத்திமாவைப் பார்த்து பாத்திமா! நீ எனது சொத்துக்களிலிருந்து விரும்பியதைக் கேள் மறுமையில் உன் விடயமாக அல்லாஹ்விடத்தில் எந்த சக்தியும் நான் பெறமாட்டேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி)

ஆதாரம் : புகாரி

மேலும் நபி (ஸல்) அவர்கள் "எவருடைய அமல் சுவர்க்கத்தின்பால் அவரை வேகமாக அழைத்துச் செல்ல வில்லையோ அவரை அவரது பரம்பரை சுவனத்தின்பால் அழைத்துச் செல்ல மாட்டாது" என்று கூறினார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம்)

அஹ்லுல் பைத்தினரில் சிலர் விடயத்தில் எல்லைமீறி அவர்களும் தவறுக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற போக்கைக் கடைப்பிடிக்கும் ராபிழாக்களதும், அஹ்லுல் பைத்தினரை எதிரிகளாகக் கண்டு அவர்களை அவமதிக்கும் நாஸிபாக்களதும், மேலும் அவர்களைக் கடவுள்களாக ஆக்கிக்கொண்டு அவர்களைக் கொண்டு வஸீலாத் தேடும் பித்அத்வாதிகளதும் வழிமுறைகளை விட்டும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் ஒதுங்கியே இருக்கின்றனர்.

அஹ்லுல் பைத் விடயத்தில் இவர்கள் தீவிரவாதமோ அல்லது தேக்க நிலையோ அற்ற ஒரு நடுநிலையான போக்கையையே கடைப்பிடிக்கின்றனர்.

மேலும், நேர்வழி நின்ற அஹ்லுல் பைத்தினரும் அவர்கள் விடயத்தில் எல்லை மீறுவதை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

அலி (ரழி) அவர்கள், அவர்களது விடயத்தில் எல்லை கடந்தோரைத் தீயிலிட்டு எரித்திருக்கிறார்கள். அப்படிப்

பட்டோர் கொலைசெய்யப்பட வேண்டும் என்ற கூற்றை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களும் அங்கீகரித்தார்கள். இருந்தும் தீயினால் கொல்வதை அவர்கள் விரும்ப வில்லை. பகரமாக வாளினாலே கொலை செய்யப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

தீவிரப்போக்கைக் கடைப்பிடித்தோரின் தலைவனாகிய அப்துல்லாஹ் பின் ஸபஉ என்பவனைக் கொலை செய்வதற்காக அலி (ரழி) அவர்கள் தேடினார்கள்.. ஆனால், அவன் வெருண்டோடித் தப்பித்துவிட்டான்.

05. ஸஹாபாக்களின் சிறப்பும், அவர்களுக்கு மத்தியில் இடம்பெற்ற சச்சரவுகள் பற்றிய சுன்னத் வல் ஜமாஅத்தினரின் நிலைப்பாடும்:

I) "ஸஹாபாக்கள்" என்போர் மு·.மினாக இருக்கும் நிலையில் நபியவர்களைச் சந்தித்து மு·.மினாகவே மரணித்திருப்பர். அவர்களைப்பற்றிய நமது அகீதா என்னவெனில், அவர்கள்தான் சிறந்த உம்மத்தினர். மேலும் சிறந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். ஷரீ அத்தைச் சுமந்து சென்று மற்றவர்களுக்கு எத்தி வைப் பதிலும், ஜிஹாத் செய்வதிலும் நபி (ஸல்) அவர்களோடு சேர்ந்து உழைத்தார்கள். அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் அவர்களைப் புகழ்ந்து கூறுகிறான்.

"முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும் (இஸ்லாத்தை

ஏற்க) முதலாவதாக முந்திக் கொண்டவர்களும், (அவர்களின் சொல், செயல்களாகிய) நற்கருமத்தில் அவர்களைப் பின்பற்றினார்களே அவர்களும் அவர்களை அல்லாஹ் திருப்தியடைந்தான். அவர்களும் (அல்லாஹ் வாகிய) அவனைத் திருப்தியடைந்தனர். அன்றியும், சுவனபதிகளை அவர்களுக்கென அவன் தயாராக்கி வைத்திருக்கின்றான். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அவற்றிலேயே அவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள். இது மகத்தான வெற்றியாகும்." (9:100)

"முஹம்மத் அல்லாஹ்வின் தூஃதராவார். அவருடன் இருப்பவர்களோ நிராகரிப்போர் மீது மிகக் கடின மானவர்கள். தங்களுக்கிடையே மிக்க அன்புடையவர்கள். (குனிந்து) ருகூஉ செய்பவர்களாகவும் (சிரம் பணிந்து) சுஜுது செய்பவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர். அல்லாஹ்விடமிருந்து பேரருளையும், (அவனுடைய) பொருத்தத்தையும் தேடுவார்கள். அவர்களது அடையாளம் சிரம்பணிவதன் அடையாளத்தினால் அவர்களுடைய முகங்களில் இருக்கும். இதுவே தவ்றாத் (என்னும் வேத)த்தில் உள்ள அவர்களின் உதாரணமாகும். இன்னும் இன்ஜீலில் அவர்களுக்குள்ள உதாரணமாவது: ஒரு பயிரைப் போன்றதாகும். அது தன் முளையை வெளிப்படுத்தி, பின்னர் அதைப் பலப்படுத்துகின்றது. பின்னர் அது (தடித்து) கனமாகின்றது. பின்னர் அது தன் தண்டின் மீது நிமிர்ந்து நிற்கின்றது. விவசாயிகளை ஆச்சரியமடையச் செய்கிறது. இவர்களைக் கொண்டு

நிராகரிப்போருக்கு அவன் கோபமூட்டுவதற்காக (இவ்வாறு உதாரணங்கள் கூறுகின்றான்.) அவர்களில் விசுவாசங் கொண்டு நற்கருமங்களும் செய்கிறார்களே அத்தகைய வர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களித்திருக்கிறான்" (48:29)

"தங்கள் வீடுகளையும், தங்கள் பொருட்களையும் விட்டு (அக்கிரமமாக மக்காவிலிருந்து) வெளியேற்றப்பட்டார்களே அத்தகைய ஹிஜ்ரத் செய்தவர்களான ஏழைகளுக்கும் (அப்பொருளில் பங்குண்டு) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பேரருளையும், (அவனுடைய) பொருத்தத்தையும் தேடுகின்றனர். இன்னும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவி செய்கின்றனர். இவர்கள்தாம் (ஸாதிகூன் எனும்) உண்மையாளர்கள்".

இன்னும் (முஹாஜிர்களாகிய) அவர்களுக்கு முன்பே (மதீனாவில்) வீட்டையும், (அல்லாஹ்வின் மீது) விசுவாசம் கொள்வதையும் (கலப்பற்றதாக்கிக்) கொண்டிருந்தார்களே அத்தகைய (அன்சாரிகளான)வர்கள் தம்பால் ஹிஜ்ரத் செய்து வந்தோரை நேசிப்பவர்கள். மேலும், (ஹிஜ்ரத் செய்துவந்த அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதைப் பற்றி தங்கள் நெஞ்சங்களில் காழ்ப்புணர்ச்சியைப் பெற மாட்டார்கள். மேலும் தங்களுக்கு (கடும்) தேவையிருந்த போதிலும் தங்களைவிட (முஹாஜிரீன்களான அவர் களை)த் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இன்னும் எவர் தன் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டாரோ அத்தகையோர்தாம் வெற்றி பெற்றவர்கள்." (59:8,9)

இந்த வசனங்களில் அல்லாஹுத்தஆலா முஹாஜிர் களையும், அன்ஸார்களையும் புகழ்ந்துரைக்கின்றான். நன்மையின்பால் அவர்கள் முந்திக் கொண்டவர்கள் என்று வர்ணிக்கிறான். அவர்களைப் பொருந்திக் கொண்டதாகவும், அவர்களுக்கு சுவர்க்கங்களைத் தயார் பண்ணி வைத்திருப்பதாகவும் அறிவிக்கின்றான். மேலும் அவர்கள் தங்களுக்கிடையில் பரஸ்பர அன்புடன் நடந்து கொள்ளும் அதேவேளை காபிர்களுடன் கடுமையாகவும் நடந்து கொள்வதாகவும், அவர்கள் அதிகம் ருகூஉ, சுஜூது, செய்யக்கூடியவர்கள் என்றும், பரிசுத்தமான உள்ளத் துக்குச் சொந்தக்காரர்கள் என்றும், ஈமான், வழிப்படல் என்ற பண்புகளைக் கொண்டு அவர்களை அறிந்து கொள்ள முடியும் என்றும் அவர்களை உயர்த்திக் கூறுகிறான். இன்னும் தனது நபியின் தோழர்களாக இருந்து கொண்டு அவர்களது எதிரிகளைக் கோபமடையச் செய்யக் கூடியவர்களாகவும் ஸஹாபாக்களை ஆக்கியிருக்கிறான்.

அன்ஸார்களையும், அவர்கள் ஹிஜ்ரத் வந்த இடத்திற்குச் சொந்தக்காரர்கள், உதவியாளர்கள், உண்மை யான ஈமானை உடையர்கள் என்றும், முஹாஜிர்களுக்கு உதவிசெய்தோர், தன்னலப்பற்றற்றோர் என்றும் வர்ணித்து இதனாலேயே அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்றும் கூறுகிறான்.

இவை ஸஹாபாக்களின் சில பொதுப்படையான சிறப்பியல்புகள். மேலும் ஒவ்வொரு ஸஹாபியினதும்

பெயரைக் குறிப்பிட்டு அவர்களது சிறப்பியல்புகளையும் இஸ்லாம் குறிப்பிடுகிறது.

அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக!

ஸஹாபாக்களில் மிகவும் சிறந்தவர்கள் அபூபக்கர்(ரழி), உமர்(ரழி), உஸ்மான்(ரழி), அலி(ரழி) ஆகிய நான்கு கலீபாக்கள். அவர்களுக்கு அடுத்த இடத்தைப் பெறக்கூடியவர்கள் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயங் கூறப்பட்ட பதின்மரில் எஞ்சியோராகிய தல்ஹா, சுபைர், அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப், அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ், ஸஃத் பின் அபீ வக்காஸ், ஸஈத் பின் ஸைத் (ரழி) ஆகியோர்.

அன்சாரிகளை விட முஹாஜிர்களும், முஹாஜிர்களில் பத்ரிலும், பைஅதுர் ரிழ்வானிலும் கலந்துகொண்டோரும் சிறந்தவர்களாக கருதப்படுகின்றனர். மேலும் மக்கா வெற்றிக்கு முன் இஸ்லாத்தை ஏற்றோர் அதற்குப் பின் இஸ்லாத்தை ஏற்றோரை விடச் சிறந்தவர்கள்.

II) ஸஹாபாக்கள் மத்தியில் இடம்பெற்ற சண்டை சச்சரவுகள் பற்றி அஹ்லுல் ஸுன்னா வல் ஜமா அத்தினரின் நிலைப்பாடு :

**ஸஹாபாக்கள் மத்தியில் ஏற்பட்ட பித்னாவிற்கான காரணம் :**

இதற்கான அடிப்படைக் காரணம் யூதர்களது சதியேயாகும். இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்ட அவர்கள் எமன் நாட்டைச் சேர்ந்த அப்துல்லாஹ் பின் ஸப.:. எனும் யூதனை முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமியத் தோல்போர்த்தி அனுப்பிவைத்தனர். போலியாக இஸ்லாத்தினுள் நுழைந்த அவன் மூன்றாவது கலீபா உஸ்மான் (ரழி) அவர்களுக்கு எதிராகத் தான் கொண்டுவந்த நச்சுக்கருத்துக்களைக் கக்க ஆரம்பித்தான். அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை அவிழ்த்து விட்டான். குறைமதியாளர்களும், ஈமானில் உறுதியற்றோரும், குழப்பவாதிகளும் அவனது கருத்துக்களால் கவரப்பட்டனர். இந்த யூத சதித்திட்டத்தின் விளைவாக கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கலீபாவின் படுகொலையைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு தோன்றியது. அவர்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலை உருவாகியது. ஈற்றில் ஸஹாபாக்களின் இஜ்திஹாதின் விளைவாக அவர்கள் மத்தியில் சண்டை நடைபெற்றது. “தஹாவிய்யா” என்ற நூலின் விரிவுரையாளர் கூறுகிறார்கள் : ராபிழாக்களின் தோற்றத்தின் பின்னணி

வழிகேடனான ஒரு முனாபிக்கேயாவான். அவனது நோக்கம் இஸ்லாமிய மார்க்கத்தைப் பொய்ப்பித்து ரஸூல் (ஸல்) அவர்கள் மீது களங்கம் கற்பிப்பதாகவே இருந்தது என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்துல்லாஹ் பின் ஸப.். என்பவன் தன்னை முஸ்லிமாகக் காட்டியது தனது சதித்திட்டங்கள், சூழ்ச்சிகள் மூலம் இஸ்லாத்தின் தூய்மையைக் கெடுப்பதற்காகவேயாகும். இவனது போக்கு 'பவுல்ஸ்' என்ற யூதனை ஒத்ததாகவே இருக்கின்றது. இந்த அப்துல்லாஹ் பின் ஸப.். ஆரம்பத்தில் தன்னை ஓர் ஆன்மீகவாதியாகக் காட்டினான். பின்னர், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் என்ற பாணியில் ஈடுபடும் ஒருவனாகக் காட்டினான். உஸ்மான் (ரழி) அவர்களின் படுகொலை இடம்பெறும்வரை இப்படியே நடித்துக்கொண்டு குழப்பத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டே இருந்தான். பின்னர் கூபாவிற்கு வந்து அங்கே தனது நோக்கங்களை நிறைவு செய்வதற்காக அலி (ரழி) அவர்கள் விடயத்தில் எல்லை மீறிய போக்கைக் கடைப்பிடித்தான். இச்செய்தி அலி (ரழி) அவர்களுக்கு எட்டியதும் அவனைக் கொலை செய்வதற்காகத் தேடினார்கள். ஆனால் அவன் கர்கீஸ் என்ற பிரதேசத்திற்கு தப்பி ஓடிவிட்டான். வரலாற்றில் இவனது செய்திகள் பிரபல்யமானது.

இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: உஸ்மான் (ரழி) அவர்கள் படுகொலை செய்யப்பட்டதும் உள்ளங்கள் பிளவுபட்டன; துன்பங்கள்

அதிகரித்தன; நல்லவர்கள் அடங்கி, கெட்டவர்கள் தலை தூக்கினர்; குழப்பத்தை உண்டுபண்ணச் சக்தியற்றவர்கள் அதற்கான முயற்சியில் இறங்கினர்; சீர்திருத்தத்தையும், நலவையும் விரும்பியோர் அதற்குச் சக்தியற்றுப்போயினர். எனவே, அவர்கள் அப்போது கிலாபத்திற்கு மிகவும் தகுதியாக இருந்த அலி (ரழி) அவர்களுக்கு பைஅத் செய்தனர். எனினும் உள்ளங்கள் பிரிந்து காணப்பட்டன. பித்னாவிற்கான தீ மூட்டப்பட்டிருந்தது. கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை ஜமாஅத் சீராகவில்லை. கலிபாவிற்கும் அவரோடிருந்த நல்லவர்களுக்கும் நிலைமையைச் சீசெய்ய முடியவில்லை. அவ்வேளை சிலர் குழப்பத்திலும் பிரிவினையிலும் இறங்கினார்கள். அவர்களுக்கு மத்தியில் நடந்தது நடந்துவிட்டது.

(மஜ்மூஉல் பதாவா 25/304, 305)

மேலும் இமாமவர்கள், அலி(ரழி) அவர்களுக்கும், முஆவியா (ரழி) அவர்களுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தில் கலந்து கொண்ட ஸஹாபாக்களின் நிலையை விபரிக்கையில் முஆவியா (ரழி) அவர்கள், அலி (ரழி) அவர்களோடு சண்டை செய்கையில் தனக்காக கிலாபத்தை அவர்கள் வாதிடவில்லை. அப்போது அவர்களுக்கு யாரும் பைஅத் செய்யவுமில்லை. தானே கிலாபத்திற்கு தகுதியானவன் என்பதற்காகவும் அவர்கள் போராடவுமில்லை. இது பற்றி அவர்களிடம் கேட்ட வர்களுக்கு அவர்கள் சொன்ன பதிலும் இதுதான். இன்னும், முஆவியாவோ அவரோடிருந்தவர்களோ அலி

(ரழி) அவர்களுடன் யுத்தத்தை ஆரம்பிக்கவுமில்லை. அப்படியானால் நடந்தது என்ன? அலி (ரழி) அவர்களும் அவர்களோடிருந்தவர்களும், முஸ்லிம்களுக்கு ஒரே கலீபாதான் இருக்கவேண்டுமென்று கருதியதால், முஆவியா உட்பட எல்லோரும் அலி (ரழி) அவர்களுக்கு பைஅத் செய்து அவர்களுக்கு கட்டுப்படுவது வாஜிப் எனக் கண்டனர். எனவே அவர்களுக்கு பைஅத் செய்து கட்டுப்பட மறுத்தவர்களை பிரிவினைவாதிகளாகவும், கட்டுப்படும்வரை அவர்களோடு போராட வேண்டும் என்றும் முடிவெடுத்தார்கள். ஆனால், முஆவியாவும், அவர்களுடன் இருந்தவர்களும் இதற்கு உடன்படவில்லை. நாங்கள் அலிக்கு பைஅத் செய்யவில்லை என்பதற்காக எங்களுக் கெதிராக போர் தொடுக்கப்பட்டால் நாங்கள் அநியாயம் இழைக்கப்பட்டவர்களாகவே இருப்போம் என்று கூறினர். மேலும், உஸ்மான் (ரழி) அவர்கள் அநியாயமாகவே கொல்லப்பட்டார்கள் என்பது முஸ்லிம்கள் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட விஷயம். அவர்களைக் கொலை செய்தவர்கள் அலியுடைய படையிலேதான் இருக்கின்றனர். அவர்கள் பலத்தோடும் இருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு கட்டுப்பட மறுத்தால் எங்களுக்கு அநியாயம் இழைப்பார்கள். அலியோ அவர்களைத் தடுப்பதற்கு ஆற்றல் இல்லாமல் இருக்கிறார். எனவே எங்களுக்கு நீதி வழங்கச் சக்தி பெறும் ஒருவருக்கே நாங்கள் பைஅத் செய்வோம்" என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஸஹாபாக்களுக்கு மத்தியில் ஏற்பட்ட குழப்ப நிலை அதன் விளைவாக நடந்த சண்டை தொடர்பான அஹ்லுல் ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் நிலைப்பாட்டை நாம் இரண்டு கோணங்களில் நோக்கலாம்.

அ. ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்தவை பற்றி ஆராய்ச்சி செய்யாமல் அதுபற்றி எதுவும் பேசாமல் இருப்பார்கள். மேலும் அவர்கள் இவ்வாறு கூறு வார்கள்:

"எங்கள் இரட்சகனே! எங்களையும் விசுவாசங் கொள்வதில் எங்களை முந்திவிட்டார்களே அத்தகைய எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன், மிகக் கருணையுடையவன்." (59:10)

ஆ. ஸஹாபாக்களது அந்தஸ்த்தைக் குறைக்கும் கருத்தில் வந்த அறிவிப்புக்களுக்கு பின்வருமாறு விளக்கம் சொல்வார்கள் :

1. அவர்களின் மீது கோபம் கொண்டோரால் புனைந்துரைக்கப்பட்டவையாக இருக்கும்.

2. ஸஹீஹான அறிவிப்புக்களில் இல்லாத பல செய்திகள் கூடுதலாக கூறப்பட்டிருக்கும். அல்லது உள்ளவை குறைக்கப்பட்டிருக்கும்.

3. அவர்கள் விடயத்தில் வந்த ஸஹீஹான செய்திகள் மிகக் குறைவே. அவற்றிலும் கூட அவர்களது அந்தஸ்த்திற்கு களங்கத்தை உண்டு பண்ண எந்த முகாந்திரமும் இல்லை. ஏனெனில், அவை இஜ்திஹாதோடு தொடர்புபட்ட விடயங்கள். அவ்விடயங்களில் இஜ்திஹாத் செய்யக்கூடியவர் சரியான இலக்கை அடைந்தால் அவருக்கு இரண்டு நன்மைகள் கிட்டும். தவறிழைத்தால் ஒரு நன்மை கிடைக்கும்.

"நீதிபதி இஜ்திஹாத் செய்து சரியான இலக்கை அடைந்தால் அவருக்கு இரண்டு நன்மைகளும், தவறிழைத்தால் ஒரு நன்மையும் கிட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

அறிவிப்பவர்: அம்ருப்னுல் ஆஸ்(ரழி)
ஆதாரம் : புகாரி, முஸ்லிம்

4. அவர்களும் மனிதர்களே அவர்களும் தவறுசெய்ய வாய்ப்பிருக்கிறது. ஏனெனில் அவர்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களல்ல. இருந்தபோதிலும் அவர்கள் செய்யக் கூடிய தவறுகளுக்குப் பிராயச்சித்தங்கள் பின்வருமாறு அமைகின்றன.

a) தவ்பா செய்வது: தவ்பா பாவங்களை அழித்துவிடும் என்பது ஆதாரங்களின் அடிப்படையில் அறியப்பட்ட விடயம்.
b) இடம்பெற்ற தவறுகளுக்கு மன்னிப்பாக அவர்களது சிறப்புக்களும் ஏற்கனவே அவர்கள் செய்த நல்ல

றங்களும் அமைகின்றன.

"நிச்சயமாக நற்செயல்கள் தீய செயல்களைப் போக்கி விடும்" (11:114)

c) ஏனையோரை விட அவர்களது நல்லறங்களுக்கு இரட்டிப்புக்கூலி கொடுக்கப்படும். ஏனெனில் அவர்கள் சிறந்த நூற்றாண்டைச்சேர்ந்தோர். மேலும், அவர்கள் வழங்குகின்ற ஒருபிடி தர்மம் உஹுது மலையைத் தங்கமாக மாற்றி ஏனையோர் தர்மம் செய்வதைவிடச் சிறந்தது.

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

இமாம் இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ஸஹாபாக்களோ, நபியவர்களின் நெருங்கிய உறவினர்களோ அல்லது இஸ்லாத்தை ஏற்றுக் கொள் வதில் முந்திக் கொண்டோரோ யாராக இருந்தாலும் அவர்கள் பாவங்களை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள் என்று நம்புவது அஹ்லுல் ஸுன்னா வல் ஜமாஅத்தினரதும் இமாம்களதும் கொள்கை(அகீதா)அல்ல. மாறாக, அவர்களும் தவறுகள் செய்யக் கூடியவர்கள்தான். ஆனால், அவர்கள் செய்யக்கூடிய பாவங்களை தவ்பாவைக் கொண்டோ அல்லது நல்லறங்களைக் கொண்டோ அல்லாஹ் மன்னித்துவிடுவான்.

"மேலும், உண்மையைக் கொண்டு வந்த வ(ராகிய நமது தூத)ரும் அதனை உண்மையென்றே (ஒப்புக் கொண்டு) ஏற்பவர்களும் (ஆகிய) அத்தகையவர்தாம்

பயபக்தியாளர்கள். அவர்களுக்குத் தங்கள் இரட்சகனிடத்தில் அவர்கள் நாடியவை உண்டு. அது நன்மை செய்துகொண்டிருந்தோருக்குரிய (தகுதியான) கூலியாகும். ஏனெனில், அவர்கள் செய்தவற்றில் மிகத் தீயதை அல்லாஹ் அவர்களை விட்டும் நீக்கி (மன்னித்து) விட்டு அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றிற்கு மிக அழகானவற்றையும் (நற்) கூலியாக அவர்களுக்கு கொடுப்பான்."
(39:33-35)

"முடிவாக இவன் வாலிபனாகி நாற்பது வயதை அடைந்ததும் என் இரட்சகனே! என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்த உன் அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, நீ எதைப் பொருந்திக் கொள்வாயோ அந்த நற்செயலைச் செய்யவும்" (நல்லறிவை) நீ எனக்கு உதிக்கச் செய்வாயாக! எனக்காக எனது சந்ததியில் (உள்ளோரை) நீ சீர்திருத்தியும் வைப்பாயாக! நிச்சயமாக நான் தவ்பாச்செய்து உன்பக்கம் திரும்பிவிட்டேன். நிச்சயமாக நானோ (உனக்கு முற்றிலும் கீழ்படிந்த) முஸ்லிம்களில் (ஒருவனாகவும்) இருக்கிறேன்" என்று கூறுவான்.

அவர்கள் எத்தகையோரென்றால் சுவர்க்கவாசிகளில் உள்ளவர்களாக இருக்க அவர்கள் செய்தவற்றில் (உள்ள) மிக அழகானதை நாம் அங்கீகரித்துக் கொண்டு அவர்களுடைய தீமைகளைவிட்டும் புறக்கணித்து விடுவோம்." (46:15,16)

(பார்க்க : மஜ்மூஉல் பதாவா : 35/69)

அன்று ஸஹாபாக்களுக்கு மத்தியில் இடம்பெற்ற கருத்து வேறுபாடுகளையும், சண்டைகளையும் இஸ்லாத்தின் விரோதிகள், ஸஹாபாக்களை இழிவு படுத்தவும், அவர்களது கண்ணியத்தை இல்லாமலாக்கவும் ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்துகின்றனர்.

தமக்கு தெரியாதவற்றை எழுதும் போக்கை உடைய சில நவீனகால எழுத்தாளர்களும் இந்த சதித்திட்டத்திற்கு இலக்காகி நபித் தோழர்கள் மத்தியில் நடந்த பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளாகத் தங்களை ஆக்கிக் கொள்கின்றனர். இவர்கள் எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் ஸஹாபாக்கள் சிலரை சரி கண்டு, சிலரைக் குறை கூறியும் வருகிறார்கள். இவர்கள் இவ்விடயத்தில் அறியாமையையும், மனோ இச்சையையும், இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டு செயற்படும் கீழைத்தேய வாதிகளையுமே பின்பற்றுகின்றனர்.

இந்த எழுத்தாளர்கள் இஸ்லாமிய உம்மத்தின் கீர்த்திமிக்க வரலாறு பற்றிய ஞானமில்லாத வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு மத்தியில் சந்தேகங்களை உண்டு பண்ணுவதோடு இஸ்லாத்தைக் குறைகூறக் கூடியவர்களாகவும், முஸ்லிம்களை பிளவுபடுத்தக் கூடியவர்களாகவும், ஸலபுஸ்ஸாலிஹீன்கள் மீது வெறுப்புக் கொள்ளக் கூடியவர்களாகவும் “மேலும் அவர்களுக்குப் பின் வந்தார்களே அத்தகையோர்கள் “எங்கள் இரட்சகனே! எங்களையும் விசுவாசங்கொள்வதில் எங்களை முந்தி

விட்டார்களே அத்தகைய எங்களது சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன் மிக்க கருணையுடையவன்" என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள்"(59:10) என்ற வசனத்தை நடைமுறைப்படுத்தா தவர்களாகவுமே அவ் இளைஞர்களை ஆக்குகின்றனர்.

06.ஸஹாபாப்பெருமக்களையும், இமாம்களையும் திட்டுவது கூடாது

I) ஸஹாபாப்பெருமக்களைத் திட்டுவது கூடாது :-

நபித்தோழர்கள் விடயத்தில் எண்ணங்களும், பேச்சுக்களும் தூய்மையாக இருக்கவேண்டுமென்பது அஹ்லுல் ஸுன்னா வல் ஜமாஅத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். அல்லாஹுத்தஆலா அவர்களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்.

"மேலும் அவர்களுக்குப் பின் வந்தார்களே அத்தகையோர்கள் "எங்கள் இரட்சகனே! எங்களையும் விசுவாசங் கொள்வதில் எங்களை முந்தி விட்டார்களே அத்தகைய எங்களது சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங்கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன். மிக்க கருணையுடையவன்" என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள். (59:10)

மேலும் இந்த அடிப்படைக்குப் பின்வரும் நபிமொழியும் ஆதாரமாக இருக்கின்றது.

"என்னுடைய தோழர்களைத் திட்டாதீர்கள். எனது உயிர் யார் கைவசம் இருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தை (அல்லாஹ்வுடைய பாதையில்) செலவு செய்தாலும் அது எனது தோழர்கள் செலவு செய்த ஒரு பிடிக்குக்கூட ஈடாகாது. ஏன்? அதில் அரைவாசிக்குக் கூட நிகராகாது" என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

ஸஹாபாக்களைத் திட்டி, அவர்களின் சிறப்புக்களை மறுத்து, அவர்களில் பெரும்பாலானோரை காபிர்களாக்கும் றாபிழாக்களதும், கவாரிஜிகளதும் போக்கைவிட்டும் அஹ்லுல் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் ஒதுங்கி இருக்கின்றனர். அதுமட்டுமல்ல அவர்களது சிறப்புப்பற்றி வந்த அனைத்து குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்க ளையும் ஏற்றுக் கொள்கின்றனர். அத்துடன் "உங்களில் சிறந்தவர் எனது நூற்றாண்டைச் சேர்ந்தவர்"

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

என்ற ஹதீஸின் அடிப்படையில் அவர்கள் சிறந்த நூற்றாண்டைச் சார்ந்தோர் என்றும் நம்புகின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் தனது உம்மத் 73 கூட்டமாகப் பிரியும். அதில் ஒன்றைத்தவிர மற்றைய அனைத்தும் நரகம் செல்லும் என்று கூறியபோது, நபித்தோழர்கள்

அந்த ஒரு கூட்டம் பற்றிக் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அவர்கள் இன்றையதினம் நானும் எனது தோழர்களும் இருக்கக்கூடிய வழியில் உள்ளோர்" என்று பதில் அளித்தார்கள். (ஆதாரம் : அஹ்மத்)

இமாம் முஸ்லிமின் முக்கிய ஆசிரியர்களில் ஒருவராகிய அபூஸுர்ஆ அவர்கள் கூறுகிறார்கள்:-

"ஸஹாபாக்களில் எவரையாவது குறை காணக் கூடியவனை நீர் கண்டால் அவன் ஒரு வழிகேடன் என்பதைத் தெரிந்துகொள். ஏனெனில், அல்குர்ஆன் உண்மையானது. ரஸூல் (ஸல்) அவர்களும் அவர்கள் கொண்டு வந்தவையும் உண்மையானவை. அவற்றை அப்படியே நமக்குத் தந்தோர் ஸஹாபாப் பெருமக்களே. அவர்கள் மீது களங்கத்தை உண்டுபண்ணக் கூடியவன் குர்ஆன், சுன்னாவைப் பொய்யாக்கவே விரும்புகிறான். ஆகவே, அப்படிப்பட்டவனை களங்கப்படுத்துவதே மிகப் பொருத்தமானது. அவன் வழிகேடன் என்பதே நீதியான தீர்ப்பு."

மேலும் அல்லாமா இப்னு ஹம்தான் அவர்கள் "நிஹாயதுல் முப்ததியீன்" என்ற நூலில் கூறுகின்றார்:-

ஸஹாபாக்களைத் திட்டுவது கூடுமென்று கருதி யாராவது அவர்களைத் திட்டுவானாக இருப்பின் அவன் காபிராவான். அப்படிக் கருதாமல் திட்டினால் அவன்

பாவியாவான். மேலும் அவர்களைப் பாவியாக்கி அவர் களது மார்க்க விடயத்தில் அவர்களைக் குறைகாண் பவனும் அவர்களைக் காபிராக்கக் கூடியவனும் காபிரே.
(பார்க்க: ஷரஹ் அகீதது ஸபாரீனீ 2/388-389)

II) கண்ணியத்திற்குரிய இமாம்களை ஏசுவதோ இழிவுபடுத்துவதோ கூடாது.

ஸஹாபாக்களுக்கு அடுத்தபடியான சிறப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் தாபியீன்களிலும் தபஉத் தாபியீன்களிலும் அதனைத் துயர்ந்து வந்தவர்களிலும் உள்ள கண்ணியத்திற்குரிய இமாம்களாகும்.

“முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும் (இஸ்லாத்தை ஏற்க) முதலாவதாக முந்திக் கொண்டவர்களும் (அவர்களின் சொல், செயல்களாகிய) நற்கருமத்தில் அவர்களைப் பின்பற்றினார்களே அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் (அல்லாஹ்வாகிய) அவனைப் பொருந்திக் கொண்டனர்.” (9:100)

எனவே, அவர்களைத் தரக்குறைவாக விமர்சிப்பதும், அவர்களை ஏசுவதும் கூடாது. ஏனெனில் அவர்கள் நேர்வழி நின்ற அறிஞர்கள்.

“நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னர் எவர், (நம்முடைய) இத்தூதருக்கு மாறு செய்து,

விசுவாசிகளின் வழியல்லாத (வேறு வழியான)தைப் பின்பற்றுகிறாரோ, அவரை நாம் அவர் திரும்பிய தவறான வழியிலேயே திருப்பி விடுவோம். (பின்னர்) அவரை நரகத்தில்) புகுத்திவிடுவோம். அது சென்றடையுமிடத்தில் மிகக்கெட்டது.” (4:115)

“அத்தஹாவிய்யா” என்ற நூலின் விரிவுரையாளர் கூறுகிறார்:-

“அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நேசித்ததை அடுத்து மு.்.மின்களை நேசிப்பது எல்லா முஸ்லிம்களதும் கடமையாகும். இதனையே அல்குர்ஆன் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாக நபிமார்களின் வாரிசுகளாகிய இமாம்களை நேசிக்க வேண்டும். அவர்கள் சமுதாயத்தின் நட்சத்திரங்கள். அவர்கள் நேர்வழியில் இருந்தார்கள் என்பது முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவு. நபிமார்களின் உம்மத்தில் இவர்கள் நபியவர்களின் மறைந்துபோன சுன்னாக்களை உயிர்ப்பிப்பவர்கள்.”

“அவர்களைக்கொண்டே அல்குர்ஆன் “இகாமத்” (நிலைநிறுத்தல்) செய்யப்பட்டது. குர்ஆனை அவர்கள் செயற்படுத்தினர். ரஸூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது வாஜிப் என்பதில் அவர்கள் அனைவரும் ஒத்த கருத்தைக் கொண்டிருந்தனர். ஸஹீஹான ஹதீஸிற்கு மாற்றமான ஒரு கருத்தை அவர்கள் சொல்லியிருந்தால் அதற்கு ஏதாவது நியாயம் இருக்கும்.”

அவர்கள் ஸஹீஹான ஹ்தீஸை எடுக்காமல் இருந்த தற்கான நியாயங்களைப் பின்வருமாறு நாம் கூறலாம்.

a) நபி (ஸல்) அவர்கள் அதனைக் கூறியிருக்க மாட்டார்கள் என்று அவர் கருதுவது.
b) அந்தக் கூற்றின் மூலம் குறிப்பிட்ட விடயத்தைத்தான் நாடியிருப்பார்கள் என்ற நம்பிக்கை.
c) அந்த சட்டம் மாற்றப்பட்டது என்று நம்புவது.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதில் முந்திக்கொண்ட வர்கள் நபி(ஸல்) அவர்கள் கொண்டு வந்ததை நமக்கு எத்திவைத்து, அதில் நமக்குத்தெரியாதவற்றைத் தெளிவு படுத்தியவர்கள் என்ற அடிப்படையில் எங்களைவிட அவர்கள் சிறந்தவர்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டார்கள்.

"எங்கள் இரட்சகனே! எங்களையும், விசுவாசங் கொள்வதில் எங்களை முந்திவிட்டார்களே அத்தகைய எங்களது சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன்; மிகக்கருணை உடையவன்." (59:10)

இஜ்திஹாதில் ஏற்பட்ட தவறுகளுக்காக அறிஞர் பெருமக்களின் அந்தஸ்த்தைக் குறைப்பது பித்அத்

வாதிகளது போக்காகும். மேலும், அது இஸ்லாத்தின் மீது சந்தேகத்தை உண்டுபண்ணவும், முஸ்லிம்களுக்கு மத்தியில் பகைமையை வளர்க்கவும், ஸலபுஸ்ஸாலி ஹீன்களுக்கும், பின்னால் வந்தவர்களுக்கு மிடையில் பிரிவினையை ஏற்படுத்தவும், இளைஞர்களை இஸ்லாமிய அறிஞர்களை விட்டும் தூரப்படுத்தவும் இஸ்லாத்தின் விரோதிகளால் தீட்டப்பட்ட சதித்திட்டங்களாகும். இவ் விடயத்தை வளர்ந்து வரும் தலைமுறையினர் உணர்ந்து கொள்ள வேண்டும். போலியான வழிகெட்ட பிரச் சாரங்களுக்கு அடிபட்டுச் செல்லக் கூடாது. (அல்லாஹ் போதுமானவன்.)

இயல்
IV

# பித் அத்

*இப்பகுதி உள்ளடக்கும் விடயங்கள்*

1. பித்ஆ வரைவிலக்கணமும், வகைகளும், அதன் சட்டங்களும்
2. முஸ்லிமின் வாழ்வில் பித்அத்தின் தோற்றமும் அதற்கான காரணங்களும்
3. பித்அத்வாதிகள் விடயத்தில் இஸ்லாமிய உம்மத்தின் நிலைப்பாடும், இவர்களுக்கு மறுப்புக் கூறுவதில் அஹ்லுஸ் ஸு ன்னா வல் ஜமாஅத்தின் போக்கும்
4. நவீன பித்அத்துக்களுக்குச் சில முன் உதாரணங்கள்
    1. நபி பிறந்த தின விழா
    2. சில புராதனச் சின்னங்கள், இடங்கள், மரணித்த நல்லடியார்களிடம் அருளை எதிர்பார்த்தல்
    3. அல்லாஹ்வை நெருங்கும் நல்லெண்ணத்தில் இபாதத்துக்களில் செய்யப்படும் பித்அத்துக்கள்

## "பித்அத்" அதன் வரைவிலக்கணமும், வகைகளும் அவற்றுக்கான சட்டங்களும்

I) அரபு பாஷையில் பித்அத் என்பது புதுமை, முன் உதாரணமின்றி தோன்றக்கூடியது என்ற கருத்துக்களுக்கு இடம்பாடான சொல்லாகும். இதனடிப்படையிலேயே {بديع السموات والأرض} "வானங்கள், பூமியை எவ்வித முன் உதாரணமுமின்றி தோற்றுவித்தவன்" (2:17) என்ற வசனமும் {قل ما كنت بدعا من الرسل}

"நபியே! தூதர்களில் நான் புதியவனல்ல என்று கூறுவீராக" (46:9) என்ற வசனமும் அமைந்திருக்கின்றன. அதாவது இரண்டாவது வசனத்தில் அல்லாஹ், நபி (ஸல்) அவர்களைப் பார்த்து நான் தூதுத்துவத்தைச் சுமந்துவந்த முதல் மனிதனல்ல, எனக்கு முன்னரே பல தூதுவர்கள் வந்துள்ளனர் என்று கூறுவீராக எனக் கூறினான்.

"பித்அத்" என்ற பதம், புதுமையாகத் தோன்றுதல் என்ற அர்த்தத்திலேயே மேற்படி வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது'

**புதுமைகள் இருவகை :**

i) உலக வழக்கங்களில் உருவாகும் புதுமைகள்: நவீன கண்டு பிடிப்புக்களை இதற்கு உதாரணமாகக்

கூறலாம். இவை ஆகுமானவையாகும். ஏனெனில் வணக்கங்கள் அல்லாத உலக வழக்காறுகளில் தடுக்கப் பட்டவை தவிர்ந்த அனைத்தும் ஆகுமானவையாகும் என்பதே பொதுவான விதியாகும்.

ii) மார்க்க விடயங்களில் தோற்றுவிக்கப்படும் புதுமையானவைகள்: இவை ஹராமானவையாகும்.
"எவர் எமது மர்ர்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்குகின்றாரோ அது மறுக்கப்படும்."

(புகாரி, முஸ்லிம்)

மற்றுமொரு அறிவிப்பில்:
"எவர் எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றைச் செய்கிறாரோ அது மறுக்கப்படும்" (முஸ்லிம்) என்ற நபிமொழிகள் இதற்குச் சான்றாகும்.

### 02. பித்அத்தின் வகைகள்

மார்க்கத்தில் உருவாகும் பித்அத்துக்களை நாம் இருவகையாகப் பிரித்து நோக்கலாம்.

அ. கொள்கை ரீதியான பித்அத்துக்கள் இதற்கு உதாரணமாக: ஜஹ்மிய்யா, மு.்.தஸிலா, ஷீஆ போன்ற பல்வேறுபட்ட வழிகெட்ட கூட்டங்களின் கொள்கை, கோட்பாடுகளைக் கூறலாம்.

ஆ. அல்லாஹ் விதிக்காத விதத்தில் அவனை வணங்கும் இபாதத் சார்ந்த பித்அத்துக்கள்:

இவ்வகைசார்ந்த பித்அத்துக்களைப் பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

i) எவ்வகையான அடிப்படையுமற்ற பித்அத்:

இஸ்லாம் அனுமதிக்காத பெருநாட்கள்: உதாரணமாக பிறந்ததின (மவ்லித்) கொண்டாட்டங்கள், அடிப்படையே இல்லாத தொழுகைகள், நோன்புகள் போன்ற இபாதத்துக்களைக் கூறலாம்.

ii) ஷரீஅத்திற்கு உட்பட்ட இபாதத்துக்களில் அதிகப் படுத்துவதால் ஏற்படும் பித்அத்: இது அஸ்ர் அல்லது ளுஹர் தொழுகைகளை ஐந்து ரக்அத்துக்களாக தொழுதல் பாங்கிற்கு முன் ஸலவாத் கூறல் போன்ற பித்அத்துக்களாகும்.

iii) இஸ்லாம் விதித்த இபாதத்தை ஷரீஅத் காட்டிராத பிரகாரம் செய்தல்.

உதாரணமாக: ஷரீஅத்தில் உள்ள திக்ருகளை சப்தமிட்டு கூட்டாகச் செய்தல், இஸ்லாம் விதித்த இபாதத்துக்களில் நபியவர்களின் நடைமுறையை மீறிச் செல்லும் அளவுக்கு எல்லை மீறி ஈடுபாடுகொள்ளல் என்பவற்றைக் கூறலாம்.

iv) இஸ்லாம் விதித்த ஒரு இபாதத்தை எவ்வித ஆதாரமுமின்றி சில குறிப்பிட்ட தினங்களில் செய்யவென்று தாமாக ஏற்படுத்திக் கொள்வது.

உதாரணமாக: ஷ.்.பான் நடுப்பகுதியில் உள்ள நாளில் நோன்பு இருக்க வேண்டுமென்று கூறுதல். நோன்பு என்பது ஷரீஅத்தில் உள்ளதுதான்; எனினும் இன்ன நாளில் நோன்பிருக்க வேண்டும் என்று கூற ஆதாரம் தேவை.

## 03. மார்க்கத்தில் உருவான பித்அத் பற்றிய சட்டம்

மார்க்கத்தில் உருவான அனைத்து பித்அத்துக்களும் வழிகேடேயாகும்.

"மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்படுபவை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். புதியவை அனைத்தும் பித்அத்துக்களாகும். அனைத்து பித்அத்துக்களும் வழிகேடாகும்." (ஆதாரம் : ஆபூதாவூத், திர்மிதி)

"எவர் எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்கு கிறாரோ அது நிராகரிக்கப்படும்."

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

"எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் செய்கிறாரோ அது நிராகரிக்கப்படும்."

(ஆதாரம்: முஸ்லிம்)

மேற்படி நபி மொழிகள் இதற்கு ஆதாரமாகும். இந்த நபிமொழிகள் மார்க்கத்தில் உருவாகும் அனைத்து பித்அத்துக்களும் வழிகேடுகள்; அவை மறுக்கப்பட வேண்டியவை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

வணக்க வழிபாடுகளிலும், கொள்கை கோட்பாடுகளிலும் புதுமையாகத் தோன்றியவை ஹராமானவையாகும். எனினும், பித்அத்தின் தன்மைக்கேற்ப அதுபற்றிய கண்டிப்பும் வித்தியாசப்படும்.

கப்ரில் அடங்கப்பட்டிருப்பவர்களிடம் நலவை நாடி கப்ருகளை வலம்வருதல், அவர்களுக்காக நேர்ச்சை செய்தல், பாதுகாவல் தேடல் என்பன தெளிவான (குப்ர்) இறை நிராகரிப்பாகும்.

பித்அத்துக்களில் சில ஷிர்க்கிற்கு இட்டுச்செல்லக் கூடியவையாக இருக்கும். உதாரணமாக: கப்ருகளைக் கட்டுதல், அங்கே தொழுதல், துஆச்செய்தல் என்பவற்றைக் கூறலாம்.

பித்அத்துக்களில் சில கொள்கை ரீதியான குற்றமாகும். கவாரிஜ்கள், கதரிய்யாக்கள், முர்ஜியாக்கள் போன்றோரின் ஷரீஅத்திற்கு மாறுபட்ட கொள்ளை கோட்பாடுகளைக் கூறலாம். அவற்றில் சில பாவமாகும். உதாரணமாக இபாதத்தில் இன்பம் காண துறவறப் போக்கைக் கடைப்பிடித்தல், நன்மைநாடி நோன்புடன் சூரிய வெப்பத்தில் நிற்றல், உடல் உறவில் உள்ள ஈடுபாட்டை நீக்க ஆண்மை நீக்கம் செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(பார்க்க : ஷாதிபியின் அல் இ.்.திஸாம் 2/37)

குறிப்பு :-

பித்அத்தை (பித்ஆ ஹஸனா, பித்ஆ செய்யிஆ) நல்ல பித்அத், கெட்ட பித்அத் எனச்சிலர் பிரிக்கின்றனர். இது தவறாகும். ஏனெனில் இது "எல்லா பித்அத்துக்களும் வழிகேடேயாகும்" என்ற கூற்றுக்கு நேர் முரணானதாகும். இப்படிக்கூறுவோர் நபியின் கூற்றுக்கு மாற்றமாக, இல்லை இல்லை எல்லா பித்அத்துக்களும் வழிகேடு அல்ல பித்அத்துக்களில் நல்லதும் இருக்கின்றது என்று கூறுகின்றனர். இது எப்படிச் சரியாகும்? நபி (ஸல்) அவர்களது "எல்லா பித்அத்துக்களும் வழிகேடாகும்" என்ற கூற்று சுருக்கமான வார்த்தையில் அதிக அர்த்தத்தைக் கொடுக்கும் விதத்தில் பேசும் நபி (ஸல்) அவர்களின் சிறப்பம்சத்தில் உள்ளதொன்றாகும். இது தீனின் மிக முக்கியமான அடிப்படையாகும். இது "எவர் நாம் மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்குகின்றாரோ அது மறுக்கப்படும்" என்ற நபி வாக்கிற்கு ஒப்பானதாகும். மார்க்கத்தில் புதிதாக எவ்வித ஆதாரமும் இல்லாமல் உருவாக்கப்படும் அனைத்தும் வழிகேடாகும். இப்படி உருவாகும் அமல்கள், கொள்கைகள், இரகசியமான, பரகசியமான வார்த்தைகள் அனைத்தையும் விட்டும் மார்க்கம் தூய்மையானதாக இருக்கிறது என ஹாபிழ் இப்னு ரஜப் (ரஹ்) கூறுகிறார்கள். (பார்க்க : "ஜாமிஉல் உலூம் வல்ஹிகம்" பக்கம் : 233)

பித்அத்தில் நல்லது உண்டு என்று கூறுவோருக்கு

தராவீஹ் தொழுகை பற்றி ( نعمت البدعة هذه )

(இது சிறந்த பித்அத்) என்ற உமர் (ரழி) அவர்களின் கூற்றைத் தவிர வேறு எந்த ஆதாரமும் கிடையாது.

அத்தோடு குர்ஆனை ஒன்று திரட்டியது, ஹதீஸ்களை எழுதி அவற்றை நூலுருப்படுத்தியது போன்ற பல விடயங்கள் புதிதாக உருவாக்கப்பட்டும் அவற்றை எமது முன்னோர்கள் (ஸலப்) எவரும் மறுக்கவில்லையே. இதுவே, பித்அத்தில் நல்லதும் உண்டு என்பதற்கான சான்றாகும் என்று கூறுகின்றனர்.

இங்கு கூறப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் ஷரீஅத்தில் அடிப்படையும் முன்மாதிரியும் உள்ளன என்பதே இவ்வினாவிற்கான சுருக்கமான விடையாகும்.

உமர் (ரழி) அவர்கள் "நி.:.மதில் பித்ஆ" எனக் கூறியது ஷரீஅத் அடிப்படையில் அல்ல. மாறாக அரபு பாஷை அடிப்படையிலாகும். மார்க்கத்தில் ஓர் அடிப்படையுள்ள விடயம் குறித்து பித்அத் எனக் கூறப்பட்டால் அது பாஷை ரீதியில் பேசப்பட்டதே அன்றி ஷரீஅத் ரீதியில் பேசப்பட்டதல்ல என்பதும், அடிப்படையே இல்லாதது குறித்துப் பேசப்பட்டால் அது ஷரீஅத் அடிப்படையில் பேசப்பட்டது என்பதும் எல்லோருக்கும் எளிதில் விளங்கும்.

குர்ஆனை ஒன்றுசேர்த்ததற்கு மார்க்கத்தில் ஓர் அடிப்படை உள்ளது. நபி (ஸல்) அவர்கள் நபித் தோழர்களுக்கு குர்ஆனை எழுதிப்பாதுகாக்கும் படி கூறியுள்ளார்கள். எனினும், நபியவர்கள் காலத்தில் தனித்தனியாக எழுதப்பட்டதை நபித்தோழர்கள் குர்ஆனின் பாதுகாப்பைக் கருதி ஒரே நூலாக ஒன்று திரட்டினர்.

தராவீஹ் தொழுகையைப் பொறுத்தவரை அதனை நபி (ஸல்) அவர்களே சில இரவுகளில் ஜமாஅத்தாக தொழுதுள்ளார்கள். பின்னர் இது தனது உம்மத்திற்கு பர்ளாக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சியே ஜமாஅத்தாகத் தொழுவதை விட்டு விட்டார்கள். அதன் பின் நபியின் காலம் தொட்டு உமர் (ரழி) அவர்கள் நபித்தோழர்களை ஒரே இமாமின் கீழ் ஒன்று திரட்டும் வரையில் தனித்தனியான சில இமாம்களின் கீழ் தொழுதே வந்தனர். எனவே, உமர் (ரழி) அவர்கள் தராவீஹை ஜமாஅத்தாக தொழ ஏற்பாடு செய்தது பித்அத் அல்ல. அதற்கு ஷரீஅத்தில் அனுமதி உள்ளது. அவர் புதிய ஏற்பாடு எனும் கருத்தில்தான் இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார்.

ஹதீஸ்களை எழுதியது விடயத்திலும் நபிகளாரின் ஏவல்வந்துள்ளது. சில நபித்தோழர்களுக்கு சில ஹதீஸ்களை எழுதுமாறு நபிகளாரே ஏவியுள்ளார்கள். ஹதீஸ்களை எழுதவேண்டாமென நபி (ஸல்) அவர்கள் கண்டித்தது குர்ஆனும் ஹதீஸும் ஒன்றாக எழுதப்பட்டால் பிற்காலத்தில் இரண்டும் இரண்டறக்கலந்து விடலாம் எனும்

அச்சத்திலேயாகும். ஆயினும், நபிகளாரின் மரணத்தின் பின் இந்த அச்சத்திற்கு இடம் இல்லாமல் போய்விட்டது. ஏனெனில், நபியுடன் குர்ஆன் அருளப்படுவது முடிந்து விட்டது. அவர்களின் வபாத்திற்கு முன்னரே அது உரிய முறையில் பதிவும் செய்து இனம் காணப்பட்டும் விட்டது. அடுத்ததாக ஹதீஸ்களை கால ஓட்டத்தில் அழிந்து விடும் நிலையில் இருந்து பாதுகாப்பதற்காக பதியும் பணியே எஞ்சியிருந்தது. இதன்பின் ஹதீஸ்களை பதிவதால் குர்ஆனுடன் கலந்துவிடும் எனும் அச்சத்திற்கு இடம் இல்லை என்பதால் இதில் முன்னோர்கள் உடன் பட்டனர்.

அல்குர்ஆனையும், அண்ணலாரின் சுன்னாவையும் அழிவிலிருந்து பாதுகாத்த அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக.

# முஸ்லிம்கள் வாழ்வில் பித்அத்தின் தோற்றமும், காரணிகளும்

**பித்அத் தோன்றிய காலம்:**

இமாம் இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: அறிந்து கொள்ளுங்கள்! பொதுவாகக் கல்வி மற்றும் வணக்க வழிபாடுகளில் காணப்படும் பித்அத்துகள் அல் குலபாஉர்ராஷிதூன்களின் இறுதிக் கால கட்டத்திலேதான் தோன்ற ஆரம்பித்தன.

"(எனக்குப் பின்) வாழக்கூடியவர்கள் பல கருத்து வேறுபாடுகளைக் காண்பர். அவ்வேளை எனது சுன்னத்தையும் நேர்வழிநடந்த கலீபாக்களின் வழிமுறைகளையும் பின்பற்றுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவூத், திர்மிதி)

கதர், இர்ஜாஉ, ஷீயா, கவாரிஜ் போன்ற பித் அத்துக்களே முதன் முதலில் தோன்றியவையாகும்.

உஸ்மான்(ரழி) அவர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கவாரிஜ் (ஹறூரிய்யா என்ற) பித்அத் தோற்றம் பெற்றது. இப்னு உமர், இப்னு அப்பாஸ், ஜாபிர்(ரழி) போன்ற ஸஹாபாக்களது இறுதிக்காலகட்டத்தில்

“கதரிய்யா” என்ற பித்அத் தோன்றியது. அதற்குச் சொற்ப காலத்துக்குப் பின்னர் “இர்ஜாஉ” என்ற பித்அத் தோற்றம் பெற்றது. ஜஹ்மிய்யாக்களைப் பொறுத்தவரை உமர் பின் அப்துல் அஸீஸ்(ரஹ்) அவர்களது மரணத்தின் பின் அதாவது தாபியீன்களது காலத்தின் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்றனர்.

இந்த பித்அத்துகள் எல்லாம் ஸஹாபாக்கள் இருக்கின்றபோதே ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் தோன்றின. ஸஹாபாக்கள் இவற்றைக் கண்டித்திருக்கிறார்கள். பின்னர் “இஃதிஸால்” என்ற முஃதஸிலாக்களின் பித்அத் தோன்றியது. தொடர்ந்து முஸ்லிம்கள் மத்தியில் பிரச்சினைகளும், கருத்து வேறுபாடுகளும் தோன்றின. மக்கள் பித்அத்துகள்பால் சாய ஆரம்பித்தனர். அதன் விளைவாகவே சிறந்த நூற்றாண்டுகள் என்று நபியவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட காலப்பகுதியைத் தொடர்ந்து தஸவ்வுப் (சூபிஸம்), கப்ருகள் மீது கட்டடம் கட்டுதல் போன்ற பித்அத்துகள் தோற்றம் பெற்றன. இவ்வாறு காலம் செல்லச் செல்ல பித்அத்துகளும் அதிகரித்துக் கொண்டே சென்றன.

(பார்க்க: “மஜ்மூஉல் பதாவா” 10/354)

**பித்அத் தோன்றிய இடம்:**

பல்வேறுபட்ட இஸ்லாமிய நாடுகளிலும் “பித்அத்” தோன்றி இருக்கின்றது.

இமாம் இப்னு தைமிய்யா(ரஹ்) கூறுகிறார்கள்:

நபித்தோழர்கள் குடியிருந்து அறிவொளிபரப்பிய பெரிய நாடுகள் ஐந்து: மக்கா, மதீனா, கூபா, பஸரா, ஷாம் ஆகியவையே அந்த ஐந்து நாடுகள். அதிலிருந்துதான் குர்ஆன், ஹதீஸ், பிக்ஹுக்கலை, வணக்க வழிபாடுகள் போன்ற மார்க்க விடயங்கள் ஏனைய பகுதிகளுக்குச் சென்றது. அதே நேரம் இப்பகுதிகளில் இருந்தே மார்க்க அடிப்படைகளைத் தகர்க்கும் பித்அத்துகளும் ஏனைய பிரதேசங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. அவற்றில் மதீனா மாத்திரம் விதி விலக்குப்பெறுகிறது. கூபாவில் ஷீயா, இர்ஜாஉ போன்ற பித்அத்துக்கள் தோன்றின. பஸராவில் கதரிய்யா மற்றும் மு.:.தஸிலாக்கள் தோன்றினர். ஷாமில் நாஸிபாக்களும், கதரிய்யாக்களும் காணப் பட்டனர். ஜஹ்மிய்யாக்களைப் பொறுத்தவரை அவர்கள் குராஸானின் ஒரு பகுதியில் தோன்றினர். பித்அத்துக்களில் மிக மோசமானவை ஜஹ்மிய்யாக்களது பித்அத்துக்களே. உஸ்மான்(ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரிவினையின் விளைவாக கவாரிஜிகள் தோன்றினர். மதீனாவைப் பொறுத்தவரை அங்கு எவ்வித பித்அத்துகளும் தோன்றவில்லை. இருந்தாலும், சில பித்அத்வாதிகள் அங்கு மறைமுகமாக இருந்தனர். குறிப்பாக அங்கு கதரிய்யாக்கள் சிலர் காணப்பட்டனர். அவர்களும்கூட அடக்கப்பட்டு இழிவானவர்களாகவே இருந்தார்கள். "தஜ்ஜால் மதீனாவில் நுழையமாட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: இப்னு ஹிப்பான், ஹாகிம்) ஹிஜ்ரி நாலாம் நூற்றாண்டு இமாம் மாலிக்(ரஹ்) அவர்களின் மாணவர்கள் காலம்வரை மதீனாவில் கல்வியும், ஈமானும் மிகைத்திருந்தது.

(பார்க்க: "மஜ்மூஉல் பதாவா" 20/300-303)

சிறந்த மூன்று நூற்றாண்டுகளிலும் மதீனாவில் வெளிப் படையாக எந்த பித்அத்துக்களும் காணப்படவில்லை. ஏனைய பிரதேசங்களில் இருந்து இஸ்லாத்தின் அடிப்படைகளில் பித்அத்துகள் தோன்றியது போன்று இங்கிருந்து தோன்றவில்லை.

**பித்அத்துகள் தோன்றியதற்கான காரணங்கள்.**

சந்தேகமின்றி பித்அத்துகளில் இருந்து ஈடேற்றம்பெற ஒரேவழி அல்குர்ஆனையும், சுன்னாவையும் பின்பற்றுவதே.

"நிச்சயமாக இது என்னுடைய நேரான வழியாகும். ஆகவே, இதனையே நீங்கள் பின்பற்றுங்கள். இன்னும் மற்றவழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை, அவனுடைய வழியிலிருந்து உங்களைப் பிரித்துவிடும்" (6:153)

"ரஸூல்(ஸல்) அவர்கள் எங்களுக்கு ஒரு நேரான கோட்டை வரைந்துகாட்டி, இதுதான் அல்லாஹ்வுடைய பாதை" என்று கூறினார்கள். பின்பு அந்த நேர்கோட்டின் இடதிலும் வலதிலுமாகப் பல கோடுகளை வரைந்து இந்தப் பல வழிகளிலும் ஷைத்தான் இருந்து கொண்டு அழைத்துக் கொண்டிருக்கின்றான் என்று கூறி (6:153) ஆம் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்."

அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத்(ரழி)

ஆதாரம் : அஹ்மத், இப்னு ஹிப்பான், அல்-ஹாகிம்

யார் அல்குர்ஆனையும், சுன்னாவையும் புறக்கணிக் கின்றனரோ, அவர்கள் வழிகெட்ட நூதன வழிகளில் செல்வது திண்ணம்.

**பித்அத்துகள் தோன்றுவதற்கான காரணிகள் பின்வருமாறு:**

அ) மார்க்கச் சட்டங்கள் பற்றிய அறியாமை:

ரஸூல் (ஸல்) அவர்களின் மறைவைத் தொடர்ந்து காலஞ் செல்லச் செல்ல அறிவு குறைந்து அறியாமை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனைப் பற்றி நபி(ஸல்) அவர்களும் எதிர்வு கூறிவிட்டார்கள்.

"(எனக்குப் பின்) வாழக்கூடியவர்கள் அதிகமான கருத்து வேறுபாடுகளைக் காண்பார்கள்."

(ஆதாரம்: அபூதாவூத், திர்மிதி)

"நிச்சயமாக அல்லாஹ் கல்வியை ஒரேயடியாகத் தனது அடியார்களிடமிருந்து எடுத்து விடுவதில்லை. மாறாக அறிஞர்களின் உயிர்களைக் கைப்பற்றுவது கொண்டு கல்வியை உயர்த்துகிறான். இறுதியாக எந்த அறிஞரும் இல்லாதபோது மக்கள் அறிவிலிகளைத் தங்கள் தலைவர்களாக ஆக்குவார்கள். மேலும் அவர்களிடம் பத்வா (மார்க்கத்தீர்ப்பும்) கேட்டுச் செல்வார்கள். அவர்களும் அறிவில்லாமல் தீர்ப்பு வழங்கி தாமும் வழிகெட்டுப் பிறரையும் வழிகெடுப்பார்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

பித்அத்தை எதிர்த்துப் போராடுவதானால் அது அறிவாலும், அறிஞர்களாலும் மாத்திரமே சாத்தியமாகும். அறிவும், அறிஞர்களும் இல்லாமல் போனால் பித்அத்துகள் தோன்றி வேகமாக மக்கள் மத்தியில் பரவ வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

ஆ) மனோ இச்சைக்குக் கட்டுப்படல்:

யார் குர்ஆனையும், சுன்னாவையும் புறக்கணிக்கிறாரோ அவர் தனது மனோஇச்சைக்குக் கட்டுப்படுகிறார் என்பது அர்த்தமாகும். "உமக்கவர்கள் பதில் கூறவில்லையானால், நிச்சயமாக அவர்கள் பின்பற்றுவதெல்லாம் தங்களின் மனோஇச்சைகளைத் தான் என்று உறுதியாக (நபியே!) நீர் அறிந்து கொள்வீராக! அல்லாஹ்விடமிருந்துள்ள நேர்வழியை அன்றி தன்னுடைய மனோ இச்சையைப் பின்பற்றியவனைவிடவும் வழிகெட்டவன் யார்?" (28:50) மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

"(நபியே!) தன்னுடைய (மனோ) இச்சையை(த் தான் வணங்கும்) தெய்வமாக எடுத்துக் கொண்டானே அவனை நீர் பார்த்தீரா? (அவன் வழிகெடுவதற்கு உரியவன் என்ற தன்) அறிவால் அல்லாஹ் அவனைத் தவறான வழியில் விட்டுவிட்டான். அவனுடைய செவியின் மீதும், அவனுடைய இதயத்தின்மீதும் முத்திரையிட்டு விட்டான். அன்றியும், அவனுடைய பார்வையின்மீதும் ஒரு திரையை ஆக்கிவிட்டான். அல்லாஹ்வுக்குப்பிறகு அவனுக்கு நேர்வழி காட்டுபவர் யார்?" (45:23)

ஆக, மனோ இச்சைக்கு வழிபடுவதன் விளைவாகவே பித்அத் தோற்றம் பெறுகிறது.

இ) தனிமனித வழிபாடும், மத்ஹப் வெறியும்:

தனிமனித வழிபாடும் மத்ஹப் வெறியும் சத்தியத்தைப்

பின்பற்றுவதை விட்டும் தடுக்கிறது.

"அல்லாஹ் இறக்கி வைத்ததைப் பின்பற்றுங்கள்" என அவர்களுக்கு கூறப்பட்டால் "இல்லை நாங்கள் எங்களுடைய மூதாதையர்களை எதன் மீது கண்டோமோ அதையே நாங்கள் பின்பற்றுவோம்" எனக் கூறுகின்றனர். (2:170)

இதுவே இன்று அதிகமான சூபியாக்களதும், கப்ரு வணங்கிகளதும், மத்ஹப் வெறியர்களதும் நிலைப்பாடாக இருக்கிறது.

ஈ) காபிர்களுக்கு ஒப்பாகுதல்:

பித்அத்தில் வீழ்த்துகின்ற காரணிகளில் இது மிக முக்கியமானது. அபூவாகிதில் லைதீ(ரழி) அறிவிக்கிறார்கள்: "ஒரு முறை நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஹுனைனிற்கு சென்றோம். அப்போது நாங்கள் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களாக இருந்தோம். அந்தக்காலத்தில் முஷ்ரிக்குகள் தங்குவதற்கும், தமது ஆயுதங்களைத் தொங்க விடுவதற்குமென்று "தாது அன்வாத்" என்று அழைக்கப்படும் மரங்களை ஏற்படுத்தி இருந்தனர். அப்படிப்பட்ட ஒரு மரத்தை நாங்கள் கடந்து சென்ற போது, அல்லாஹ்வுடைய தூதரே! அவர்களுக்கு இருப்பது போன்று எங்களுக்கும் ஒரு தாது அன்வாத்தை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டோம். இதனைக் கேட்ட நபியவர்கள், "அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ்வின் மீது

சத்தியமாக! பனூ இஸ்ராயீல்கள் மூஸா(அலை) அவர்களிடம் கேட்டது போன்றல்லவா நீங்களும் என்னிடம் கேட்கிறீர்கள். அவர்கள் மூஸா(அலை) அவர்களிடம் "மூஸாவே! அவர்களுக்கு தெய்வங்கள் இருப்பதைப்போல் எங்களுக்கும் ஒரு தெய்வத்தை ஆக்கி வைப்பீராக என்று கூறினார்கள்.(7:138) நீங்களும் உங்களுக்கு முன் சென்றவர்களின் வழி முறைகளைப் பின்பற்றுகிறீர்கள்" என்று கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

இந்த ஹதீஸிலிருந்து காபிர்களுக்கு ஒப்பாக வேண்டுமென்ற சிந்தனை பனூ இஸ்ராயீல்கள் இப்படி ஒரு படுமோசமான விடயத்தைக் கேட்டதற்குக் காரணமாக இருந்தது என்பதும், அவ்வாறே நபித்தோழர்கள் சிலரும் பரக்கத்திற்காக தமக்கும் ஒரு மரத்தை ஆக்கித் தருமாறு கேட்டதும் இதனாலேயே என்பதும் தெளிவாகின்றது.

இன்று நடப்பதும் இதுவே. பெரும்பாலான முஸ்லிம்கள் பித்அத், ஷிர்க் போன்றவற்றைச் செய்வதற்கு காபிர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதே முக்கிய காரணமாக இருக்கின்றது.

பிறந்தநாள் விழாக்கள் கொண்டாடுவது, குறிப்பிட்ட சில விடயங்களுக்காக வாரங்களுக்கும், நாட்களுக்கும் பெயர் வைத்து நிகழ்ச்சிகள் நடாத்துவது, மார்க்க நிகழ்வுகளை வைத்து விழாக்கள் எடுப்பது, சிலைகளையும்

நினைவுத்தூபிகளையும் ஏற்படுத்துதல், மரணித்த வீட்டில் நடக்கும் சடங்குகள், கப்ருகள் மீது கட்டிடம் கட்டுதல் போன்ற பல பித்அத்துகள் தோன்றியது காபிர்களைப் பின்பற்றியதனாலேயேயாகும்.

## பித்அத்வாதிகள் விடயத்தில் இஸ்லாமிய உம்மத்தின் நிலைப்பாடும், இவர்களுக்கு மறுப்புக் கூறுவதில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் போக்கும்.

**1. பித்அத்வாதிகள் பற்றிய அஹ்லுல் ஸுன்னாவின் நிலைப்பாடு.**

அஹ்லுல் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் தொன்று தொட்டு பித்அத்வாதிகளுக்கு மறுப்புத் தெரிவித்தும் அவர்களைக் கண்டித்துமே வருகின்றனர். இதுபற்றிய சில முன்னுதார ணங்களைப் பார்ப்போம்.

I. உம்முத் தர்தா(ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.

அபுத்தர்தா(ரழி) அவர்கள் கோபத்தோடு என்னிடம் வந்தார்கள். என்ன நடந்து விட்டது எனக்கேட்டேன். "அல்லாஹ்வின் மீது சத்தியமாக நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்ததில் கூட்டாகத் தொழுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் (சரியாகச்) செய்வதாக நான் காணவில்லை" என்று கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)

II. உமர் பின் யஹ்யா அவர்கள் தனது தந்தை அவரது தந்தையைத் தொட்டும் அறிவிப்பதைத் தான் கேட்டதாகப் பின்வருமாறு கூறுகிறார்:

"ளுஹர் தொழுகைக்குச் செல்லுமுன் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி) அவர்களின் வாசலில் அவர்களை எதிர்பார்த்திருப்போம். அவர்கள் வீட்டிலிருந்து வெளியிறங்கி பள்ளிவாசலுக்குப் புறப்பட்டால் அவருடன் சேர்ந்து நாங்களும் செல்வோம். அப்படி எதிர்பார்த்திருக்கும்போது அபூமூஸல் அஷ்அரீ(ரழி) அவர்கள் அங்கு வந்து அபூ அப்துர்ரஹ்மான் இன்னும் வெளிக்கிடவில்லையா? என்று கேட்டார்கள். நாம் "இல்லை" என்றதும் அவரும் எங்களுடன் அமர்ந்துவிட்டார். அவர்கள் வெளியே வந்ததும் எல்லோரும் எழுந்து கொண்டோம்.

அபூமூஸல் அஷ்அரி: அபூஅப்திர்ரஹ்மானே! நான் கொஞ்ச நேரத்திற்கு முன் பள்ளியிலே ஒரு காட்சியைக் கண்டேன். அது ஒரு நல்ல விடயம் போன்றே எனக்குப் பட்டது.

இப்னு மஸ்ஊத்: அது என்ன?
அபூமூஸா: எங்களுடன் வந்தால் நீங்களும் காண்பீர்கள். பள்ளியிலே ஒரு கூட்டத்தை நான் கண்டேன். அவர்கள் பல வட்டங்களாக இருந்து கொண்டு தொழுகையை எதிர்பார்த்திருக்கின்றனர். அந்த ஒவ்வொரு வட்டத்தில் உள்ளோரது கைகளிலும் சிறிய கற்கள் காணப்பட்டன. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒருவர் பொறுப்பாக இருந்து கொண்டு நூறு முறை "அல்லாஹு அக்பர்" என்று சொல்லுங்கள் என்று கூற, அவர்களும் நூறு முறை அல்லாஹு அக்பர் என்று கூறுகின்றனர்.

இப்னு மஸ்ஊத் : அவர்களுக்கு நீர் என்ன சொன்னீர்?
அபூ மூஸா: உங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்காமல் எதுவும் சொல்வதில்லை என்று இருந்து விட்டேன்.
இப்னு மஸ்ஊத்: அவர்களுடைய பாவச் செயல்களை எண்ணுமாறும் அப்படி எண்ணினால் நன்மைகள் வீணாகிவிடாது என்றும் நீர் அவர்களுக்குக் கூறவில்லையா?
அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத்(ரழி) பள்ளியை நோக்கிப் புறப்பட்டார். உடனே நாங்களும் புறப்பட்டோம். முடிவில் பள்ளியில் திக்ரு செய்து கொண்டிருந்த ஒரு குழுவை அடைந்தோம். அவர்களிடம்,
இப்னு மஸ்ஊத்: நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்களுடைய தீமைகளை எண்ணுங்கள் உங்கள் நன்மை வீணாகாமல் இருப்பதற்கு நான் உறுதியளிக்கின்றேன். முஹம்மத்(ஸல்) அவர்களது உம்மத்தினரே! நீங்கள் நாசமாய்ப்போக! நீங்கள் ஏன் இவ்வளவு அவசரமாக அழிவைநோக்கிச் செல்கிறீர்கள்? இதோ நபியவர்களின் தோழர்கள் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள். நபி(ஸல்) அவர்களது ஆடைகளும் இன்னும் இத்து விடவில்லை. அவர்களது பாத்திரங்கள் உடையவும் இல்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் இருக்கும் வழி நபியவர்கள் காட்டித் தந்த வழியைவிட சிறந்ததா? அல்லது வழிகேட்டின் வாயிலை நீங்கள் திறக்கிறீர்களா?
அவர்கள்: அபூ அப்திர்ரஹ்மானே! நாங்கள் நன்மையைத் தவிர வேறெதனையும் நாடவில்லை.

இப்னு மஸ்ஊத்: நன்மை நாடும் எல்லோரும் அதனை அடைந்து கொள்வதில்லை. நபி(ஸல்) அவர்கள் எல்லோருக்கும் கூறினார்கள் "ஒரு கூட்டம் வரும் அவர்கள் அல்குர்ஆனை ஓதுவார்கள். ஆனால், அது அவர்களது தொண்டைக்குழியைத் தாண்டிச் செல்லாது." அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்களில் அதிகமானோர் அவர்களைச் சார்ந்தோராக இருப்பீர்களோ தெரியாது என்று கூறிவிட்டு இப்னு மஸ்ஊத்(ரழி) சென்று விட்டார்கள்.
அம்றுப்னு ஸல்மா: நஹ்ர்வான் தினத்தில் அவர்களில் பெரும்பாலோர் கவாரிஜ்களோடு இருந்து கொண்டு எங்களைத் தாக்கினர். (ஆதாரம்: தாரமீ)

III. இமாம் மாலிக் பின் அனஸ்(ரஹ்) அவர்களிடம் ஒரு மனிதர்வந்து "நான் எவ்விடத்தில் இஹ்ராம் கட்டவேண்டும்? என்று கேட்டார்.

இமாம் மாலிக்(ரஹ்): நபி(ஸல்) அவர்கள் எவ்விடத்தில் இருந்து இஹ்ராம் கட்டி அவ்விடத்தை எல்லையாக ஆக்கித்தந்தார்களோ அங்கிருந்து இஹ்ராம் கட்டு.
வந்தவர்: அவ்விடத்தில் இல்லாமல் வேறுதூரமான இடத்திலிருந்து கட்டுவது பற்றி என்ன கருதுகிறீர்கள்?
இமாம் மாலிக்: அப்படிக் கட்டுவதை சரியென நான் காணவில்லை.
வந்தவர்: அப்படிக்கட்டுவதால் வெறுப்பதற்கு என்ன இருக்கிறது?

இமாம் மாலிக்: பித்னாவை நான் வெறுக்கிறேன்.
வந்தவர்: தூரத்திலிருந்து கட்டிச் செல்வது நன்மையானதல்லவா? அப்படியாயின் நல்ல விடயத்தில் என்ன பித்னா?
இமாம் மாலிக்: அல்லாஹ் கூறுவதைக் கவனி.

"எவர் (நபி(ஸல்)) அவர்களுடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களைச் சோதனை பிடித்துக் கொள்வதையோ அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பீடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்." (24:63) ரஸுல் (ஸல்) அவர்கள் காட்டித் தராத ஒன்றை நீ சிறப்பாகக் கருதுவதை விட பித்னா வேறென்ன இருக்கிறது?

(பார்க்க: "அபூ ஷாமாவின் அல்-பாஇஸ் அலா இன்காரில் பிதஇ வல் ஹவாதிஸ்" பக்கம்: 14)

இவை சில எடுத்துக்காட்டுகள். அன்றி அறிஞர் பெருமக்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் பித்அத் வாதிகளுக்கு மறுப்புத் தெரிவித்துக் கொண்டே இருக்கின்றனர். அல்ஹம்துலில்லாஹ்.

## 02. பித்அத் வாதிகளுக்கு மறுப்புக்கூறுவதில் அஹ்லுஸ் ஸு ன்னாவின் போக்கு

அல்குர்ஆன், சுன்னா அடிப்படையிலேயே பித்அத் வாதிகளுக்கு மறுப்புக் கூறுகின்ற அவர்களது போக்கு அமைந்திருக்கின்றது. அவர்களது சந்தேகங்களை அடையாளங்காட்டி அவற்றின் போலித்தன்மையை தெளிவுபடுத்துவர். மேலும் சுன்னாவைப் பற்றிப்பிடிப்பதன்

அவசியம் பற்றியும் பித்அத்துக்களில் இருந்து தவிர்ந்து கொள்வதன் இன்றியமையாமை பற்றியும் அல்குர்ஆன் சுன்னா ஒளியில் விளக்கமாக கூறுவர். அத்துடன் அவர்களுக்கு மறுப்புத்தெரிவிக்கும் விதத்தில் பல நூற்களை ஆக்கியுள்ளனர். அகீதா தொடர்பான நூற்களை ஷீஆ, கவாரிஜ், ஜஹ்மிய்யா, மு.்.தஸிலா, அஷாஇரா போன்றோரது ஈமான், அகீதா பற்றிய பிழையான கருத்துக்களுக்கு மறுப்புத்தெரிவிக்கின்றனர். தனித்தனியே அவர்களுக்கு மறுப்புத் தெரிவித்து நூற்களை எழுதியுள்ளனர். உதாரணமாக இமாம் அஹ்மத் அவர்களின் "அர்ரத்து அலல் ஜஹ்மிய்யா" (ஜஹ்மிய்யாக்களுக்கு மறுப்பு) என்ற நூலைக் குறிப்பிடலாம். இப்படிப்பட்ட மறுப்புக்களை இமாம்களான இப்னு தைமிய்யா, அவருடைய மாணவன் இப்னுல் கைய்யிம், அஷ்ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) போன்றோரது நூற்களிலும் காணலாம். பித்அத்வாதிகளுக்கு மறுப்புத் தெரிவிப்பதற்கென எழுதப்பட்ட நூற்கள் பல. அவற்றில் ஆரம்ப காலத்திலும் நவீன காலத்திலும் எழுதப்பட்ட சில நூற்களை உதாரணத்திற்குக் கீழே தருகிறோம்.

**பழைய நூற்கள்:-**

1. அல்- இ.்.திஸாம் - இமாம் ஷாதிபீ
2. இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம் - இமாம் இப்னு தைமிய்யா
3. இன்காருல் ஹவாதிஸ் வல்பிதஇ - இப்னு வழ்ழாஹ்.
4. அல்- ஹவாதிஸ் வல்பித.். - துர்தூஷீ
5. அல்- பாஇஸ் அலா இன்காரில் பிதஇ வல்ஹவாதிஸ்- அபூ ஷாமா

**நவீன காலத்தில் எழுதப்பட்ட சில நூற்கள்:-**

1. அல்- இப்தா.'. பீ மழாந்ரில் இப்திதா.'. அஷ்ஷெய்க் அலீ மஹ்பூழ்
2. அஸ்ஸுனன் வல் முப்ததஆத் அல் முதஅல்லிகா பில் .அஸ்காரி வஸ்ஸலவாத் - முஹம்மத் பின் அஹ்மத் அஷ்ஷுகைர்
3. அத்தஹ்தீர் மினல் பித.'. (பித்அத்துக்கள் ஓர் எச்சரிக்கை) - அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் பாஸ்

அல்லாஹ்வுடைய அருளால் இஸ்லாமிய அறிஞர்கள், நூற்கள், சஞ்சிகைகள், தொலைத்தொடர்பு சாதனங்கள், வெள்ளிமேடைகள், கருத்தரங்குகள், விரிவுரைகள் மூலமுமாக பித்அத்துக்களை மறுத்துரைப் பதோடு பித்அத்வாதிகளுக்கு மறுப்பும் தெரிவித்து வருகின்றனர். அல்ஹம்துலில்லாஹ்.

**நவீன பித்அத்துக்களுக்கு சில முன் உதாரணங்கள்**

1. நபி (ஸல்) அவர்களின் ஜனன தின விழா
2. சில புராதனச் சின்னங்கள், இடங்கள் போன்ற வற்றிடமும் மரணித்த (நல்ல)வர்களிடமும் அருளை எதிர்பார்த்தல்.
3. அல்லாஹ்வை நெருங்கும் நல்லெண்ணத்தில் இபா தத்துக்களில் செய்யப்படும் பித்அத்துக்கள்.

நபித்துவத்தின் காலத்தை விட்டும் மிகவும் பிந்திய காலம் என்பதனாலும், அறிவு குறைந்து பித்அத்தின்

அழைப்பாளர்கள் பெருகி, பழக்கவழக்கங்கள் நடை முறைகளில் காபிர்களுக்கு ஒப்பாகும் சிந்தனை மேலோங்கி இருப்பதனாலும் நவீன பித்அத்துக்கள் அதிகமாகக் காணபப்டுகின்றன.

மேலே நாம் குறிப்பிட்டிருக்கும் மூன்று வகையான பித்அத்துகள் பற்றி சற்று விரிவாகப்பார்ப்போம்.

1. ரபீஉல் அவ்வலில் நடைபெறும் நபி (ஸல்) அவர்களின் ஜனன தின விழா.

கிரிஸ்தவர்கள் கிரிஸ்மஸ் தினத்தைக் கொண்டா டுவதற்கு ஒப்பாகவே சில அறிவிலிகளும், வழிகெட்ட அறிஞர்களும் ஒவ்வொரு வருடமும் ரபீஉல் அவ்வலில் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். சிலர் இவ்விழாவைப் பள்ளிவாசல்களிலும் வேறு சிலர் வீடுகளிலும் இன்னும் சிலர் அதற்கென்று பிரத்தியேகமாக ஏற்பாடு செய்ய ப்பட்ட இடங்களிலும் கொண்டாடுகின்றனர். இவ்விழா ஒரு பித்அத்தாகவும், கிரிஸ்தவர்களுக்கு ஒப்பானதாகவும் இருக்கின்ற அதேவேளை இவ்விழாவில் பல ஷிர்க்கான அம்சங்களும் பாவமான காரியங்களும் இடம்பெறுகின்றன. அன்றைய தினத்தில் நபி (ஸல்) அவர்கள் விடயத்தில் அளவு கடந்து அவர்களை அழைத்து உதவி தேடுகின்ற அளவுக்கு உயர்த்தி எழுதப்பட்ட பாடல்களைப் படிப்பதை உதாரணமாகக் கூறலாம். நபி (ஸல்) அவர்களோ தன்னை அளவுகடந்து புகழ்வதை மிக வன்மையாக கண்டித் திருக்கிறார்கள்.

“மர்யமுடைய குமாரர் (ஈஸாவை) கிரிஸ்தவர்கள் அளவு கடந்து புகழ்ந்தது போன்று என்னை நீங்கள் புகழாதீர்கள். நான் அல்லாஹ்வுடைய ஓர் அடியான். எனவே, அல்லாஹ் வுடைய அடியார், அவனுடைய தூதர் என்று சொல்லுங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

சில வேளை மவ்லித் வாதிகள் அவர்களுடைய சபைக்கு நபி (ஸல்) அவர்கள் ஆஜராவதாகவும் நம்பு கின்றனர். அத்துடன் தபேலாக்களை அடித்து கூட்டாக இராகமிட்டு இந்தப்பாட்டு பாடுவது பாவமான காரியமாகும். சில வேளை இவ்விழாக்களில் ஆண் பெண் கலப்பும் ஏற்பட்டு இறுதியில் அசிங்கமான பாவச்செயல்கள் இடம்பெறவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இந்தப்பாவங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டு வெறும் ஒன்று கூடல், சாப்பாடு, சந்தோசம் என்பதோடு மட்டும் இதை நிறுத்திக் கொண்டாலும் அது ஒரு பித்அத்தே. ஏனெனில் “புதுமைகள் அனைத்தும் பித்அத்துக்கள் பித்அத்துக்கள் எல்லாம் வழிகேடே” என்று ஹதீஸ் கூறுகிறது. அத்துடன் ஏனைய விழாக்களில் நடக்கின்ற தவறுகள் பாவங்கள் காலப்போக்கில் இதிலும் நடக்க வாய்ப்பிருக்கின்றது.

இந்த விழாக்கள் பித்அத் என்று நாம் ஏன் சொல்கி றோமெனில் இதற்கு குர்ஆனிலோ சுன்னாலிலோ எந்த வித ஆதாரங்களும் இல்லை. மேலும் சிறந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஸலபுகள் யாரும் இதனைச்

செய்யவுமில்லை. மாறாக இது ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டிற்குப் பின் பாதிமிய்ய ஷீஆக்களால் உருவாக்கப்பட்டதாகும்.

இமாம் அபூ ஹப்ஸ் தாஜுத்தின் அல் பாகிஹானீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். றபிஉல் அவ்வலில் சில மனிதர்கள் மவ்லித் என்ற பெயரில் செய்து வருகின்ற அந்நிகழ்ச்சிக்கு மார்க்கத்தில் ஆதாரம் இருக்கிறதா? என்று அதிகமானோர் கேள்வி எழுப்புகின்றனர்.

அல்லாஹ்விடம் உதவி தேடியவனாகக் கூறுகிறேன். இந்த மவ்லிதிற்கு குர்ஆனிலோ சுன்னாவிலோ எவ்வித அடிப்படையையும் நான் காணவில்லை. இஸ்லாமிய உம்மத்தின் முன்மாதிரிகளாகத் திகழ்ந்த அறிஞர் பெருமக்கள் யாரும் இதனைச் செய்ததாகவும் எவ்வித சான்றுகளும் இல்லை. உண்மையில் இது போலிகளாலும், சில வயிறு வளர்ப்போராலும் உருவாக்கப்பட்ட ஒரு பித்அத்தே.
(பார்க்க: "றிஸாலத்துல் மவ்ரித் பீ அமலில் மவ்லித்")

இமாம் இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:- சில மக்கள் கிரிஸ்தவர்களுக்கு ஒப்பாகவோ அல்லது நபியவர்கள் மீது கொண்ட அன்பு, மரியாதையாலோ ஏற்படுத்தியிருக்கும் நபியவர்களின் ஜனன தின விழாவைப் பொருத்தவரையில் ஸலபுகள் எவரும் இதனைச் செய்யவில்லை. உண்மையில் நன்மை தரக்கூடியாதாக

இருந்திருந்தால் எங்களைவிட அவர்களே இதில் அதிக ஆர்வம் காட்டி இருப்பார்கள். ஏனெனில் எம்மைவிட அவர்கள் நபி (ஸல்) மீது அதிக அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். நன்மையின்பால் அதிக நாட்டம் கொண்டிருந்தனர். உண்மையிலே அவர்கள் மீது வைக்கின்ற மதிப்பும் மரியாதையும் அவர்களைப் பின்பற்றுவதிலும் அவர்களது சுன்னாவை உயிர்ப்பித்து அதை மக்களுக்கு மத்தியில் பரப்புவதற்காக உள்ளம், கரம், நாவு என்பவற்றால் போராடுவதிலுமே தங்கி இருக்கிறது. இது முன் சென்ற முஹாஜிர்களதும் அன்ஸாரிகளதும் அவர்களைத் துயர்ந்தோரதும் வழிமுறையாக இருந்தது.

(பார்க்க: "இக்திழாஉஸ் ஸிராதில் (மஸ்தகீம்" 6/615)

இந்த பித்அத்தை மறுத்து பல நூல்களும், ஆக்கங்களும் ஆரம்ப காலத்திலும், நவீன காலத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன.

இது பித்அத்தாகவும், நஸாராக்களுக்கு ஒப்பாகவும் இருக்கின்ற அதே நேரம் பெரியார்கள், தலைவர்களது ஜனன தினங்களைக் கொண்டாடவும் வழிகோலியது.

02. சில புராதனச் சின்னங்கள், இடங்கள் மூலமும் மரணித்த, உயிரோடு உள்ள சில (நல்ல) மனிதர்கள் மூலமும் தமக்கு பரக்கத் உண்டாகும் என நம்புதல் உயிருடனுள்ள மனிதர்களிடமிருந்தும் அருளை (பரக்கத்தை) எதிர்பார்த்தல்.

படைப்பினங்களைக் கொண்டு பரகத் தேடுவது புதிதாக

உருவாக்கப்பட்ட பித்அத் ஆகும். அது மட்டுமல்ல அது சிலைவணக்கத்தின் ஒரு பகுதியாகவும் அப்பாவி மக்களின் பணங்களைச் சூரையாட சில அயோக்கியர்கள் கையாளும் தந்திரவலையுமாகும்.

பரகத் தேடுவது என்றால் ஒரு விடயத்தில் நலவும், அதிகமாகவும் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகும்.

இவ்விடயத்தில் சக்தியுள்ளவன் அல்லாஹ் ஒருவனே. எனவே, அவனிடமே பரகத் தேடவேண்டும். படைப் பினங்கள் இதற்குச் சக்தி பெற மாட்டாது. எனவே இடங்கள், புராதனச் சின்னங்கள், உயிரோடும் உயிரற்றும் உள்ள மனிதர்களிடம் பரக்கத்தை எதிர்பார்ப்பது கூடாது. பரகத் தேடப்படுகின்ற இடமோ, சின்னமோ அல்லது மனிதரோ பரகத்தை வழங்கும் ஆற்றல் பெற்றவர் என்று நம்பினால் அது ஷிர்க் ஆகும். அல்லது அவற்றைத் தரிசிப்பதும், தொடுவதும், அவர்கள் தடவி விடுவதும் அல்லாஹ்விடமிருந்து பரகத்தைப் பெற்றுத்தரும் என்று நம்பினால் அது ஷிர்க்கிற்கும் இட்டுச் செல்லும் ஒன்றாகக் கருதப்படும். ரஸூல் (ஸல்) அவர்களது முடி, உமிழ்நீர் போன்றவற்றைக் கொண்டு ஸஹாபாக்கள் பரகத் தேடியது அது நபியவர்கள் உயிருடன் இருக்கும் போது அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய ஒரு சிறப்பம்சமாக இருக்கின்றதே தவிர அது பொது ஆதாரமல்ல. ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் மரணித்த பின் ஸஹாபாக்கள் அவர்களது வீட்டைக் கொண்டோ அவர்களது கப்ரைக்

கொண்டோ பரகத் தேடியதாக எந்த ஆதாரமும் கிடையாது. மேலும் அவ்லிய்யாக்கள் நல்லடியார்களது மகாம்களைக் கொண்டு பரகத் தேடுவதும் கூடாது. ஏனெனில் ஸஹாபாக்களும், தாபியீன்களும், அபூபக்கர், உமர் போன்ற பெரும் பெரும் ஸஹாபாக்களைக் கொண்டு அவர்கள் உயிருடன் இருக்கும் போதோ அல்லது மரணித்த பின்னரோ பரகத் தேடவில்லை.

மேலும் அவர்கள் ஹிராக் குகைக்கோ, தூர்ஸீனா வுக்கோ தொழுவதற்காகவும் அங்கிருந்து பிரார்த்திப் பதற்காகவும் செல்லவுமில்லை. இவையல்லாத நபிமார் களின் நாதாக்களின் மகாம்கள் இருப்பதாகக் கூறப்படும் இடங்களுக்கோ, மலைகளுக்கோ அவர்கள் செல்ல வில்லை.

அதே போல் மதீனாவிலும், மக்காவிலும் நபி (ஸல்) அவர்கள் தொழுத இடத்தை ஸலபுஸ் ஸாலிஹீன்கள் யாரும் தொட்டு முத்தமிடவில்லை. ரஸூல் (ஸல்) அவர்களது புனித பாதங்கள் பட்ட இடங்களையோ அவர்கள் தொழுத இடங்களையோ தடவுவதும்,தொட்டு முத்தமிடுவதும் கூடாது என்றால் ஏனையோரின் நிலை எம்மாத்திரம்? அப்படித் தொழுவதும், முத்தமிடுவதும் மார்க்கத்தில் இல்லாத ஒன்று என்பது அறிஞர்களால் திட்டவட்டமாக அறியப்பட்ட ஒரு விடயமாகும். (பார்க்க "இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம்" 2/795-802)

03. அல்லாஹ்வை நெருங்கும் எண்ணத்தில் இபாத்தத்துக்களில் செய்யப்படும் பித்அத்துக்கள்:

இன்று இபாதத்துக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பித்அத்துக்கள் ஏராளம். இபாதத்துக்ககளைப் பொறுத்தவரை ஆதாரம் இன்றி எதனையும் செய்ய முடியாது என்பது பொதுவிதி. ஆதாரம் இல்லாமல் செய்யப்படுமாக இருந்தால் அது பித்அத் ஆகும்.

“எமது கட்டளை இல்லாத ஒரு விடயத்தை யார் செய்கிறாரோ அது நிராகரிக்கப்படும்.” (முஸ்லிம்) என்ற ஹதீஸ் இதற்கு சான்றாகும். நாம் ஆரம்பத்தில் கூறியது போல் இபாதத்துக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பித்அத்துக்கள் ஏராளம். அவற்றில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

1. தொழுகையில நிய்யத்தை சப்தமிட்டுக் கூறுவது. உதாரணமாக ழுஹர் தொழுகையைத் தொழ நிய்யத் வைக்கும் போது (உஸல்லி பர்ழல் ழுஹ்ரி ........) என்று கூறுகின்றனர். இப்படிச் செய்வது நபி (ஸல்) அவர்கள் காட்டித்தராத பித்அத்தாகும்.
“நீங்கள் உங்கள் மார்க்க (வழிபாடு) பற்றி அல்லாஹ்வுக்கு அறிவிக்(க விரும்பு)கிறீர்களா? அல்லாஹ்வோ வானங்களிலுள்ளவற்றையும் பூமியிலுள்ளவற்றையும் நன்கு அறிகிறான். அன்றியும் அல்லாஹ் எல்லாப் பொருள்களையும் நன்கறிவான்.

என்று (நபியே!) நீர் கூறுவீராக". (49:16) என்று திருமறை கூறுகிறது.

நிய்யத்திற்குரிய இடம் உள்ளமே. அது உள்ளத்தோடு தொடர்புபட்ட ஓர் அமலேயன்றி, நாவோடு தொடர்புபட்டதல்ல.

2. தொழுகைக்குப் பின் செய்யப்படும் கூட்டு திக்ரு. தொழுது முடிந்த பின் நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த திக்ருகளைத் தனித்தனியே செய்வது தான் நபிவழியாகும்.
3. நிகழ்வுகள் ஆரம்பிக்கும்போதும், துஆ முடிந்த பின்பும், மரணித்தோருக்காகவும் சூரதுல் பாதிஹாவை ஓதுமாறு வேண்டுவது.
4. மரணித்தோருக்காக 30, 40 என்று கத்தம் ஓதுவது, அதற்காக விருந்து படைப்பது.
5. மிஃராஜ், ஹிஜ்ரத் போன்ற மார்க்கத்தோடு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்காக விழாக்கள் எடுப்பது. இப்படிச் செய்வதற்கு மார்க்கத்தில் எந்த அனுமதியும் இல்லை. ரஜப் மாதத்தில் விசேடமாக உம்றாச் செய்வதும் அதில் பிரத்தியோகமாக சுன்னத்தான தொழுகைகள் தொழுவதும் நோன்பு நோற்பதும் பித்அத் ஆகும். ரஜபைப் பொறுத்தவரை அதற்கென்று தனியான சிறப்புகள் எதுவும் கிடையாது.
6. ஸூபியாக்கள் செய்யும் பலவகையான திக்ருகள் ஏனெனில், அவை நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த திக்ருகளுக்கு முற்றும் முரணானதாகும்.
7. ஷஃபான் மாத நடு இரவில் நின்று வணங்குவதும்

அன்றைய தினம் நோன்பு நோற்பதும்

8. கப்ருகளைக் கட்டுவது, அவற்றைப்பள்ளிகளாக ஆக்குவது, பரகத்திற்காக அவற்றைத் தரிசிப்பது, மரணித்தோரைக் கொண்டு வஸீலாத் தேடுவது, அனைத்தும் பித்அத்துக்களாகும். மேலும் பெண்கள் கப்ருகளை ஸியாரத் செய்வதும் பித்அத்தாகும்.

ஏனெனில், கப்ருகளை ஸியாரத் செய்யும் பெண்களையும், அவற்றைப் பள்ளிகளாக ஆக்குவோரையம் அதன் மீது விளக்கேற்றுபவரையும் நபியவர்கள் சபித்துள்ளார்கள்.

**இறுதியாக நாம் சொல்வது**

பித்அத்துக்கள் குப்ரிற்கு அனுப்பப்படும் தபால்கள். அவை அல்லாஹ்வும் ரஸூலும் காட்டித்தராதவற்றை மார்க்கத்தில் அதிகரிப்பதாகும். பித்அத்துக்கள் பெரும் பாவங்களை விட படும் மோசமானவை. பெரும்பாவங்களால் ஷைத்தான் அடைகின்ற மகிழ்ச்சியை விட பித்அத்தால் அவன் அடைகின்ற மகிழ்ச்சி அதிகம். ஏனெனில் பாவஞ் செய்யக்கூடியவன் அதைப் பாவம் என்று அறிந்தே செய்கின்றான். பித்அத் செய்பவனோ அதனை அல்லாஹ்வின் பால் நெருக்கி வைக்கின்ற மார்க்கம் என்ற நிலையில் செய்வதால் தவ்பாச் செய்வதில்லை.

பித்அத்துக்கள் சுன்னத்துக்களை அழித்துவிடுவதோடு, சுன்னாவையும், சுன்னாவைக் கடைப்பிடிப்போரையும் பித்அத்துச் செய்வோருக்கு வெறுப்புக்குரியதாக்கி

விடுகிறது. அவை அடியானை அல்லாஹ்வை விட்டும் தூரமாக்கி அவனது கோபத்திற்கும் தண்டனைக்கும் ஆளாக்கி உள்ளங்களை மாசுபடுத்துகின்றன.

**பித்அத் வாதிகளோடு எப்படி நடந்து கொள்வது?**

பித்அத் வாதிகளுக்கு உபதேசம் செய்யும் நோக்கமின்றி அவர்களை சந்திப்பதும் அவர்களோடு அமர்வதும் கூடாது. ஏனெனில், அவர்களோடு உபதேச நோக்கமில்லாமல் பழகுகின்ற போது அவர்களது சிந்தனைக்கு அடிமைப் பட்டுவிட வாய்ப்பு இருக்கிறது.

பித்அத்வாதிகளை தடுப்பதும், அவர்களது பித் அத்துக்கள் பரவாமல் இருக்க் ஏற்பாடு செய்வதும் இஸ்லாமிய அறிஞர்களதும், முஸ்லிம் தலைவர்கள், பொறுப்புதாரிகளதும் கடமையாகும். அப்படிச் செய்யவில்லையாயின் அவர்களது பித்அத் பற்றியும் அவர்களது தீங்கு பற்றியும் மக்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். ஏனெனில், அவர்களால் இஸ்லாத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்து பாரதூரமானதாகும்.

இந்த இடத்தில் இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் அறிந்து கொள்வது அவசியமாகும். அதாவது பித்அத் வாதிகள், அவர்களது பித்அத்துக்களைப் பரப்புவதற்காக காபிரான நாடுகள் அவர்களுக்குப் பல வழிகளிலும், உதவியும், ஒத்தாசையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் இஸ்லாத்தை சீர் குலைத்து அழித்துவிடலாம் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

எல்லாம் வல்ல இறைவன் அவனுடைய கலிமாவை மேலோங்கச் செய்வானாக.

அவனது எதிரிகளின் சதியை அழித்து விடுவானாக!

( وصلى الله وسلم على نبينا محمد وآله وصحبه )

# كتاب التوحيد

تأليف فضيلة الشيخ
صالح بن فوزان الفوزان

ترجمه
الشيخ/ مبارك بن مسعود لبي (السلفي)

# இதுதான் தவ்ஹீத் كتاب التوحيد

**يشمل هذا الكتاب على:**

- الانحراف في حياة البشرية ولمحة تاريخية عن الكفر والإلحاد والشرك والنفاق
- أقوال وأفعال تنافي التوحيد أو تنقصه
- بيان ما يجب اعتقاده في الرسول صلى الله عليه وسلم وأهل بيته وصحابته
- البدع أنواعها وأحكامها

**இந்நூலில் உள்ளவை**

- மனித வாழ்வில் நெறிபிறழ்வும் குஃபுர், ஷிர்க், நிஃபாக் பற்றிய குறிப்புக்களும்.
- தவ்ஹீதை சீர்குலைக்கும் சொற்களும் செயல்களும்.
- நபி (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் விசயத்தில் நம்பிக்கை கொள்ளவேண்டிய அம்சங்கள்.
- பித்அத்தும் அதன் வகைகளும், சட்டங்களும்.

**طبع على نفقة فاعل خير**
**غفر الله له ولوالديه ولذريته**


المكتب التعاوني للدعوة بالروضة
بعطائكم ... يستمر عطاؤنا

حساب : ٢٠٤١٠٨٠١٠١٠٩٠٨٤ مصرف الراجحي
حساب : ٩٩٩٣٠٠٠٠٠١٩٠٠٠٢ بنك البلاد

مكتب الدعوة بالروضة

ردمك: ٩٧٨-٦٠٣-٩٠٠٢٠-٧-٩

مطبعة النرجس ت: ٢٣١٦٦٥٣ ف: ٢٣١٦٨٦٦